27 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com







நதி 27 | பாலம் 02 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 15, 2017

# வடமாகாண முதல்வரின் கனேடிய வருகை!



இலங்கையின் வடமாகாணசபை முதல்வர் C.V. விக்னேஸ்வரன் 2017 ஜனவரி 6இல் இரட்டை நகர உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும் வடக்கு கிழக்கு சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பாக நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ளவும் கனடாவிற்கு வந்துள்ளார். அவரை மார்க்கம் நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி, கனேடிய அரசின் சார்பில் நாடாளுமன்ற செயலாளர் Kamal Kerra உட்பட பலர் ரொறொன்ரோ விமான நிலையத்தில் வரவேற்றனர்.

முதல்வரின் வரவைத் தொடர்ந்து வடமாகாண அமைச்சர்கள் உட்பட 20 பேர் கொண்ட குழுவினரும் வடக்கு கிழக்கு சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பாக 2017 ஜனவரி 15, 16 மற்றும் 17 ஆம் திகதி திகதிகளில் ரொறொன்ரோவில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளக் கனடா வருகிறார்கள் என வடமாகாண சுகாதார அமைச்சர் பா. சத்தியலிங்கம் ஊடகவியலாளர்களுக்கு 2017 ஜனவரி 5இல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தாங்கள் மூன்று ஆண்டுகால சுகாதாரத்திட்டம் ஒன்றை தயாரித்து 2016 யூன் இல் இருந்து நடைமுறைப்படுத்துகிறோம். அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த மனிதவளம், நிதிவளம் மற்றும் ஆலோசனை போன்ற பல விடயங்கள் தேவை. இத்திட்டத்தின் அபிவிருத்திக்கு கல்வி அமைச்சின் பாரியபங்கு உள்ளது. வடமாகாணத்தில் உள்ள போரின் பாதிப்புக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பான சர்வதேச மாநாடாக இதைத் நடத்துகிறோம்.




இந்த மாநாட்டில் வடக்கு மாகாணத்தின் சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சர்கள் உட்பட அந்த அமைச்சர்களின் செயலாளர்கள், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர்கள், கிழக்கு மாகாணத்தின் சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட 20 பேர் கொண்ட குழுவினர் கலந்து கொள்வார்கள்

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)





























Via Bloor Condos by Tridel
575 Bloor St. E. & Parliament, Toronto.
TRIDEL
BUILT FOR LIFE
coming soon...
For more info.: HomeLife/GTA Realty Inc.
5215 Finch Ave. E. #203, Toronto ON M1S 0C2
416.321.6969
HOMELIFE
*Independently Owned & Operated




Selling or Buying
Exclusive
Luxury Condo in Richmondhill
1BR, 1Bath room, parking & Locker
Assignment sale $309,000
SOLD OUT
Detached 2 Storey
From $350,900. Only one hour From GTA.
Occupancy: Sep 2017
ESSO
On the Run
Esso Gas Station &Property
$625,000
COMING SOON
All Brick 50' Lots
from $411,900. Only one hour from Ajax,
Occupancy Nov 2017.
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng.(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract




Friends
MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# வடமாகாண...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

எனத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார். கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகளில் இருந்து துறைசார் நிபுணர்கள், நிதி வழங்கும் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்க்கம் நகரசபை 2012 ஆம் ஆண்டில் இருந்து தை 13, 14ஆம் திகதிகளில் தமிழர் மரபுரிமை நாட்களாகப் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இம்முறை இவ்விழா தை 14 மற்றும் 15ஆம் திகதிகளில் கொண்டாடப்படுகிறது. இவ் இரு நாள் நிகழ்வுகளில் வடமாகாண முதல்வர் கலந்துகொள்வதுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரட்டை நகர ஒப்பந்தத்தை வடமாகாண முதல்வர் C.V. விக்னேஸ்வரன், மார்க்கம் மாநகரசபை மேயர் பிராங் ஸ்கார்பிட்ரி (Frank Scarpitti) உடன் 2017 ஜனவரி 14இல் செய்யவிருக்கிறார். இந்த இரட்டை நகர உடன்படிக்கை முல்லைத்தீவுக்கும் மார்க்கம் நகரத்திற்கும் இடையே மேற்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பாக மார்க்கம் மேயர் பிராங் ஸ்கார்பிட்ரி கடந்த 2016 டிசம்பர் இல் விடுத்துள்ள அறிக்கையில் மார்க்கம் நகரம் பல்கலாசார மக்கள் அதிகம் வாழும் நகரம் ஆகும். இந்நகரின் வளர்ச்சிக்குத் தமிழ் மக்கள் அதிகம் பங்காற்றியுள்ளனர். ஜனவரியில் நடைபெறும் பொங்கல் விழா கொண்டாட்டங்களின் போது நட்பு நகர உடன்படிக்கையும் செய்யப்படும் என்றார். மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் லோகன் கணபதி மார்க்கம் நகரில் 30,000 இற்கு மேற்பட்ட தமிழர் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.



இத்துடன் வடமாகாணமுதல்வர் C.V. விக்கி-னேஸ்வரன் பிரம்ரன் நகரசபை மேயர் லிண்டா ஜெஃப்றி (Linda Jeffrey) உடனும் இன்னொரு முக்கியத்துவம் வாய்ந்த இரட்டை நகர ஒப்பந்தத்தை செய்யவுள்ளார். இந்த இரட்டை நகர உடன்படிக்கை வவுனியா நகருக்கும் பிரம்ரன் நகருக்கும் இடையே மேற்கொள்ளப்படுகிறது. இது தொடர்பாக பிரம்ரன் மேயர் விடுத்துள்ள அறிக்கையில் தாங்கள் இலங்கையின் வட-மாகாண சபையின் முதல்வரான மதிப்பிற்குரிய C.V. விக்கினேஸ்வரனை வரவேற்பதாகவும் அவருடன் பிரம்ரன் நகரசபை மண்டபத்தில் இலங்கையில் உள்ள வவுனியா நகருக்கும் பிரம்ரன் நகருக்கும் இடையேயான இரட்டை நகர ஒப்பந்தத்தில் 2017 ஜனவரி முற்பகு-தியில் கையொப்பம் இடப்போவதாகவும் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்



பிரம்ரன் நகரில் 20,000இற்கு மேற்பட்ட தமிழர் வாழ்வதாகவும் அவர்கள் ஒரு வளர்ந்துவரும் சமூகமாகவும் வியாபாரம், அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில் தீவிரமாகப் பங்கேற்று முன்னேறி வருவதாகவும் கூறினார். இவ்வுடன்படிக்கை பிரம்ரனுக்கும் வவுனியா நகருக்கும் இடையேயான பொருளாதார, வர்த்தக, கலாசார தொடர்புகளை மேம்படுத்த உதவும் என்றார்.

வடமாகாண முதல்வர் பிரித்தானியா சென்று அங்குள்ள கிங்ஸ்ரன் நகருடன் ஓர் இரட்டை நகர ஒப்பந்தத்தை ஏற்கனவே செய்துள்ளார். இந்த இரட்டை நகர உடன்படிக்கையானது யாழ்ப்பாணம் நகரத்திற்கும் கிங்ஸ்ரன் நகரத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகும்.

இரட்டை நகர உடன்படிக்கை பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. இதை இரட்டை நகர உடன்படிக்கை (Twin towns), சகோதாரி உடன்படிக்கை (Sister cities), கூட்டு நகர உடன்படிக்கை (Partnership towns), பங்காளி நகர உடன்படிக்கை (Part-ner towns) மற்றும் நட்பு நகர உடன்படிக்கை (Friendship towns) என்று எல்லாம் கூறுவா=ர்கள்.

இரண்டாம் உலகமகாயுத்தம் முடிவடைந்தபின் பாதிக்கப்பட்ட நகரங்களை மேம்படுத்தும் நோக்கங்களுடன் இவ்வாறான உடன்படிக்கைகள் ஐரோப்பிய நகரங்களால் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு நகரங்களுக்கு இடையேயான பொருளாதார, வர்த்தக, கலாசார மற்றும் சுற்றுலா துறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் முக-மாகவே இவ்வாறு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உலகின் முதலாவது இரட்டைநகர உடன்படிக்கை ஜேர்மனியில் உள்ள Paderborn நகரத்திற்கும் பிரான்ஸ் இல் உள்ள Le Mans நகரத்திற்கும் இடையே 836 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டதாக அறியப்படுகிறது.

1987இல் இந்திய அரசும் இலங்கை அரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்கீழ் இலங்கை அரசியல் அமைப்பிற்குக் கொண்டு வரப்பட்ட

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)



# வடமாகாண...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

திருத்தம் 13ஆவது திருத்தம். இந்தப் 13ஆவது திருத்தச்சட்டத்தின் வாயிலாக உருவாக்கப்பட்ட அதிகாரப்பரவலே மாகாண சபைகளாகும். இந்த மாகாணசபை முதல்வருக்கான அதிகாரங்களுக்குக் கீழ், உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களை கையாளும் அதிகாரம், மாகாணசபை முதல்வருக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. மாகாண சபையின் எல்லைக்குள் இருக்கும் மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும் கிராம சபைகள் போன்றவற்றின் முன்னேற்றத்திற்கு பிறரோடு ஒப்பந்தங்களைச் செய்ய இந்தப் 13ஆவது அரசியல் திருத்தச்சட்டம் மாகாணசபை முதல்வருக்கு அதிகாரம் வழங்குகிறது.

வடமாகாண முதல்வரான C.V. விக்கினேஸ்வரன் அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டிலுள்ள நகரங்களுடன் இரட்டை நகர ஒப்பந்தங்களை மேற்கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட வடமாகாண நகரங்களை முன்னேற்றத்திட்டமிட்டுள்ளார். இதன் வெளிப்பாடே யாழ்பாணம், முல்லைத்தீவு, வவுனியா போன்ற நகரங்கள் கிங்ஸ்ரன், மார்க்கம், பிறம்ரன் போன்ற நகரங்களுடன் மேற்கொள்கின்ற இரட்டை நகர உடன்படிக்கையாகும்.





இரட்டை நகர உடன்படிக்கைகள் சம்பந்தமான நிகழ்வுகளை கனேடியத்தமிழ் தேசிய அவை, கனேடியத் தமிழர் சமூக அமையம் உட்பட பிரம்ரன், ட்டுரம், மிசிசாகா, மார்க்கம் மற்றும் ஒட்டாவா தமிழ் அமைப்புக்கள் முன்னின்று ஒழுங்குபடுத்துகின்றன. அதே போல் வடக்கு கிழக்கு சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பாக நடைபெறும் சர்வதேச மாநாட்டை கனேடியத் தமிழர் பேரவை, கனேடிய தமிழர் மருத்துவ சங்கம், சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு (கனடா) மற்றும் பிரித்தானியாவை சேர்ந்த தமிழ் மருத்துவ அறிஞர் நிறுவனம் முன்னின்று ஒழுங்குபடுத்துகின்றன.

# ஒன்ராறியோ மாகாணத்தின் முதல்வருடன் வடமாகாண முதல்வர்

ஒன்ராரியோ முதல்வர் மேன்மைதங்கிய கத்தலின் வின் அவர்கள் வடமாகாண முதலமைச்சர் மேன்மைதங்கிய நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் அவர்களை தனது அலுவலகத்தில் 2017 ஜனவரி 11இல் வரவேற்றதோடு ஒரு காத்திரமான சந்திப்பையும் மேற்கொண்டார். பொருளாதார அபிவிருத்தி, பெண்களை வலுவூட்டல், நிறுவன நல்லாட்சி மற்றும் பொதுசன சேவை நிறுவனங்களின் துறைசார் விருத்திகள் உட்பட ஒன்ராரியோ - வடமாகாண உறவின் முகிழ்வையும் ஒத்துழைப்பையும் நல்குவதுடன் அதனை மேலும் வலுப்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)




அம்மா
நகை அடைவு மாடம்



AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்

* உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.

2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர் அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown 416-921-0034
ammapawnbroker@gmail.com

1.5% முதல் 2% $1000ற்கு மாதம் $20 மட்டுமே (Month)

* நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்
* அம்மாவுக்கு நிகரான சேவை அம்மா நகை அடைவு மாடமே
* உங்கள் பழைய நகைகளை அதி உயர் பெறுமதிக்கு எம்மிடம் விற்றும் கொள்ளலாம்
* கனடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000
Everyone Who Funds A Mortgage With US Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
வோக் இன்
சனி 9.00 - 5.00 மணிவரை



416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 08001428

Cell : 416-624-4843

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4   Toll Free : 1-877-396-3487
Brokerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3   Office Phone : 416-391-3232

# "உலகளாவிய ரீதியில் வாழ்ந்து வரும் தமிழர்கள் தாயகத்தினருடன் இணைந்து உழைப்பது அவசியம்"

## - வடமாகாண முதல்வர் திரு. விக்கினேஸ்வரன்

**- வீரகேசரி மூர்த்தி -**

"கனடாவில் தமிழ் ஒலிப்பதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தாயகத்துக்கு வெளியே தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் நாடு கனடா. நீங்கள் கனடாவில் வாழ்ந்தாலும் தாயக விவகாரங்களில் உங்களுக்கு இருந்து வரும் அக்கறையினையும், உங்கள் உடன் பிறப்பினருக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வத்தினையும் நான் மிகவும் மதிக்கின்றேன். கனடாவில் வாழும் நீங்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்துள்ளமைக்கு உடன்படிக்கை மூலம் உதவுவது எனது பணியாகும். உங்களிடம் இருந்து சமூக, பொருளாதார ரீதியிலான உதவிகளை எதிர்பார்க்கின்றோம். முல்லை மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம். குறிப்பாக அங்குள்ள மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கான வசதிகளையும் செய்து கொடுக்கலாம். உலகளாவிய ரீதியில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தாயகத்துடன் தொடர்பு வைத்திருப்பது அவசியம். எல்லாமே பறிபோகும் நிலையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியது அத்தியாவசியமாகும்." கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்காபறோ கெனடி வீதியிலுள்ள "டெல்ரா" ஹோட்டலில் நடைபெற்ற தமிழ் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு வடமாகாண முதல்வர் திரு. விக்கினேஸ்வரன் அவர்கள் இவ்வாறு கூறினார்.





திரு. விக்னேஸ்வரனுடன் இரட்டை நகர உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ள மார்க்கம் மாநகர சபை உறுப்பினரான திரு. லோகன் கணபதியும், திரு. விக்கினேஸ்வரனுடன் இணைந்து செயலாற்றி வரும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த திட்டமிடல் ஆலோசகரான திரு. நிமலன் கார்த்திகேயன், பற்றிக் நிரஞ்சன், ஜோன்சன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். திரு. விக்கினேஸ்வரன் அவர்கள் தொடர்ந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினார்:

"கனடாவில் கியூபெக் மாகாணத்தில் பிரெஞ் மக்களின் ஆட்சி எதுவித பிரச்சினைகளும் இன்றி தனித்துவமாக இயங்கி வருகின்றது. அதுபோலவே இலங்கையில் தமிழ் மக்களாகிய நாமும் எதுவித பிரச்சினைகளும் இன்றி வாழ்வதற்குச் சமஷ்டி ஆட்சி முறையினைக் கோரி வருகிறோம். அது பிரிவினையை ஏற்படுத்துமே தவிர நிரந்தர தீர்வினை ஏற்படுத்தாது என அரசாங்கம் கூறி வருகின்றது. சமஷ்டி ஆட்சிப் பிரிவினையை ஏற்படுத்தாது என்பதனை நாம் அவர்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். சமாதானத்தையும், நல்லிணக்கத்தினையும் பெறும் வழிகள் குறித்து நாம் ஆராய வேண்டும். அது நம் நாட்டுக்குப் பொருந்துமா என அவர்களைச் சிந்திக்கத் தூண்டுவது எமது நோக்கம். 1948ஆம் ஆண்டு காலத்தில் தமிழ் மக்கள் நாடெங்கும் பரந்து வாழ்ந்து விவசாயம் செய்து வந்தார்கள். ஆனால் 1956ஆம் ஆண்டு முதல் அந்நிலை மாறி விட்டது. வன்முறைகள் மூலம் அவர்கள் வெளியேற்றப்பட்டு வடபகுதிக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதேபோன்ற நிலை இன்று கிழக்கு மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அங்கு சிங்கள மக்களை அதிகளவில் குடியேற்ற அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது."

'தளிர்' ஆசிரியர் சிவமோகன் "மொழி சார்ந்த இணைப்பினை ஏற்படுத்த முடியுமா?" எனக் கேட்டார். அதற்குப் பதிலளித்த திரு. விக்னேஸ்வரன் "அவர்கள் எதனையும் சந்தேகக் கண்ணோடு நோக்கும் அரசு. அதற்கும் பல்வேறு விதமான தடங்கல்களை மேற்கொண்டு வருகின்றது. நாம் மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்றால் அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை ஒன்றிணைப்பது எமது முக்கிய நோக்கமாகும்" எனப் பதிலளித்தார்.

"வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் அங்கு முதலீடு செய்யும் பட்சத்தில் அவர்களது முதலீடுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படுமா?" எனக் கேள்வி கேட்ட போது "ஆம், நிச்சயமாக உத்தரவாதம் வழங்கப்படும். முதலீடு தனிப்பட்ட ரீதியில் இல்லாது குறிப்பிட்ட ஓர் அமைப்பின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. அது பற்றிய மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் இங்கு என்னுடன் வருகை தந்துள்ள உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலாம்" என்றார்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிராகரிக்கப்படும் போது எத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பது பற்றிக் கூற முடியுமா? எனக் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையில் "கடந்த அரசுடன் நாம் பேச முடியாத ஒரு நிலை இருந்தது. நாம் கொண்டு சென்ற தீர்மானங்களைப் பார்வையிட்ட திரு. மஹிந்த ராஜபக்ஷ கட்டாயம் செய்யலாம் என்றார். வடபகுதியிலிருந்த இராணுவத் தளபதியை மாற்ற முடியுமா? எனக் கேட்ட போது ஆம், மாற்றலாம். ஆனால் அவரது பதவிக் காலம் முடியும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்றார்.

சிறையில் இருக்கும் தமிழ் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் மைத்திரியைக் கேட்டதற்கு "சிங்களப் பத்திரிகைகள் ஏற்கனவே என்னைத் "துரோகி" என எழுதி வருகின்றனர். தற்போது சிறையிலுள்ள தமிழ் கைதிகளை விடுவித்தால் அவர்கள் என்னைப் பற்றி மேலும் தாக்கி எழுதுவார்கள்" என்றார். எனவே அவர்களிடம் நாம் எதனையும் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தான் இருந்து வருகிறது. எமது தலைவர் திரு. எஸ். ஜே. செல்வநாயகம் அவர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத காரணங்களை முன்வைத்து 1972ம் ஆண்டு தனது பதவியை இராஜினாமா செய்தார். அவர்கள் அதனைக்கூடப் பெரிது படுத்தாது அவரது தொகுதிக்கான தேர்தலை 1975ம் ஆண்டு தான் நடத்தினார்கள். இவ்வாறு அவர்கள் எம்மை வெளியேற்றி விட்டுத் தாம் நினைத்ததைச் செய்வார்கள். அதனால் நாம் போராடித் தான் எதனையும் பெறக்கூடிய சூழ்நிலை இருந்து வருகின்றது. அத்துடன் வெளிநாடுகளின் ஆதரவுடன் அவர்களை வற்புறுத்த வேண்டும். அவர்கள் மூலம் நாம் வெளிநாட்டு உதவிகளைக் கூடப் பெற முடியாத நிலை இருந்து வருகின்றது. அதனால்தான் நாம் Board of Investment அமைப்பின் ஊடாக வெளிநாடுகளின் உதவிகளைப்பெற நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ளோம்" என்றார்.

நான் கனடா வருவதற்கு 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாத இறுதியில் முயற்சி செய்தேன். ஆனால் கனடா அரசு எனக்கு விசா தர மறுத்து விட்டது. செப்ரெம்பர் மாதம் வடமாகாண முதலமைச்சர் பதவிக்

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE Tel: 416-289-7514



OPEN DAILY 8 am – 11 pm

Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனேடிய மத்திய அரசின் புதிய அமைச்சரவை

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தனது அமைச்சரவையில் 2017 ஜனவரி 10இல் மாற்றம் செய்துள்ளார். இதன்படி மூன்று புதிய அமைச்சர்கள் பதவியேற்றுள்ளனர். ஏற்கனவே இருந்த மூன்று அமைச்சர்கள் தமது அமைச்சுப் பதவியை இழந்தனர், மேலும் மூவர் வேறு அமைச்சிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.




குவிபெக் மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 46 வயது நாடாளுமன்ற உறுப்பினர் Francois - Philippe Champagne சர்வதேச வர்த்தக அமைச்சராகப் பதவி யேற்றுள்ளார். இவர் இதற்கு முன்னர் நிதி அமைச்சரின் நாடாளு மன்றச் செயலாள ராகப் பணியாற்றியவர்.

ஒன்ராரியோவின் Burlington தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் McGill மற்றும் Oxford பல்கலைக்கழகங்களின் பட்டதாரியுமான 29 வயது Karina Gould ஜனநாயக நிறுவனங்கள் அமைச்சராகப் பதவி யேற்றுள்ளார். இவரே கனேடிய சரித்திரத்தி லேயே அமைச்சராகப் பதவி யேற்ற மிக இளவயதுப் பெண்மணி ஆவர்.



ரொறொன்ரோவின் மேற்குப்பகுதியில் உள்ள York South தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் 16 வயதில் சோமாலியாவில் இருந்து கனடாவிற்கு அகதியாக வந்த வருமான 41 வயது Ahmed Hussen குடிவரவு அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். இவரே சோமாலியாவில் பிறந்தவர்களில் முதலாவ தாகக் கனேடிய நாடாளுமன்றத்திற்குத் தெரிவானவர். தற்போது இவரே சோமா-லியாவில் பிறந்தவர்களில் முதலாவது கனேடிய அமைச்சராகிறார். அத்துடன் இவர்தான் ஜஸ்ரின் ரூடோவின் அமைச்சர வையில் பதவி வகிக்கும் முதலாவது கறுப்பு இன அமைச்சருமாவார். இவர் York மற்றும் Ottawa பல்கலைக்கழகங் களின் பட்டதாரியு மாவார்.

இந்த மூன்று புதிய அமைச்சர்களும் 2017 ஜனவரி 10 இல் பதவிப் பிரமாணம் செய்து தமது பதவியை ஏற்றனர். Stephane Dion, John McCallum மற்றும் MaryAnn Mihychuk தமது அமைச்சுப் பதவியை இழக்கின்றனர். இவர்களில் Stephane Dion தனது 21 வருடகால அரசியல் வாழ்க்கையை விட்டு விலகி ஐரோப்பிய ஒன்றியம் அல்லது வேறு ஐரோப்பிய நாடு ஒன்றிற்கு கனேடியத் தூதுவராகச் செல்லலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. John McCallum உம் சீனாவிற்கான கனேடியத் தூதுவராகப் பதவி ஏற்கிறார். MaryAnn Mihychuk தனது அமைச்சுப் பதவியை இழந்து தொடர்ந்தும் மனிற்ரோபா மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளு மன்ற உறுப்பினராக பதவி வகிப்பார்.

இவர்களைவிட ஏற்கனவே அமைச்சர்க ளாக இருந்த மூன்று அமைச்சர்கள் புதிய அமைச்சிற்கு மாற்றம் செய்யப்பட்டுள் ளனர். சர்வதேச வர்த்தக அமைச்சராக இருந்த Chrystia Freeland தற்போது வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற் றுள்ளார். இவர் கனேடிய ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக உடன்படிக்கையைக் கைச்சாத்திட முக்கிய காரணமாக இருந்தவர்.

ஜனநாயக நிறுவனங்கள் அமைச்சராக இருந்த Maryam Monsef தற்போது பெண்களின் அந்தஸ்திற்கான அமைச்ச ராகப் பதவியேற்றுள்ளார். பெண்களின் அந்தஸ்திற்கான அமைச்ச ராக இருந்த Patty Haydu தற்போது வேலை வாய்ப்பு, பணிப்பிரிவுவளர்ச்சி மற்றும் தொழிலாளர்துறை அமைச்சராகப் பதவி யேற்றுள்ளார்.

இந்த அமைச்சரவை மாற்றத்தைத் தொடர்ந்தும் ஜஸ்ரின் ரூடோவின் அமைச் சரவையில் 15 பெண்களும் 15 ஆண்க ளும் அமைச்சர்களாக இருக்கின்றனர். பதவி விலகும் மூன்று அமைச்சர்களது சராசரி வயது 63. ஆனால் பதவி ஏற்கும் புதிய மூன்று அமைச்சர்களது சராசரி வயது 39. இதனால் கனடாவின் தற்போ-தைய அமைச்சரவையின் சராசரி வயது 52 இல் இருந்து 50 ஆக குறைந்துள்ளது.

அமெரிக்க அரசியலின் மாற்றம், Stephane Dion போன்ற மாசுக்கட்டுப்பாட்டில் ஆர்வ முள்ளவரும், கல்வியலாளரும், அமை-தியான சுபாவம் கொண்டவருக்கு வெளி விவகார அமைச்சுப்பதவி வகிக்க ஏற்புடை யது அல்ல. இதனாலேயே இவர் பதவி வகித்த வெளிவிவகார அமைச்சு தற்போது பத்திரிகையாளராக இருந்து அரசியல் வாதியாக வந்தவரும், மிகவும் சிறந்த பேச்சாளரும், திறமையாகப் பேரம்பேசி பேச்சு வார்த்தைகளை நடத்துபவரும் கனடாவின் உறுதியான பன்னாட்டு வர்த்தக சார்புநிலையைத் தீவிரமாக ஆதரிப்பவரு மான Chrystia Freeland இற்கு வழங்கப்பட்டுள்ளது என CBC ஊடகம் தெரிவிக்கிறது.

## "உலகளாவிய...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கான தேர்வு இடம் பெற்றது. அதில் ஒரு இலட்சத்து முப்பத்தி மூவாயிரம் வாக்கு களின் மூலம் பதவியைப் பெற்றுப் பணி யாற்றி வருகின்றேன். தமிழ் மக்கள் சுதந் திரமாக வாழ வழிவகை செய்ய வேண்டும் என்பதே எமது குறிக்கோள் என அவர் கூறினார்.

மார்க்கம் மாநகர சபைக்கும் முல்லைத் தீவுக்கும் இரட்டை நகர ஒப்பந்தத்தினை உருவாக்கி உதவிய மார்க்கம் மாநகரசபை உறுப்பினரான லோகன் கணபதி உரை யாற்றிய போது "இந்த இரட்டை நகர உடன்படிக்கை சம்பந்தமாக நாம் மார்க்கம் மாநகர சபையில் கடந்த வருடம் நவம்பர் 28ஆம் திகதி விவாதித்து டிசெம்பர் 2ஆம் திகதி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. முல்லைத்தீவு மாவட்டம் நட்பு நகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தமான உடன்படிக்கை தைப் பொங்கல் தினமான ஜனவரி 14ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நடவடி க்கையாக மேற்கொள்ளப்பட இருக்கிறது. அதில் மார்க்கம் மாநகரசபை மேயர் வண. பிராங் ஸ்கார்பிட்ரி அவர்களும் திரு. விக்கி-னேஸ்வரன் ஐயாவும் கைச்சாத்திடுவார் கள்" எனக் கூறினார்.

MORTGAGE PROBLEM?... Too Much Debt?... privacy guaranteed...
$50,000...$100,000...$500,000...$750,000... $1.75 Million... funds for
MORTGAGE ALLIANCE
- Refinance & pay off loans, credit cards, 2nd mortgage...
- Consolidate 1st and 2nd mortgages...
- Purchase properties - Residential & Commercial...
- Construction Financing...
Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 10002312
647-922-5704
Twitter @OK_Mortgages


# மார்க்கம் மாநகர சபை மண்டபத்தில் கோலாகலமாக இரு தினங்கள் கொண்டாடப்படும் பொங்கல் விழா!

- வீரகேசரி மூர்த்தி -

மார்க்கம் மாநகர சபையில் பொங்கல் விழாவை 14ஆம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணி முதல் மாலை வரையும், மறுநாள் 15ஆம் திகதி பிற்பகல் 2 மணி முதல் மார்க்கம் மாநகர சபைக்கு அருகே உள்ள "பிளேற்றோ" கலையரங்கி லும் இருநாள் விழாவாக கோலாகலமாக கொண்டாடப்பட இருக்கிறது. மார்க்கம் மாநகர சபை உறுப்பினரும், பொங்கல் விழாவினை 2012ஆம் ஆண்டு முதல் கொண்டாட ஏற்பாடு செய்த பெருமைக் குரியவருமான திரு. லோகன் கணபதியும், ஏற்பாட்டுக் குழுவினரும் மற்றும் தமிழ் மரபியல் மைய உறுப்பினர்களும் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இப்பொங்கல் விழா நிகழ்ச்சிகளில் இலங்கையில் இருந்து வருகை தந்துள்ள வட மாகாண முதல்வர் மதிப்பிற்குரிய திரு. விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தி னராகக் கலந்து கொள்வது மகிழ்ச்சிக் குரிய விடயமாகும். அத்துடன் அவரும் மார்க்கம் மாநகர மேயர் வணக்கத்துக் குரிய பிராங்க் ஸ்காபிற்றியும் பொங்கல் தினமான சனிக்கிழமை அன்று மாலை ஆறு மணிக்கு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த "இரட்டை நகர ஒப்பந்தத்தில்" கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெறும். ஈழத்திலுள்ள முல்லைத்தீவு நகரினை அபி விருத்தி செய்யும் வகையிலும் அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத் தும் வகையிலும் இங்குள்ள தமிழ் தொழில் அதிபர்கள் அங்கு முதலீடுகளை செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்ட திட்டமே இந்த உடன்படிக்கையாகும்.

கனடா அரசியலில் முதலில் தெரிவு செய் யப்பட்ட ஈழத் தமிழர் என்ற பெருமைக் குரியவரும், மார்க்கம் மாநகர சபையின் ஏழாம் வட்டார உறுப்பினராகத் தொடர்ந்து பத்தாண்டு காலம் பணியாற்றி வருபவரு மான திரு. லோகன் கணபதி இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளார். இவர் இலண்டன் மாநகருக்குச் சென்று அங்கு வந்திருந்த வடமாகாண முதல்வர் திரு. விக்கினேஸ்வரனை சந்தித்து மேற்படி இரட்டை நகர உடன்படிக்கை சம்பந்தமாக விரிவாக உரையாடி இதற்கான ஒழுங்கு



களைச் செய்திருந்தார். வருடா வருடம் மார்க்கம் மாநகர சபை மண்டபத்தில் பொங்கல் விழாவினைக் கோலாகலமாகக் கொண்டாடும் திரு. லோகன் கணபதி அவர்கள் இம்முறை பொங்கல் விழாவன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த இரட்டை நகர ஒப்பந்தத்தினை மேற் கொள்ள ஏற்பாடு செய்துள்ளார்.

சனிக்கிழமை காலை பத்து மணிக்கு ஆரம்ப நிகழ்ச்சியாக தமிழர்களின் பாரம் பரிய கலைகளான பரத நாட்டியம், சிலம் பாட்டம், யோகக் கலை பட்டறைகள் இடம் பெறும். நண்பகல் ரொறொன்ரோவில் வாழ் ந்துவரும் ஓவியக் கலைஞரான திரு. கருணாவின் ஓவியக் கண்காட்சி இடம் பெறும். பிற்பகல் 3 மணிக்கு தமிழகத்தில் இருந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் "கணையாழி" சஞ்சிகையின் இம்மாத கனடா சிறப்பிதழின் வெளியீட்டு விழா நடைபெறும். கணையாழி இதழின் கனடா இணைப்பாளராகப் பணியாற்றும் திருமதி. கார்த்திகா பார்த்திபன் இதற்கான ஏற்பாட் டினை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தமிழர்களின் பண்பாடு, வாழ்வியல் மரபுகளை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச் சிகள், மூத்த கலைஞர்களைப் பாராட்டு தல், பொங்கல் விழா சிறப்பு மலர் வெளியீடு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். தமிழ் மக்கள் அனைவரும் திரண்டு வந்து இந் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க வேண்டு மென ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதுபற்றி தமிழ் ஊடகங்களுக்கு அறி விக்கும் வகையில் 28-12-2016 புதன் கிழமை மாலை மார்க்கம் மாநகர சபை மண்டபத்தில் ஊடகவியலாளர் மகாநாட்டி னை ஏற்பாடு செய்திருந்தார். அதில் அவர் உரையாற்றியபோது பின்வருமாறு கூறினார்: "நாம் வருடா வருடம் பொங்கல் விழா வினை மாநகரசபை மண்டபத்தில் கோலா- கலமாகக் கொண்டாடி வருவதை நீங்கள் அறிவீர்கள். இம்முறை திரு. விக்கினேஸ்- வரனின் வருகையை முன்னிட்டுப் பொங்கல் விழாவினை இருநாள் விழாவாகக் கொண் டாட ஏற்பாடு செய்துள்ளோம். பல்லாயிரம் டொலர் செலவில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு நிதியுதவி வழங்கத் தமிழ் தொழில் நிறுவனங் களான Ideal Group, Cambridge Academy, Centre for Tamil Heritage ஆகியன முன்வந்துள்ளன. முதல் நாள் விழாவில் மாலை ஆறு மணிக்கு மார்க்கம் மாநகர சபை மேயர் வண. பிராங் ஸ்கார்பிட்ரியும், வடமாகாண முதல்வர் திரு. விக்னேஸ்வரனும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரட்டை நகர உடன்படிக்கையில் கைச்சாத்திடுவர். மறு நாள் மாநகர சபை மண்டபத்துக்கு அண்மையிலுள்ள திரையரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். அதிலும் வடமாகாண முதல்வர் அவர்கள் கலந்து கொள்வார். அப்போது பொங்கல் விழா மலர் வெளியீடும் அத்துடன் இந்தியாவில் வெளியிடப்பட்டு வரும் "கணையாழி" இலக்கிய சஞ்சிகையின் பொன் விழா மலரும் கனடா சிறப்பு மலராக வெளியிடப் பட இருக்கிறது. இம்மலரில் கனடாவைச் சேர்ந்த படைப் பாளிகளின் கட்டுரைகளும் உள்ளடங்கி உள்ளன. அதன் ஆசிரியரும் மதுரைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தருமான முனைவர் மு. இராஜேந்த ரும் இவ்வைபவத்தில் நேரில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார். தமிழ்நாடு கலாஷேத் திராவில் பல்லாண்டு காலம் பரத நாட்டியத் தினைப் பயின்ற திருமதி. கார்த்திகா பார்த்திபன் இதற்கான ஏற்பா- ட்டினை செய்திருந்தார். அதற்காக நாம் அவருக்கு எமது நன்றியையும், பாராட் டினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்றார். திரு. பொன்னையா விவேகா- னந்தன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

# ஒன்ராறியோ மாகாணத்தின் பெண்கள் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சருடன் வடமாகாண முதல்வர்

கனடாவுக்கு வருகை தந்திருக்கும் முதல மைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் பல் வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் பல அரசியல் சந்திப்புகளையும் நடத்தி வருகி ன்றார். அவ்வாறான சந்திப்புகளில் ஒன்றாக ஒன்ராறியோ மாகாணத்தின் பெண்கள் விவகாரங்களுக்குப் பொறுப்பான மேம்படுத்தவும் அவர்களின் வினைத் திறனை அதிகரித்து நம்பிக்கையூட்டவும் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கியிருக் கும் சட்ட நியமங்கள் வாயிலாக, ஒன்ராறி- யோ அரசால் எமக்கு உதவ முடியுமா?" எனச் சி.வி.விக்கினேஸ்வரன் அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.



அமைச்சர் Tracy MacCharles அவர் களை Queens Park வளாகத்தில் சந்தித்துப் பேச- ினார்.

இச்சந்திப்பின் போது, "வடமாகாணத்தில் நடைபெற்ற போரின் காரணமாகப் பெண் கள் தலைமை ஏற்றிருக்கும் குடும்பங்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் சமூக, உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவை குழந்தைகளின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்குகின் றன. அங்கவீனர்களாக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரமும் சிக்கல்களை கொண்டுள் ளது. இந்தப் பெண்களின் வாழ்வை முதலமைச்சரோடு வேறு பல விடயங்களை யும் கலந்துரையாடிய Tracy MacCharles தமிழ் மக்களின் துயரத்தின் ஆழத்தைத் தான் புரிந்து கொள்வதாகவும் இப்பாதிப்பு கள் தொடர்பான புள்ளிவிபரங்களைப் பரி- மாறிக் கொள்வதன் மூலம் அடையாளம் காணப்பட்ட சிக்கல்களுக்குத் தாங்கள் எவ்வாறு உதவலாம் என்பதற்கான வழிக- ளைக் கண்டறிவதாகவும் குறிப்பிட்டார். வடமாகாணசபையுடன் இணைந்து பணி யாற்றக் கூடிய வாய்ப்புகள் இருப்பின் அவற்றை நிச்சயமாகப் பரிசீலிப்போம் என்றும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பு திருப்திகரமாக இருந்ததாக இருதரப்பின

27ஆவது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் VLAMBARAM™
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன் தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com
விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Get 90's & ABOVE IN MATH IN 2nd SEMESTER

Starts from
3rd week of January 2017

G12
Calculus
The most important course for Engineering field

G11
Function

G10 & G9

"Teaching Experience in Math for more than 23 years" - Limited Students

MATH WORLD
MOST ADVANCED TALENTED HELP
- A private math institute -

416-666-5515
Markham & Steeles

# அமெரிக்க அதிபராக ஒபாமா விடைபெறும் உரை

அமெரிக்காவின் அதிபராகத் தேர்ந்தெடுக் கப்பட்ட முதல் கறுப்பின அதிபர் என்ற பெருமையுடன் 8 வருடம் ஆட்சி புரிந்த பராக் ஒபாமாவின் பதவிக் காலம் எதிர்



வரும் ஜனவரி 20ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் ஜனவரி 10ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தன்னுடைய பதவிக்காலத் தின் இறுதியுரையை அமெரிக்கர்களுக் கானதாக மிக நேர்த்தியான முறையில் ஆற்றியிருந்தார். அவரின் உரை மிகமிக உருக்க மானதாகவும், அமெரிக்காவின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டதாக வும் அமைந்திருந்தது. அத்துடன் அவ் உரை பார்வை யாளர்களையும் நெகிழ வைத்துள்ளது.

தனது சொந்த இடமான சிக்காகோவில் ஒபாமா ஆற்றிய உரையின் சுருக்கம்: "ஆம், நம்மால் முடியும். நாம் செய்து காட்டியிருக்கிறோம். என்னுடன் கடந்த 8 வருடங்களும் உறுதுணையாய் இருந்த தற்கு நன்றி. கடவுள் உங்களை ஆசீர் வதிப்பார். என் சக அமெரிக்கர்களே! உங்களுக்காகப் பணி செய்ததற்காக மிகவும் பெருமைப்படுகிறேன். நான் ஓர் அமெரிக்கக் குடிமகனாக, மீதமுள்ள நாட்களை உங்களுடன் கழிப்பதற்காக மீண்டும் திரும்பியிருக்கிறேன்.

அமெரிக்க அதிபராகக் கடைசியாக உங் களிடம் ஒன்றைக் கேட்கிறேன், உங்கள் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். உங்களது கடின உழைப்பின் மூலம் அமெரிக்காவை ஜனநாயகப் பாதையில் கொண்டு செல்லுங்கள். அமெரிக்க ஜனநாயகத்தைக் காப்பாற் றுங்கள். எதிர் காலம் சிறந்த கைகளில் இருக்குமென்ற நம்பிக்கை என்னிடத்தில் உள்ளது.

என்னுடன் கடந்த 8 வருடங்களாகப் பணி புரிந்த எனது சக பணியாளர்களுக்கு எதிர் காலப் பயணமானது திருமண வாழ்க்கை, குழந்தைகள் எனச் சிறந்த பயணமாக இருக்கப் போகிறது.

மாலியா, சாஷா (ஒபாமாவின் இரு மகள்கள்) நீங்கள் இருவரும் சிறந்த பெண்கள். புத்திசாலிகள், அழகானவர்கள். அதைக் காட்டிலும் நீங்கள் இருவரும் கனவுகளை உடையவர்கள். உங்கள் தந் தையாக நான் பெருமிதம் கொள்கிறேன்.

மிசெல், கடந்த 25 வருடங்களாக எனக்கு மனைவியாகவும், எனது குழந்தைகளு க்கு அம்மாவாகவும் மட்டும் இருக்க வில்லை. எனது சிறந்த தோழியாகவும் இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கான பணியைத் தீர்மானித்தீர்கள். அதற்காக அனுமதி ஏதும் என்னிடம் கேட்கவில்லை. வெள்ளை மாளிகையை அனைத்து மக்களுக்கும் சொந்தமானதாக மாற்றினீர் கள். அமெரிக் காவின் முதல் பெண்மணி யாக நீங்கள் என்னை பெருமையடையச் செய்தீர்கள்.

அமெரிக்க மக்களே! நமது ஜனநாய கத்துக்கு நீங்கள் தேவைப்படுகிறீர்கள். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மட்டு மல்ல. வாழ்வு முழுவதும் நீங்கள் தேவைப்படுகிறீர்கள். நீங்கள் இணையத் தில் ஆபத்துகளை பேசிப்பேசி சோர்ந்து விட்டீர்கள் என்றால், உண்மையில் ஒரு-வருடனாவது பேச முயற்சி செய்யுங்கள். நமது ஜனநாயகம் அழகான பரிசு. நீங்கள் ஒன்றை நினைவில் கொள்ளுங் கள். மெரிக்கக் குடிமக்களாகிய நீங்கள் பங்கு பெறாமல் இங்கு ஏதும் நிகழப் போவதில்லை. நாம்தான் ஜனநாயகத் துக்கான சக்தியைக் கொடுக்கிறோம். நாம் தளர்ந்து போகாதவரை சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் நம்மிடம் போட்டி போட முடியாது.

அமெரிக்கர்களாகிய நாம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். பெண் வெறுப்பு, நிற வெறி, பாலியல் பாகுபாடு, மதவெறுப்பு போன்றவற்றை மறந்து ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். கடந்த 8 வருடங் களுக்கு முன்பு இருந்ததைவிட பல துறைகளில் அமெரிக்கா முன்னேறியுள்ளது. கடந்த 8 வருடங்களில் தீவிரவாதத் தாக்குதல் ஏதும் அமெரிக்காவில் நடக்க வில்லை. தீவிரவாதத்துக்கு எதிராக நாம் ஒருங்கிணைந்து செயல்பட்டுள்ளோம். விரைவில் ஐஎஸ் இயக்கம் அழிக்கப்படும். பருவ நிலை மாற்றத்தில் ஏற்பட்டுள்ள சவாலை நாம் எதிர்கொள்ள வேண்டும். இந்த உலகத்தைக் காப்பற்றுவதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஏனெனில் நம் குழந் தைகளுக்கு அதற்கான நேரம் இருக்காது. அவர்கள் அதற்கான விளைவுகளுடன் போராடிக் கொண்டிருப்பார்கள்.

நான் பதவி ஏற்றபோது அமெரிக்காவில் நிறம் சார்ந்த பேச்சுகள் அதிகளவில் இருந்தன. நிறவெறி நமது சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அது நம்மிடையே பிரிவினையை ஏற்படுத்து கிறது. கடந்த இருபது வருடங்களுக்கு முன் இருந்த சூழலைக் காட்டிலும் தற்போதைய சூழல் சிறப்பாகத்தான் உள் ளது என நான் தற்போது உணர்கிறேன்.

ஒவ்வொரு நாளும் நான் உங்களிடமி ருந்து கற்றுக் கொண்டேன். நீங்கள்தான் என்னைச் சிறந்த அதிபராக உருவாக்கி னீர்கள், நீங்கள்தான் என்னை சிறந்த மனிதராகவும் உருவாக்கினீர்கள்" என அனைவரையும் கண் கலங்க வைத்தது டன், ஒவ்வொரு அமெரிக்கர்களையும் நெகிழ வைத்தார் ஒபாமா தன்னுடைய உரையின் போது.

## ஒன்ராறியோ...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

படுத்துவதில் ஒன்ராரியோ உறுதியாக விரும்புகின்றது என்றார்.

இந்த இருதரப்புகளுக்கிடையான சந்திப்பு, இரு தரப்பு அரச தலைவர்களுக்கும் முதல் தடவையாக அமைவதுடன், ஒன்ராரி-யோ - வட மாகாணங்களுக்கிடையான உறவை மேலும் பலப்படுத்துவதற்கான



ஒரு வாய்ப்பையும், இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்ராரியோவின் ஆதரவையும் உறுதிப் படுத்தியது. வட மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை சமத்துவ மான முறையிலும் எதிர்காலத்தில் நின்று நிலைக்கக் கூடிய வகையிலும் ஒன்ராரி-யோவின் சிறப்பான சேவை அணுகுமுறை-களையும், அனுபவ அறிவுகளையும் மற்றும் கொள்கைசார் விடயங்களையும் பகிர்வது பற்றி இச்சந்திப்பில் ஆக்கபூர்வமாகப் பேசப்பட்டது.

ஒன்ராரியோவில் வாழும் இலங்கையைப் பூர்வீமாகக் கொண்ட, குறிப்பாக தமிழ் பேசும் சமூகம் உட்பட ஒன்ராரியோ வாழ் மக்களதும், வட மாகாண மக்களதும் நீண்ட உறவுக்கான காரணமாக முற்போக் கான சமூக பெறுதிகளை பகிர்வதுடன் உறுதியாக இருப்பதும் அடிப்படையாகின்றது.

"ஒன்ராரியோவுக்கு வட மாகாண முதல்வர் சி.வி. விக்கினேஸ்வரனை வரவேற்பதிலும் சந்திப்பதிலும் நான் பெருமையடகின்றேன். இரு மாகாணங்களிலும் பொதுவாகக் காணப்படும் சாத்தியப்பாடுகளில் கூட்டுச் செயற்பாடுகள் பற்றி மிகவும் காத்திரமாக உரையாடப்பட்டது. வட மாகாணத்தை சமத்துவமான முறையிலும் எதிர்காலத்தில் நின்றுநிலைக்கக் கூடிய வகையிலும் வழிநடத்தும் முதலமைச்சரின் முயற்சி களுக்கு மேலும் ஆதரவு வழங்குவதற் கான வாய்ப்புக்களை முன்னெடுப்பதற்கு ஆவலாக உள்ளேன்" என அறிக்கையில் தெரிவித்திருந்தார் மேன்மைதங்கிய கத்தலின் வின், ஒன்ராரியோ முதல்வர்.

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர்: 479

ஒரு மில்லியன் வீட்டு விலை என்பது சாதாரணமாக மாறிவிட்டது. உள்ளூர் வாங்குபவர்களாலும், வெளிநாட்டு வாங்குபவர்களாலும் விலை அதிகரிப்பு ஏற்படுகிறது என்பது யாவராலும் புரியக்கூடியது. மில்லெனியல் (அதாவது 1980-2000 ஆம் ஆண்டுக்கு இடையில் பிறந்தவர்கள்) ஆதனம் வாங்குவதற்கு அதிகமாக உள்ளார்கள். அத்துடன் விலை அதிகரிப்பினால், ஆதனம் வைத்திருப்பர்களும் இரண்டு மூன்று ஆதனங்களில் மேலும் முதலீடு செய்வதனையும் காணலாம்.

2016இல் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 19,692 ஆதனங்கள் ஒரு மில்லியனிற்கு மேலாக விற்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை முந்தைய ஆண்டை விட அண்ணளவாக 75% அதிகரிப்பாகும். ரொறொன்ரோவில் மட்டும் 7,799 ஆதனங்கள் ஒரு மில்லியனிற்கு மேலாக விற்கப்பட்டுள்ளது. 2015 உடன் ஒப்பிடும் போது 44% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

மொத்தமாக விற்கப்பட்ட மில்லியனிற்கு மேற்பட்ட விலையான ஆதனத்தில் 89% ஆனவை தனி வீடுகளாவே காணப்படுகின்றது. சில பகுதிகளில் இரண்டு சேர்ந்த வீடுகளும், பல சேர்ந்த வீடுகளும் மில்லியன் டொலரை தாண்டி விற்கப்படுகின்றது.



இன்றைய காலகட்டத்தில் 4 மில்லியன் என்ற பெறுமதிக்கு மேற்பட்ட வீடுகளை “விலையான வீடுகள்” எனக் கூறப்படுகின்றது. 2016 இல் ரொறொன்ரோவில் 209 வீடுகள் $4 மில்லியனிற்கு மேலாக கை மாறியுள்ளது.

ரொறொன்ரோவிற்கு வெளிப்பகுதியிலும் அதிக வீடுகள் மில்லியனை தாண்டி விற்பதனைக் காணலாம். அத்துடன் அதிகரிப்புத் தொகை கூடுவதனையும் காணலாம்.

ஆனால் வன்கூவரின் நிலைமை முற்றிலும் எதிர்மாறாக உள்ளது. அதாவது மில்லியன் டொலரிற்கு அதிகமாக விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1.4% இறக்கம் ஏற்பட்டு உள்ளது. வன்கூவர் பகுதியில் வெளிநாட்டவர்கள் வாங்குவதற்கான புதிய இறுக்கங்கள், வெளிநாட்டு வாங்குனர்களை ரொறொன்ரோ பெரும்பாகத்திற்கு மாற்றியுள்ளதைக் காணலாம். இதனால் ரொறொன்ரோ மற்றும் பெரும்பாகத்தில் விலை அதிகரிப்பு இந்த வருடத்தின் முற் பகுதியிலும் நிச்சயமாக காணக்கூடியதாக இருக்கும். இந்நிலைப்பாட்டை கடந்த இருகிழமைகளாக (ஜனவரி 01-14, 2017) ரொறொன்ரோ பெரும்பாகத்தில் காணக் கூடியதாக இருந்தது. காலநிலை மிகக் குளிராக இருந்தபோதும், ஆதன வியாபாரம் மிகவும் வெப்பமாக (hot) இருந்தது.

ரொறொன்ரோவில் ஆதனவிலை அதிகரிப்பால், அடமானக்கடன் பெறுவதில் நிலைமை இறுக்கமாக உள்ளதனை நிதி நிறுவனங்கள் அறிந்துள்ளன. இதனால் அடமானக் கடன் பெறுவதற்காக, வாங்குபவர்கள் அதிகப்படியான தவறான தகவல்களைக் கொடுப்பதனை Equifax நிறுவனம் கண்டுள்ளது. இவற்றில் 67% அடமானக்கடனிற்காக கொடுக்கப்பட்ட தவறான தகவல்கள் ஒன்ராரியோவில் இருந்தே வந்துள்ளன.

அத்துடன் அடமானக்கடன் பெறுவதற்காக உங்கள் தகவல்கள் கொடுக்கும்போது தவறானவர்களின் கைகளில் உங்கள் தகவல்கள் செல்லும்போது மிகவும் நெருக்கடிக்குள் நீங்கள் செல்ல வேண்டும் என்பதனையும் கவனத்தில் கொள்க. இவ்வாறான பல சம்பவங்கள் முன்பும் நடந்துள்ளன. ஆனால் அண்மையிலும் எமது சமுதாயத்தவர்களால் நடத்தியது அறிய வந்துள்ளது.

*திருத்தம் - ஜனவரி 01, 2017 - தொடர் 478 இல்: 2015 இல் ரொறொன்ரோவில் $1 மில்லியனிற்கு மேலாக விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 11,112 எனத் தவறாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.*




Seelan Siva Real Estate
Buy.Sell.Invest
Direct: 416.999.3555
Direct: 416.451.0271
Uthayan Aiyadurai
Sales Representaive
Email:aiya14@gmail.com
web:www.egtahomes.com
Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Email:seelansiva@gmail.com
This THAI PONGAL we thank you for providing us the opportunity to serve you and we promise to make your experience a satisfying and enriching one in the coming days.




HOMELIFE/GTA Realty Inc.,
Brokerage*
Bus:(416)321-6969
5215 Finch Ave. E, Suite 203, Toronto, ON M1S-0C2
This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

**கேள்வி: உங்கள் "Mystic's Musings" புத்தகத்தைப் படித்த பிறகு, நீங்கள் கடவுள் போன்றவரோ என்று சந்தேகம் வருகிறது. இயேசு, முகமது நபி, புத்தர் போன்றவர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?**

சத்குரு: இந்தக் கேள்வி உங்களுக்கு ஏன் வந்தது? உங்கள் மனதில் கடவுள் என்பவர், மனிதனைவிடப் பலமடங்கு உயர்ந்த நிலையில் இருப்பதாக ஒரு நினைப்பு வந்துவிட்டது. என் புத்தகத்தின் குறிக்கோளே... மனிதன் என்பவனை அப்படிக் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதைத் தெளிவுபடுத்தத்தான். நீங்கள் கற்பனை செய்வதைவிட அவன் மிகப் பிரம்மாண்டமானவன்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

இன்றைக்குக் கடவுளின் பெயரைச் சொல்பவர்கள் மனிதனைத் தூக்கி எறிந்துவிடுவதைக் காண்கிறேன். தெய்வத்தைத் தேடும் பணியில் தங்கள் மனிதத்தன்மையை உயிரோடு புதைத்து விடுகிறார்கள், இது தவறு. ஜீஸஸ், நபிகள் போன்றவர்கள் தங்களைக் கடவுளர்களாக அறிவித்துக் கொள்ளவில்லை. மனிதர்களாகத்தான் பெரும் மேன்மையை அடைந்து காட்டினார்கள். கடவுள்களே பிரச்சினைகளைச் சந்தித்தபோது, வழிகாட்டுதலுக்காகத் துறவிகளைத் தேடி வந்ததாகப் புராணக் கதைகள் உண்டு. மனிதனாக இருப்பது அற்பமன்று. நீங்கள் முழுமையான மனிதனாக செயல்படத் துவங்கினீர்கள் என்றால், கடவுள்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படுவார்கள் என்பது உண்மை!

**கேள்வி: ஆன்மீகம், பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதா?**

சத்குரு: ஆன்மீகம் என்பதை யாருக்கோ என்னவோ நடப்பதாக ஏன் நினைக்கிறீர்கள்? ஆன்மீகம் என்பது உங்களைப்பற்றியது. நீங்கள் என்பது ஓர் உண்மை நிலை! குறிப்பிட்ட சில விடயங்களுக்கு, உங்களுடைய பகுத்தறிவால் விளக்கம் கொடுக்க முடியாமல் போகும்போது, அவற்றைப் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவை என்று தீர்மானித்து விட்டீர்கள்.

உங்கள் குடும்பம், உங்கள் செல்வம், உங்கள் கல்வி, உங்கள் மனம், உங்கள் உடல் இவையெல்லாம் நீங்கள் இந்தப் பூமியில் வந்து சேகரித்தவை. நீங்கள் என்று நான் குறிப்பிடுவது, நீங்கள் இப்படிச் சேகரித்தவற்றை அல்ல. அதற்கும் உள்ளே, உங்கள் அடிப்படையாக விளங்குவதை நீங்கள் என்று உணரும் அனுபவமே ஆன்மீகம்!

சுருக்கமாகச் சொன்னால், உங்களைப் பற்றியது ஆன்மீகம். உங்கள் அனுபவத்தில், நீங்கள் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை ஆன்மீகமும்!

ஆன்மீகம் என்பது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதும் அல்ல, அதற்கு உட்பட்டதும் அல்ல. ஆன்மீகம் என்பது உங்களைப் பற்றியது, அதன் பரிமாணங்களை உங்கள் தர்க்கரீதியான அறிவால் புரிந்துகொள்ள இயலவில்லை என்பதால், அது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது என்று சொல்வது சரியல்ல. நீங்கள் இங்கே இருப்பதை அனுபவரீதியாகப் பகுத்தறிய முடிகிறதல்லவா? ஆன்மீகம் உங்களைப் பற்றியது என்பதால், அதையும் அவ்வாறே அறிய முடியும்.

நீங்கள் என்று நான் சொல்கையில், நீங்கள் சேகரித்துள்ள கல்வியையோ, நண்பர்களையோ, உறவினர்களையோ, சொத்துக்களையோ சொல்லவில்லை. இந்தப் பூமியில் நீங்கள் சேகரித்துள்ள உங்கள் உடலையோ, மனதையோ குறிப்பிடவில்லை. உங்கள் உயிர் வாழ்தலின் ஆதாரமாக இருப்பதைத்தான் நீங்கள் என்கிறேன். அந்தக் கவனத்துடனே ஆன்மீகத்தை அணுகுங்கள்.

**கேள்வி: "இளைஞர்களுக்கு ஆன்மீகம் உகந்ததா? இளம் வயதினரை ஆன்மீகத்தால் கட்டுப்படுத்த இயலுமா?"**

சத்குரு: ஆன்மீகம் என்பது கட்டுப்படுத்துவது என்று யார் உங்களுக்குக் கருத்து சொன்னது? ஆன்மீகம் என்பது விடுவிப்பது. கட்டுப்படுத்தியுள்ள தளைகளிலிருந்து விடுபட்டு விடுதலையாவது.

ஆன்மீகத்தில் ஈடுபடும் இளைஞன், அவனைச் செலுத்தும் பல இச்சைகளில் இருந்து விடுதலையாகிறான். கட்டுப்படுத்தும் பல அம்சங்களைத் தகர்த்து வெளி வருகிறான். இளமையில் விடுதலையை விரும்பாதவர் யார்? நீங்கள் நினைப்பது போல் ஆன்மீகம் என்பது சுயக்கட்டுப்பாடு அல்ல, சுய விடுதலை அது.

ஆன்மீகத்தின் அடிப்படை, அமைதியும் ஆனந்தமும்தான். எப்போது அமைதியும் ஆனந்தமுமாக இருக்க விரும்புகிறீர்கள்? உங்கள் வாழ்க்கையின் துவக்கத்திலா அல்லது அதன் இறுதிப் பகுதியிலா என்பதை முடிவு செய்ய வேண்டியது நீங்களே!

**கேள்வி : "நமது பாரம்பரியத்தில் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் சமீப காலம் வரை கூட எழுத்தில் பதியப்படாமல் வாய் வழியாகவே பரப்பப்பட்டு வந்தன. இதை எழுத்தில் பதித்திருந்தால் ஆன்மீகம் இன்னமும் வேகமாகப் பரவியிருக்கும் அல்லவா?"**

சத்குரு: மலை பற்றியோ அல்லது விஞ்ஞானம் பற்றியோ படித்துத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் உண்மை என்பதை வாயால் விளக்க முடியாது அல்லது எழுத்தில் பதிய முடியாது. அப்படிச் செய்திருந்தால் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். உண்மையை உணர்ந்துதான் பார்க்க முடியும். இதனால்தான் ஆன்மீகத்திற்கு சம்பந்தப்பட்ட அடிப்படையான தன்மை எதையும் எழுதி வைக்காமல் இருந்தார்கள். எனவே உண்மையை உணர்ந்தவர்கள் அதனைத் தங்களுடனேயே வைத்துக் கொண்டு உண்மையை நாடும் மக்களைத் தேடி அவர்களுடன் அனுபவபூர்வமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள். இப்படியே இது தலைமுறை தலைமுறையாக வந்திருக்கிறது. இதைத்தான் நாம் குரு-சிஷ்ய பாரம்பரியம் என்று சொல்கிறோம். இந்தப் பாரம்பரிய முறை இருப்பதால்தான் நமது நாட்டில் ஆன்மீகம் இன்னமும் அந்த உயிர் துடிப்புடன் இருக்கிறது.

**கேள்வி: "ஆன்மீகத்தில் கிளர்ச்சியாளர் என்று உங்களைச் சொல்கிறார்களே?"**

சத்குரு: ஆன்மீக வளர்ச்சி என்பது வாழ்க்கையை எதிர்க்கும் கிளர்ச்சியல்ல. சொல்லப் போனால், வாழ்க்கையின் லயத்தோடு இசைந்துப் போகாத முறைகளால் ஆன்மீக முன்னேற்றத்துக்கு வழியே இல்லை. பழகிப் போன சில செயல்களில் இருந்து விடுபட முடியாதவர்கள் என் செயல்களைக் கண்டு புரட்சி செய்வதாகவும் கிளர்ச்சி செய்வதாகவும் நினைக்கிறார்கள். எல்லா மனிதர்களும் தவழ்ந்து நகர் கையில், ஒரு மனிதன் எழுந்து நின்றால், அவன் புத்திசாலியா, புரட்சியாளனா?

வாழ்க்கைக்கு எதிரானவனாக எந்தக் கிளர்ச்சி செய்யவும் எனக்கு விருப்பமில்லை. வாழ்க்கையோடு முழுமையாக இசைந்து செல்லும் எனக்கு எதையும் எதிர்க்கும் அவசியம் இல்லை.

பார்வையில்லாத சிலர் தொட்டுத் தடவி யானையைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது போல் ஏதோ ஒரு பகுதியை மட்டும் பார்த்து என் செயல்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்பவர்கள் எனக்குக் கொடுத்திருக்கும் பட்டமே கிளர்ச்சியாளன். பழமையை உடைக்கிறேன் என்பது என் மீதான குற்றச்சாட்டானால்... ஆம், முன்னேற்றத்துக்காகத் தடைகளைத் தகர்க்கிறேன்.





### *4 day Inner Engineering Program*

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – March 23 - 26, 2017*

*TIMINGS:* Thursday March 23 : 6:30pm – 9:45pm
Friday March 24 : 6:30pm – 9:45pm
Saturday March 25 : 8:30am – 7:00pm
Saturday March 25 : 7:30am – 7:00pm

*VENUE -* ***MISSISSAUGA***
Moonlight Convention Centre,
6835 Professional Ct, Mississauga, ON L4V 1X6,

***TORONTO***
Swagat Banquet Hall,
6991 Millcreek Drive, Mississauga (Toronto), ON L5N 6B9

*Email: toronto@ishafoundation.org /Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*

# திருமணத்தினூடாகக் கனடாவில் குடியேறுதலில் கனேடிய அரசு துப்புத்துலக்கும் மோசடிகள்!

## கனடிய தகவல் தொடர் 260



**சிவ. பஞ்சலிங்கம்**, B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

கனடாவில் திருமணத்தினூடாக குடியேறுபவர்களிடம் இருவகையான மோசடிகளை கனேடிய அரசு துப்புத்துலக்கி வருகின்றது.

1. கனடாவில் குடியேறுவதற்காக திருமணத்தில் இணைந்துவிட்டு கனடாவுக்கு வந்து சேர்ந்த பின்பு முறிவினை ஏற்படுத்தி ஏமாற்றுவது.

2. இருபகுதியும் திட்டமிட்டுப் பணம் பரிமாற்றல்கள் செய்து, திருமணம் என்ற மோசடிகளினூடாக கனடாவிற்கு வந்து சேர்ந்த பின்பு இருவரும் ஒத்து விவாகரத்துப் பெற்று விலகிக் கொள்வது. இக்குற்றம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் $100,000 டொலர் பணத்தண்டனையுடன் ஐந்து வருட சிறைத்தண்டனை வரை கிடைக்கும்.

1. கனடாவிற் வந்து சேர்ந்த பின்பு திருமண முறிவு ஏற்பட்டால்...
முதலாவதாக குறிப்பிடப்பட்ட மோசடிக்காக கனடாவின் முன்னைய பழமைவாதக் கட்சி அரசு ஒக்ரோபர் 2012 இல் புதியதோர் சட்டத்தினை அமல்படுத்தியது.

A. திருமண ஸ்பொன்ஸரில் கனடாவுக்கு வந்து சேர்ந்தவர்களுக்கு முதல் இருவருடங்களுக்கு நிபந்தனையுடன் கூடிய தற்காலிகமான நிரந்தர வதிவுரிமை மட்டுமே வழங்கப்படும். (Conditional permanent resident) முதல் இரு வருடங்களினுள் திருமண வாழ்வு முறிவடைந்தால் அவர் கனடாவினை விட்டு சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்.

இந்தச் சட்டப் பிரிவிலும் இரு விதி விலக்குகள் உண்டு.

I. ஸ்பொன்ஸரில் கனடாவினுள் புதிதாக வந்த தம்பதிகளில் ஒருவரை மற்றவர் கொடுமைப்படுத்தியோ அல்லது தொல்லைப்படுத்தியோ அதன் தொடர்ச்சியான துன்பங்கள், துயரங்கள் தாங்க முடியாது திருமண முறிவு ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்படும்போது நாடு கடத்தல் நடைமுறைச்சாத்தியமில்லை.

II. கனடாவிலிருந்து ஸ்பொன்ஸர் செய்த தம்பதிகளில் ஒருவர் மரணமடைந்து விட்டாலும் மற்றர் நாடு கடத்தப்படமாட்டார்.

B. கனடாவுக்குத் திருமணத்தினூடாக வந்து சேர்ந்தவர் இரு வருடங்கள் கழித்து திருமண முறிவினை ஏற்படுத்திக் கொண்டாலும், மீண்டும் இன்னொருவரைத் திருமணம் என்ற பெயரில் ஸ்பொன்ஸர் செய்வது ஐந்து வருடங்களுக்குத் தடைசெய்யப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் ஒக்ரோபர் 2012இலிருந்து இன்றுவரை அமலாக்கப்பட்டு வரும் விடயமாகும். இது அன்றைய ஆட்சியில் இருந்த பழமைவாதக் கட்சி உருவாக்கிய சட்டம் ஆகும். ஆனால் இன்று ஆட்சியிலிருக்கும் லிபரல் கட்சி இந்தச் சட்டங்களில் ஒரு மாற்றத்தினை இப் புதுவருடத்திலிருந்து நடைமுறைப்படுத்த உள்ளது.

அது வேறு ஒன்றுமல்ல!

"திருமணத்தினூடாக ஸ்பொன்ஸரில் கனடாவுக்கு வந்து சேர்ந்தவர் இரு வருடத்திற்குள் திருமணத்தில் முறிவு ஏற்பட்டால் நாடு கடத்தப்பட வேண்டும்" என்ற கடுமையான சட்டப்பிரிவு நீக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

இந்தச் சட்டப்பிரிவு எதற்காக நீக்கப்படல் வேண்டும் என்பதற்கு மத்திய அரசின் குடிவரவுத்துறை அமைச்சர் திரு. ஜோன் மக்கலம் (Mr. John Mccallum) பின்வரும் காரணங்களை குறிப்பிடுகின்றார்.

• கனடா பற்றி எதுவுமே தெரியாது, திருமண ஸ்பொன்ஸரில் வந்து சேர்ந்துள்ள தம்பதிகளில் ஒரு பகுதியினருக்குக் குறிப்பாகப் பெண்களுக்கு கணவரின் சித்திரவதைகளிலிருந்து இவ் இருவருட சட்டங்கள் என்ற பிரச்சினையால் வெளியே மீண்டு வர முடியாமல் இருக்கும். அவர்களுக்கு கனடா என்ற அந்நிய நாட்டின் ஆரம்ப வாழ்வு மொழிப் பிரச்சினை, கலாசார மாற்றம், தொழில் இல்லாத நிலைமை, கையில் பணமில்லாத சிக்கல், பிரச்சினைகளுக்கு தீர்வு காண வழி தெரியாத நிலைமை என எவற்றிலிருந்தும் விடுபடமுடியாமலிருக்கும்.

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

INCOME PROTECTION INSURANCE
வருமான பாதுகாப்பு காப்புறுதி

• நாங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்போம்.
• We can protect you and your family!

• நீங்கள் சுகவீனமுற்றதனாலோ அல்லது காயமடைந்ததனாலோ வேலை செய்ய முடியாவிட்டால் இந்தக் காப்புறுதி உங்கள் வருமானத்தை ஈடு செய்யும்.
• If you are unable to work due to injury or illness replace your income with disability insurance

• இந்தக் காப்புறுதி ஆயுள்காப்புறுதியைப் போலவே மிகவும் முக்கியமானது.
• It's just as important as Life Insurance

➤ 100% return of premium those who are under 40 years old(some conditions apply)
➤ We can cover up to $10,000 per month.
➤ We are specializing in coverage for truck drivers, Real Estate agents, Mortgage professionals, self-employed and construction workers.
➤ Also we can cover your fixed business expenses if you are unable to work.
➤ Included travel insurance for the family. 5 Million Per person / 60 days per trip. Unlimited trips per year
➤ Extended Medical $100,000



Nimal Subramaniam
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

◂ Life Insurance ◂ Non-Medical Insurance ◂ Critical Illness Insurance ◂ Disability Insurance ◂ Mortgage Insurance
◂ Travel Insurance ◂ Super Visa Medical Coverage ◂ Drug and Dental Plan ◂ TFSA ◂ RESP ◂ RRSP ◂ LIRA ◂ LIF

# மு.க. ஸ்டாலின் Vs வி.கே. சசிகலா: பலம் – பலவீனம்

# தமிழக அரசியல் இன்று

**- சிவதாணு -**

தமிழக அரசியல் களம் வித்தியாசமானது. கொள்கை, கோட்பாடு, லட்சியம், திட்டங்கள் என்பதற்கு மாற்றாக அரசியல் தலைவர்க ளின் செயல்பாடுகளாலே தீர்மானிக்கப் படுவது. அதிலும் குறிப்பாக கலைஞர் Vs எம்ஜிஆர், கலைஞர் Vs ஜெயலலிதா என்று இருதுருவ மோதலை முன்வைத்தே கடந்த அரை நூற்றாண்டாக நகர்ந்து வந்திருக்கிறது. இதில் ஜெயலலிதா மறைந்து, அவரது தோழி சசிகலா அதிமு- கவின் பொதுச் செயலாளராகி விட்டார். கலைஞர் உடல்நலக் குறைவு காரணமாக, அவருக்கு ஓய்வு தேவை என, ஸ்டாலின் திமுகவின் செயல் தலைவராகப் பொறுப் பேற்றுள்ளார். இவர்கள் இருவரின் பலம் என்ன? பலவீனம் என்ன? ஓர் அலசல்.

### சசிகலா: மக்கள் மனதையும் வெல்வாரா?

எம் .ஜி. ஆர். மறைந்ததும் அதிமுக கட்சியின் தலைமை ஜெயலலிதா கையில் சுலபமாக வந்துவிடவில்லை. அவமானப் படுத்தப்பட்டு, தேர்தலைச் சந்தித்து என இரண்டு வருடங்கள் போராட்டத்துக்குப் பின்னர்தான் அதனைக் கைப்பற்றினார். ஆனால், ஜெயலலிதா போல் போராட வேண்டிய அவசியமே இல்லாமல், அவர் மறைந்து ஒரு மாதத்துக்குள், ஒன்றரைக் கோடி தொண்டர்களைக் கொண்ட மா பெரும் இயக்கமான அதிமுக இன்று முழுமையாக சசிகலாவின் கட்டுபாட்டில் இருக்கிறது.

திமுகவில் இருந்து விலக்கப்பட்ட எம்.ஜி. ஆர்., அதிமுகவைத் தொடங்கி, ஐந்து வருடங்கள் பல எதிர்ப்புகளையும் தாக்குப் பிடித்து, தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்றுத்தான் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார். ஜெயலலிதாவும் ஐந்து வருடங்கள் போராட்டத்துக்குப் பின்னர், தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்றுத்தான் முதல்வரானார். ஆனால், முன்னவர்களான இந்த இருவரையும் போல் போராட வேண்டிய அவசியமே இல்லாமல், இன்னும் நான்கரை ஆண்டுகள் என்னும் நீண்டகால ஆட்சி அதிகாரத்தை சசிகலா கையில் ஒப்படைத்துவிட்டுச் சென்றிருக்கிறார் ஜெய லலிதா. இந்த நான்கரை ஆண்டுகளும் ஆட்சியைத் தக்கவைப்பது மட்டுமல்ல, மக்கள் மனதையும் வென்றால் மட்டுமே சசிகலாவால் எதிர்காலத்தில் அரசியலில் தாக்குப்பிடிக்க முடியும். தாக்குப்பிடிப்பாரா?



ஜெயலலிதா மறைவைத் தொடர்ந்து அன்றி ரவே ஓ. பன்னீர்செல்வம் முதல்வரானார். இதுபோல் மத்திய அரசு ஆதரவுடன் கட்சித் தலைமைக்கும் ஓபிஎஸ்ஸே தேர்ந்தெடுக்கப் படுவார் என்று தொடர்ந்து 'ஸ்கூப்' செய்தி கள் பரவின. ஆனால், வெகு விரைவிலேயே காட்சிகள் மாறத் தொடங்கின. தினமும் போயஸ் கார்டனை நோக்கிப் படையெடுத்த அதிமுக முன்னணித் தலை வர்கள், முக்கிய நிர்வாகிகள் சசிகலாவை பொதுச்செயலா- ளராகப் பொறுப்பேற்கும்படி 'வறுபுறுத்தினர்.' இப்போது அடுத்த சுற்று... கட்சியின் முன்னணித் தலைவர்கள், முக்கிய நிர்வாகிகள் ஒவ்வொருவராக சசிகலா முதல்வராக வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டு வருகிறார்கள். சசிகலா விரும் பினால் அவர் தமிழக முதல்வராவதை யாராலும் தடுக்க முடியாது. அந்தளவுக்குக் கட்சி சசிகலா கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதுதான் நிதர்சனம்.

இதற்குக் காரணம், ஜெயலலிதா இருந்த போதும் கட்சி முழுமையாக சசிகலா கட்டுப்பாட்டில்தான் இருந்திருக்கிறது என்பதுதான். புகைப் படங்களில், வீடி- யோக்களில் ஜெயலலிதாவுக்கு பின்னால் தான் எப்போதும் நின்றுகொண்டிருக்கிறார் என்றாலும், போயஸ் கார்டனுக்குள் பலவற் றில் சசிகலாவே முன்நின்று முடிவெடுத் திருக்கிறார், உத்தரவுகள் பிறப்பித் திருக் கிறார். கூட்டணிப் பேச்சுவார்த்தை, அதிகா ரிகள் நியமனம் மற்றும் மாறுதல், கட்சிப் பதவிகள் மற்றும் பதவி பறிப்புகள் எனப் பெரும்பான்மை முடிவுகள் சசிகலாவாலேயே எடுக்கப்பட்டிருக்கின்றன. கடைசியில் அதனை அறிவிப்பதை மட்டுமே பெரும்பா ன்மை நேரம் ஜெயலலிதா செய்திருக்கிறார்.

அதிமுகவுடன் கூட்டணிக்காக நடைபெற்ற பழைய பேச்சுவார்த்தைகள் பற்றி சமீபத் தில் திருமாவளவன் கூறியவை இதனை நிரூபிக்கின்றன. அனிதா ராதாகிருஷ்ணன், பழ. கருப்பையா உள்பட கடந்த இருபத் தைந்து ஆண்டுகளில் அதிமுக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னணித் தலைவர்கள் அனைவரும், தங்கள் வெளி- யேற்றத்துக்கு காரணமாக சசிகலாவையே சுட்டிக்காட்டினார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

ஆக, கட்சி மற்றும் ஆட்சி நிர்வாகம் என்பது சசிகலாவுக்குப் புதியது அல்ல. ஜெயலலிதா போன்ற ஒரு பெரிய ஆளுமை இருக்கும் போதே கட்சியையும் ஆட்சி அதிகாரத்தை யும் தன் கட்டுக்குள் வைத்திருந்தவருக்கு, இன்று சொல்லிக் கொள்ளும்படி பெரிய ஆளுமை எவரும் கட்சிக்குள் இல்லாத நிலையில் அது வெகு சுலபம். சசிகலாவின் தலைமையை ஏற்க முடியாத அதிமுகவி னர் கட்சியில் இருந்து விலகி திமுக, காங்கிரஸ், பாஜக என வேறு கட்சிகளில் சேர்வது இனி நடக்கலாம். ஆனால், அவர் கள் சிறு பகுதியினராகத்தான் இருப்பார்கள். மிச்சமிருக் கும் நான்கரை ஆண்டுகள் ஆட்சி அதிகாரத்தை சுவைக்க வாய்ப்புள்ள நிலையில் நிச்சயம் எவரும் அதனை உதறித் தள்ளிவிட்டுப் போகமாட்டார்கள். இது சசிகலாவின் பெரிய பலம்.

திமுகவின் குடும்ப அரசியலைப் பார்த்து வெறுத்திருந்த மக்களுக்கு முன்னால் ஜெயலலிதாவுக்கு என தனியாக குடும்பம் இல்லாதிருந்ததே அவரது பெரும் பலமா னது. இதனை நன்கு உணர்ந்திருந்ததா- லேயே ஜெயலலிதா மேடை தோறும் திமு- கவின் குடும்ப அரசியலைப் பற்றி முழங்கத் தயங்கவில்லை. அதற்கு வசதியாகத் தனது உறவினர் யாரையும் தன்னை நெருங்கவும் விடவில்லை. ஆனால், சசிகலாவுக்கு அந்தப் பாக்கியம் கிடையாது. தனது உறவினர்கள், கணவர் நடராஜனின் உறவினர்கள், இந்த இரு தரப்பு உறவினர் களின் உறவினர்கள் என ஒரு பெரும் குடும்ப மரம் சசிகலா- வைச் சூழ்ந்து வளர்ந்து நிற்கிறது. இந்த மரம் சசிகலாவின் மிகப் பெரிய பலமும் பலவீனமும் கூட. ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, எல்லாம் மிகக் கச்சிதமாகத் திட்ட மிட்டு நிறைவேற்றப்பட்டு, பெரிய எதிர்ப்பு இல்லா மல் கட்சி முழுமையாக சசிகலா கையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதில் இந்தக் குடும்பத்தினரின் பங்கு மிகப் பெரியது. அதேநேரம், அதிமுகவின் முந்தைய தலை மைகளான எம். ஜி. ஆர், ஜெயலலிதா இருவருமே மக்கள் சக்தி பெற்ற மாபெரும் ஆளுமைகள். ஆனால், சசிகலாவுக்கு அந்த மக்கள் சக்தி கிடையாது. உண்மை யைச் சொன்னால் மாபெரும் மக்கள் வெறுப்புத் தான் அவர் முன்னால் இன்று பெரும் சுவராக எழுந்து நிற்கிறது.

1991-1996 அதிமுக ஆட்சிக் காலத்தை தமிழக மக்கள் அவ்வளவு சுலபத்தில் மறக்க மாட்டார்கள். எந்தளவுக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்புணர்வு இருந்தது என்ப தற்கு 1996 சட்டசபை தேர்தல் முடிவு களே சாட்சி. ஜெயலலிதாவின் கடைசிக் காலம் வரைக்கும் சொத்துக் குவிப்பு வழக்காக அது பயங்காட்டியது. இப்போதும் சசிகலாவை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. அதில் தண்டனை வழங்கப்பட்டால் அரசியல் எதிர் காலமே இல்லாமல் ஆகிவிடலாம்.

ஜெயலலிதாவின் பெரிய பலமே பெண்கள் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கைதான். 1991-1996 அராஜக ஆட்சி, நீதிமன்றத் தண்டனை, தொடர்ந்து அவரது ஆட்சியின் மீது வைக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகள், குழறுபடியான முடிவுகள் எல்லாவற்றையும் மீறி அவர் நிலைத்து நிற்கப் பெண்கள் ஆதரவு அவருக்குப் பெரும் உறுதுணை யாக இருந்தது. ஜெயலலிதா மரணத்தைத் தொடர்ந்து சமூக வலைதளங்களில் எழுதப் பட்ட பல ஆயிரக்கணக்கான பதிவுகளில் இது வெளிப்பட்டது.

(அடுத்த இதழில் தொடரும்)

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 . 724 . 7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## பொதுவாக ஏற்படும் நோய்கள்


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*




ஒருவர் உடற்பயிற்சி செய்யும் போது எதனை நாம் கையாளவேண்டும் என்பதை ஓரளவு அறிந்து கொள்வது உடல் நலத்திற்கு நன்மை பயக்கும். பயிற்சி செய்யும் போது ஒவ்வொரு பயிற்சிக்கும் இடையில் ஓய்வு முக்கியமாக அமைய வேண்டும். அப்படி இன்றி உடற்பயிற்சி எடுத்தால் ஒருவரின் உடல்நிலையில் அளவிற்கு மிஞ்சிய சோர்வு, களைப்பு, பசியின்மை, தூக்கமின்மை, வழமையாக உள்ள எடை குறைவு, அடிக்கடி தாக்கத்தினால் நோய் ஏற்பட ஏதுவாகலாம்.

அளவிற்கு மிஞ்சிய உடற்பயிசியால் சலத்தில் (சிறுநீர்) இரத்தம் கலந்து வெளியேறலாம். வெயில் வேளையில் உடற்பயிற்சி செய்தால் உடல் தளர்ச்சி ஏற்பட்டு வாந்தி எடுக்கும் நிலையும் வரலாம் என ஆய்வு மூலம் அறியமுடிகின்றது. எனவே பயிற்சி முறையைக் கையாளுவது நன்மை பயக்கும்.

சிலரை நாம் பார்க்கும்போது இருந்தாற் போல் தங்கள் கைகால்களை உதறுவார்கள். இந்நிலை அதிக அளவு மது பாவிப்போருக்கு ஏற்படுதுண்டு. அதாவது மதுவில் உள்ள நச்சுப்பொருள் சிறுமூளையைப் பாதிப்பதினால் ஏற்படுவதாகும். மற்றும்



கல்லீரல், சிறுநீரகம் நோயினால் பழுதுபட்டாலும் கால்கை உதறல் தன்மை தென்படும். மதுவை தொடர்ந்து பாவித்து வந்தவர் வயது முதிர்ந்த பின் மதுவை நிறுத்திய பின்னரும் கைகால் உதறல் தென்படும்.

இந்நிலைகள், வைத்தியர்களிடம் செல்லும் போது பரீட்சித்து காரணத்தை இலகுவில் கண்டறிந்து கொள்வர். தகுந்த ஆலோசனைகளையும் பராமரிப்பு நிலையையும் கூறிக்கொள்வர்.

சிலருக்கு தலைவலி அடுத்தடுத்து வருவதுண்டு. இதற்கான காரணத்தை அறியும் போது முக்கிய உறுப்புகள் பாதிக்கப்பட்டிருக்கலாம். இரத்த அழுத்தத்தினால் நமது மூளையைச் சுற்றியுள்ள சவ்வுகள் தாக்கப்பட்டு நோய் வந்தால் அல்லது சிறுநீரகம், கல்லீரல் போன்ற இடங்களில் நோய்நிலை காணப்பட்டாலும் தலைவலி ஏற்படக் காரணமாக அமையலாம்.

எதற்கும் இந்நிலைப்பட்டோர் தாமதிக்காமல் வைத்தியரைச் சந்திப்பது நன்று.

சிலரை நாம் பார்க்கும் போது நித்தம் செருமலுடன் இருமிக் கொண்டு இருப்பர். அத்துடன் அவர்களின் கண்களில் இருந்து நீர் சொரிந்த வண்ணம் இருக்கும். பின் சோர்வுற்றவர்களாகக் காணப்படுவர். இதனால் உடல் தாக்கமும் ஏற்பட இடம் உண்டு. அதாவது நாம் இருமும் போது மூச்சுக் குழாய் சுத்திகரிக்கப்படுகின்றது. அடைப்பு நிலை காணுமிடத்து நிவிர்த்தி செய்கின்றது. மூச்சுக்குழாயினுள்ளே உள்ள நீர், சளி, இளகிய அழற்சிப் பொருள் யாவும் வெளியேறும். கட்டிப்பொருட்கள் 'செதில்' போன்று உள் தங்கி விடுவதும் உண்டு. இந்நிலையில் அதனை அகற்றச் சிரமம் ஏற்படலாம். உரிய மருந்துகளைப் பாவிக்கப் படிப்படியாகக் குணம் கிடைத்து விடும். பராமுகமாக இருந்தால்.

இருமும் போது தேவைப்படும் காற்று நுரையீரலுக்குச் செல்லாது. இரத்தத்திற்குரிய கரியமலவாயுவின் அளவு குறையத் தொடங்கும். இதனால் சிலருக்கு தொய்வு (இழுப்புவியாதி) போன்ற வியாதியும் ஏற்படலாம். கரியமலவாயு குறைவினால் மூளைப் பகுதியும் தாக்கப்படும் நிலையும் வரலாம் எனவும் அறியமுடிகின்றது. மீண்டும் இருமுவதினால் தகுந்த ஆகாரங்களைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கும். சிலருக்கு இழுப்பு நெஞ்சு வலியும் ஏற்பட

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)




## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

### (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)


- கனி -
416.261.1348
ptons@hotmail.ca




### பிக்பாங்

ஜோர்ஜ் லெமைற்ரா (Georges Lemaitre) என்பவர் பற்றி அறிந்திருக்கிறீர்களா? இவர் பெல்ஜியம் நாட்டின் மதகுரு. விஞ்ஞானி யும் கூட. அக்கால அறிவியல் உலகின ரால் அதிகம் அறியப்படாதவர். 9 வயதாக இருக்கையிலேயே மதகுருவாகவும் அதே நேரம் விஞ்ஞானியாகவும் வரவேண்டும் என விரும்பியவர், அதேபோலவே வந்தும் காட்டினார்.

இறை நம்பிக்கையும் விஞ்ஞான விடயங் களையும் ஒப்பிட்டுப் பார்க்கப்படக் கூடா தவை என்பது இவரது கருத்து. பல அறி வியற் கருத்துக்களைத் துணிச்சலாக முன்வைத்தவர். இந்நாளின் அகிலவியலின் (Cosmology) முக்கியக் காரணியாக இருப்பவர் இவர்தான் எனக் கூறலாம். போலந்தின் நிக்கலஸ் கொப்பநிக்கஸ் என்ற மதகுரு எப்படி கதிரவமையக் கொள்கையை உலகினருக்கு அறிமுகப் படுத்தினாரோ அவ்விதமே லெமைற்ராவும் பிக்பாங் கொள்கையை எங்களது புடவி யின் (பிரபஞ்சத்தின்) ஆரம்பமாக அறி-முகப்படுத்தி அறிவியல் உலகினரிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர்.

மதவாதிகள் விஞ்ஞானத்திற்கும், விஞ்ஞா னிகளுக்கும் எதிரானவர்கள் என்ற கருத் துப் பொதுவாகவே நிலவுகிறது. இக்கருத் தானது மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேலை நாட்டின் மதகுருமார் பரம்பரை பரம்பரையாக வருபவர்கள் அல்ல. மதகுரு என்ற நிலையை அடைவதற்குப் படித்து அதற்கான பட்டமும் பெற வேண்டும்.

படிப்பும் அப்படி இப்படியல்ல, எல்லாத் துறைகளிலும் சாதாரணமாகவேனும் பாண் டித்தியம் பெற்றிருக்க வேண்டும். அப்படி யானவர்கள் தான் மதகுருக்களாக வர முடியும். அதாவது, இதற்கெனப் படித்தவர் கள்கள் தான் மதகுருமாராக வரமுடியும். இந்தப் படிப்பானது அவர்களைப் புடம் போடச் செய்துதான் இருக்கும்.

கலிலியோ கலிலியிற்கும் ஆதரவாக அவ ரது காலத்துப் போப்பாண்டவர் இருந்திருக் கிறார் என்பதை வரலாறு காட்டுகின்றது. கலிலியோவைத் தண்டித்த தும் மதபீடம் தான். துலக்கமில்லாத இறை நம்பிக்கை களும் வரட்டு மரியாதைகளும் தான் விஞ்ஞானத்தை மதங்களுக்கு எதிரானவை எனக் காட்டுகின்றன. எனது நோக்கம் மதங்களையும் விஞ்ஞானத்தையும் ஒப்பி டுவதில்லை. அந்த மூன்று நிமி டங்களை விளங்கிக் கொள்வதுதான். நான் அதிலி ருந்து வழுவவில்லை. இருப்பினும்

எனது மனதில் எழுபவற்றையும் உங்களு டன் பகிர்ந்து கொள்ளுகிறேன்.



சரி, விடயத்திற்கு வருகிறேன். ஜோர்ஜ் லெமைற்ரா அற்புதமான விஞ்ஞானி. பேரண்ட இரகசியங்களை அறிவதில் ஆர்வ மானவராக இருந்தார். அதற்கு அவரது கணித விஞ்ஞான அறிவுகள் துணை நின்றன. அயன்ஸ்ரைன் தனது பொதுச் சார்புக் கொள்கைக்கான சமன் பாடுகளை 1916ம் ஆண்டிற் கொடுத்திருந்தார். அச் சமன்பாடுகளின் தீர்வுகள் இன்னமும் முழு மையாகப் பெறப்பட வில்லை. அயன்ஸ்ரை னும் தனது சமன் பாடுகளில் இருந்து, ஈர்ப்பிற்கான விளக்கத்தினையே (பேரண்ட நாற்பரிமாண வெளியின் வளைவே ஈர்ப்பிற் குக் காரணம் என்பதனை) முதலில் காட்டி யிருந்தார்.

பின்னராகப், பேரண்டம் விரிவடைந்து கொண்டு செல்கின்றது என்பதனையும் தனது சமன்பாடுகளின் தீர்வில் இருந்து பெற்றுக் கொண்டார். பேரண்டம் விரி-வடைந்து கொண்டு செல்கின்றது என்பது 1930களிலேயே காட்டப்பட்டது. ஆனால் லெமைற்ரா தனது கணிதத்தின் ஆற்றலி னால் 1925களில் இதனை நிறுவி, 1927லே பேரண்ட விரிவு பற்றி வெளியிட்டதனை விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் அந்நேரத் தில் அதிக கவனத்தில் எடுத்திருக்க வில்லை. அவரும் அது பற்றிக் கவலை யடையவில்லை. தொடர்ந்து தனது கவனத்தினைப் பேரண்ட விரிவு பற்றிய விடயத்தில் செலுத்தி வந்த வேளையில் தான், பேரண்டம் விரிவடைந்து கொண்டு செல்கின்றது என்றால், விரிவின் ஆரம்பம் ஒன்று இருக்க வேண்டும் அல்லவா என்ற எண்ணம் அவருக்குத் தோன்ற, பிக்பாங் என்ற கருத்து உதயமாயிற்று. ஜோர்ஜ் லெமைற்ரா, பேரண்டத் தோற்ற நிகழ் வினைப் பிக்பாங் என்று கூறவில்லை. எமது பேரண்டம் மிகவும் அடர்த்தி கூடிய, வெப்பநிலை கூடிய, ஒரு புள்ளிப் பொருளாகத், திடீரெனப் பெரிய இரைச்சலு டன் வானவேடிக்கை நிகழ்வு போன்ற ஒன்றுடன் தோன்றியது எனக் கூறியிருந் தார். எந்தவொரு வானவேடிக்கை நிகழ் வோ, அல்லது வானத்தில் தோன்றுகின்ற வெளிச்ச நிகழ்வுகளோ இந்த பிக்பாங் கிற்கு நிகரானது இல்லை என அதனை வர்ணித்தும் இருந்தார்.

பெருத்த ஒலியினைப், பெரும் இரைச்சல் என அவர் குறிப்பிட்டதைத்தான் மற்ற விஞ்ஞானிகள் பேரொலி எனப் பொருள் தரும் பிக்பாங் (Big Bang) என அழகு செய்ய, அதுவே பின்னர் நிலைத்து விட்டது. இந்த பிக்பாங் என்பது என்ன வென்பது யாருக்குமே தெரியாத ஒன்று.

எங்களில் சிலர் பெருவெடிப்பு என்கிறார் கள். ஆரம்பப் பேரண்டத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளின் மொத்த வெளிப்பாடாகவே இக்கருத்து அமைந்திருக்கும் என நம்ப முடிகின்றது. பேரண்ட விரிவு, அதனுள் பீறிட்டுக் கொண்டு வந்த சக்தி என்பவை கருத்தில் கொள்ளப்பட, ஏதோ ஒன்று வெடித்துத்தான் பலத்த ஒலி எழுந்து, அதிலிருந்து சக்தியும் பேரண்டத்துள் ஓடி வந்திருக்க வேண்டும் என்ற மேலெழுந்த மான எண்ணம் எழுந்து பெருவெடிப்பு என்ற பொருளுக்கு வித்திட்டிருக்க வேண்டும்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் பிக்பாங் நிகழ்வு ஒரு வெடிப்பாக இருக்க முடியாது என்பது வேறு சில வல்லுனர்களின் முடிவாக இருக்கின்றது. இதனைப் பெருவெளிப்பு எனக் கூறலாம். பிக்பாங்கை அல்ல, பிக்பாங் நிகழ்வினை யே பெரு வெளிப்பு எனக் கருதலாம். இது பற்றிச் சற்று விளக்கமாகப் பின்னர் பார்ப்போம். 1370 மில்லியன் ஆண்டு களுக்கு முன்னர் ஏதோ ஒரு வலிமையான நிகழ்வின் காரணமாக, எப்படியோ இந்தப் பேரொலி எழுந்து விட்டது. இப்பேரொலி வெறுமையாகத் தோன்றவில்லை. இப் பேரொலி கூடவே ஒருமமும் தோன்றியது. இந்த ஒருமத்தின் பரிணாம வளர்ச்சிதான் எங்களது பேரண்டம்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

*HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING*

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*



MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228

# அடக்கக் கூடாதவை!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm

ஆத்திரத்தை அடக்கினாலும் மூத்திரை அடக்கக்கூடாது என்று ஒரு பழமொழி உண்டு. அது அதற்கு மட்டுமன்றி இன்னும் அடக்கக் கூடாத பல விடயங்கள் இருக்கின்றன இதோ இங்கே அவை.

1. சிறுநீர் - இயற்கையாக காலாகாலத்தில் வெளியேற்ற வேண்டிய சிறுநீர் அடக்கி வைக்கப்படும்போது வயிற்றில் அபாணவாயு சேரும். மார்புவலி, எரிவு, வயிறு குற்றல், சிறுநீரகக் கல் உருவாகுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

7. இருமல் - உடல் நலம் பாதிக்கப்பட்டு ஏற்படும் இருமலை அடக்கினால் மார்புவலி ஏற்படும். இருமல் மூலமாக வெளியேறும் கழிவுப்பொருளான சளி போன்றவை வெளியேறாது. அது உள்ளே தங்கி நோய் அதிகமாகும். ஆஸ்துமா போன்ற நோய்கள் உருவாகும்.

8. இளைப்பு - இளைப்பை அடக்கினால் உடலில் அதிக வெப்பம் உருவாகும். இதன் காரணமாக மயக்கம் வயிற்றுப்புண், மூல நோய், ஒற்றைத் தலைவலி போன்ற வியாதிகள் உருவாகும்.

9. கண்ணீர் - கண்ணீரை அடக்குவதால் கண்கள் பாதித்து கண்நோய் ஏற்படும். தலைவலி, தலைப் புண்கள், தலைசுற்றல், மனச்சோர்வு போன்ற பாதிப்புகள் உருவாகும்.

10. சுவாசம் - சுவாசம் நடக்கவில்லையென்றால் மனிதன் உயிர் வாழ முடியாது. அதுவே உயிர்வாழ உடலுக்குத் தேவையான



2. தும்மல் - நாம் தும்மும் போது மூக்கு சுவாச பாதை நுரையீரல் போன்றவற்றிலிருந்து நமக்கு ஒவ்வாத பல பொருட்கள் வெளியேறுகிறது. எனவே தும்மலை அடக்குவதால் உடலில் பல பாதிப்புகள் ஏற்படுவதுடன் இடுப்புவலி ஏற்படும், இதயத்துடிப்பை பாதிக்கச் செய்யும்.

3. மலம் - நாம் சாப்பிடத்தக்க உணவுகள் ஜீரணம் ஆனபின் அதன் கழிவுகளை மலக்குடல் வெளியேற்றுவது இயற்கையான செயல்பாடு தான். அதை தடுக்கும்போது தலைவலி, வயிற்றுவலி, வயிற்றுப்பருமல், எடைகூடுதல், புத்தி மந்தம் போன்ற பாதிப்புக்கள் ஏற்படும்.

4. கொட்டாவி - கொட்டாவியை அடக்கினால் வயிறு மந்தம், அஜீரணம், மனச்சோர்வு ஏற்படும். வேளாவேளைக்கு உணவருந்தாது அலட்சியமாக இருந்தால் அல்சர் நோய் ஏற்படும். வாதநோய் தானாகவே வரும், உடல் பலம் குறையும். சோம்பல், அசதி ஏற்படும். போதிய ஊட்டச்சத்து உடலுக்கு கிடைக்காமல் நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்து பலவீனமடைவார்கள்.

6. தாகம் - தாகம் ஏற்படும்போது அதை தணிக்கவில்லையென்றால் உடலுக்குத்தேவையான நீர்ச்சத்து குறைந்து சோர்வு, அஜீரணம் ஏற்படுவதுடன் தொண்டை வறண்டுபோகும். தண்ணீர் அருந்தாமல் இருந்தால் உடல் சூடு அதிகமாகும். ஜீரண உறுப்புகள் பாதிக்கப்பட்டு கண் பஞ்சடையும், காது குடையும், மயக்கம் ஏற்படும், சிறுநீர் சரியாகப் பிரியாது, மலச்சிக்கல் ஏற்படும், உடல் ஆரோக்கியம் கெட்டு உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும்.

பிராணசக்தியை அளித்து உயிர் காக்கின்றது. இந்தச் சுவாசம் தடைப்பட்டால் வயிற்றுப் பொருமல், அஜீரணம், மார்பு வலி, இருமல், சுரம், நரம்புத்தளர்ச்சி, மயக்கம் போன்றவை ஏற்படும்.

11. அபாணவாயு - (மலக்காற்று) - அபாணத்திலிருந்து வெளியேறும் வாயுவை தடை-செய்தால் அது மேலெழுந்து உடலின் பல பகுதிகளுக்கும் பரவி தீராத வலியை ஏற்படுத்தும். இதன் மூலம் நெஞ்சுவலி, பசியின்மை, மலச்சிக்கல், கை, கால் குடைச்சல், மூட்டு வலிகள், தீராத உடல் உபாதைகள் போன்றவைகள் ஏற்படும்.

12. தூக்கம் - ஓய்வு, உணவு, உழைப்பு இந்த மூன்றும் சரி அளவோடு இருந்தால்தான் மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியும். எனவே நாள் முழுவதும் உழைத்து சோர்ந்துவிடும் மனிதன் தூக்கம் என்ற ஓய்வின் மூலம்தான் மறுபடியும் புத்துணர்ச்சியடைந்து அடுத்த நாள் தனது காரியங்களை சுறுசுறுப்புடன் செய்து முடிக்கின்றான். எனவே தூக்கம் என்பது மனிதனுக்கு முக்கியமானது. தூக்கம் என்பது ஒரு மருந்து. இதன்மூலம் பல வியாதிகள் மறைகின்றன. உடல்சோர்வு, மற்றும் மன இறுக்கம் என்பன குறைகின்றன. ஆழ்ந்த தூக்கம் என்பது ஒரு விலை மதிப்பற்ற செல்வம்.

ஆரோக்கியமான உடல் அமையவும், கொடிய நோய்களிலிருந்து நம்மை பாதுகாக்கவும், மகிழ்ச்சியான வாழ்விற்கும் மேற்குறிப்பிடப் பட்ட 12 விடயங்களையும் எந்த சமயத்திலும் அடக்கி வைக்காது நடந்து கொள்வது அவசியம்.

CICS
Centre for Immigrant & Community Services

புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம் வழங்கும் சேவைகள்

பெண் குடிவரவாளர்களுக்கு இலவச குழந்தை வளர்ப்புப் பட்டறை

1 ஆவது கூட்டம்: குழந்தைகளுடன் உறவை ஏற்படுத்துதல்: அரவணைப்பும் மற்றும் சேர்ந்திருத்தல்
2 ஆவது கூட்டம்: வளரும் குழந்தைகளுக்கான சத்துஉணவு
3 ஆவது கூட்டம்: ஒன்ராறியோ பாடசாலை அமைப்பு முறை
4 ஆவது கூட்டம்: பள்ளி அறிக்கை அட்டையை புரிந்துகொள்ளுதல்

காலம்: செவ்வாய்க்கிழமை, தை 17, 31 மாசி 7, 14 2017
நேரம்: 2:30 to 4:30pm
மொழி: ஆங்கிலம்
இடம்: புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம்
7220 Kennedy Road, Unit-5, Markham, ON L3R 7P2
பதிவுக்கும் விளக்கம் அறிவதற்கும் அழையுங்கள்:
905-479-7926/ 905-305-4124/ 905-415-9763
(19 மாதங்கள் முதல் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தை பராமரிப்பு பங்கேற்கும் தகுதியுடையவர்களுக்கு வழங்கப்படும்)

பெண்களுக்கான தொண்டர் பயிற்சித்திட்டத்தில் பங்குபற்றுவதால்

✓ உங்கள் ஆங்கில திறனை அதிகரித்துக்கொள்ள
✓ புதிய பெண் குடிவரவாளர்களுக்கு வழிகாட்டியாக அத்துடன் தொண்டர் சேவை புரிய
✓ கனேடிய வேலை அனுபவம் பெற
✓ சுயவிபரக் கோத்தை வளப்படுத்த
✓ பயிற்சி சான்றிதழை பெற்றுக்கொள்ள

மொழி: ஆங்கிலம்
நேரம்: 12:30-2:30pm ஜனவரி 20, 2017 to பெப்ரவரி 24, 2017 (வெள்ளிக்கிழமைகளில்)
இடம்: புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம்
7220 Kennedy Road, Unit-5, Markham, ON L3R 7P2
பதிவுக்கும் விளக்கம் அறிவதற்கும் அழையுங்கள்:
905-305-4124 or 905-415-9763

✓ YRT பஸ் டிக்கெட் தகுதியுள்ள பங்கேற்பாளர்களுக்கு கிடைக்கும்
✓ 19 மாதங்கள் வயது முதல் 12 ஆண்டு வரை உட்பட்ட குழந்தை பராமரிப்பு பங்கேற்க்கும் தகுதியுடையவர்களுக்கு வழங்கப்படும்

பெண்களுக்கு இலவச யோகா வகுப்புகள்
வாருங்கள் வந்து யோகாவின் நன்மைகளை பகிர்ந்துகொண்டு பயனடையுங்கள்!

மொழி: ஆங்கிலம்
நேரம்: ஒவ்வொரு செவ்வாய் கிழமையும், பெப்ரவரி 28, 2017 வரை (10:00am - 11:00pm)
ஒவ்வொரு புதன் கிழமையும், ஜனவரி 18, 2017 முதல், பெப்ரவரி 15, 2017 வரை [2:30pm - 3:30pm]
இடம்: புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம்
7220 Kennedy Road, Unit-5, Markham, ON L3R 7P2
பதிவுக்கும் விளக்கம் அறிவதற்கும் அழையுங்கள்:
905-479-7926 Ext. 3201 / 3202 or 905-415-9763

தயவுசெய்து உங்கள் நிரந்திர குடிவரவாளர் அட்டையை இந்த கூட்டங்களுக்கு கொண்டு வரவும்

Immigration, Refugees and Citizenship Canada
Immigration, Réfugiés et Citoyenneté Canada

# திருமணத்தினூடாகக்....

13ஆம் பக்கத்தொடர்ச்சி

• இவ் இரு வருடங்களுக் குள் பிள்ளை பிறந்தால் இவ் இருவரில் ஒருவர் நாடு கடத்தப்படும்போது அந்தப் பிள்ளையும் பாதிக்கப்பட வேண்டிவரும்.

• ஸ்பொன்ஸர் பண்ணியவரும் தமது துணை வரை இவ் அதிகாரத்தினை வைத்து மிரட்டி ஆதிக்கம் செய்ய வழிவகுக்கும்.

கனேடிய மத்திய அரசின் சட்டங்களை உருவாக்கும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் தமிழர்களின் பிரதிநிதி திரு. ஹரி ஆனந்தசங்கரி அவர்களும் இந்த மசோதாவினை ஆதரித்ததுடன் திருமண ஸ்பொன்ஸரில் கனடா என்ற இந்தப் புதிய நாட்டினுள் வந்து வேதனைகள் சோதனைகளை எதிர்கொண்ட தமிழ் பெண்களின் பரிதாப நிலைமைகளை தமது கடந்தகால சட்டத்தரணி தொழிலில் தாம் சந்தித்தாக குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் திருமண உறவில் ஸ்பொன்ஸர் பண்ணியவருக்கு நிதியியல் ரீதியாக மூன்று வருடங்கள் பொறுப்பு உள்ளது என்பது இன்னொரு சட்டநிபந்தனை ஆகும்.

இம் மூன்று வருடகாலத்தினுள் மற்றவர் அரச இலவச சமூக உதவிப் பணம் எடுத்தால் ஸ்பொன்ஸர் பண்ணியவரின் தலையில் சுமையாக வந்து சேர்ந்துவிடும்.

"Russian bride leaves elderly man with $25,000 welfare bill" CBC news Oct. 22, 2012 என்ற செய்தியும் கனேடிய ஆங்கில ஊடகத்தில் வெளியாகியிருந்தது. ($25,000 டொலர் சமூக உதவிப் பணம் பெற்ற தொகையினை முதியவரிடம் சுமத்திய ரஷ்ய நாட்டு மணமகள்)

## 2. கனடாவில் குடியேறுவதற்காக பணம் கொடுத்துத் திருமண மோசடிகள் செய்வது!

கனடாவுக்குப் 'மாணவர் விசா' (Student visa) அல்லது 'உல்லாசப் பிரயாணிகள் விசா' (Tourist visa) என்பவற்றில் பலரும் பல நாடுகளிலிருந்தும் தற்காலிகமாக வந்து போகின்றனர்.இப்படி வருபவர்கள் கனடாவில் நிரந்தரமாகக் குடியேற விரும்பினால் கையாளும் இலகுவான மோசடி வழி.

'பணப் பரிமாற்றம்' என்ற ஒப்பந்தத்தில் ஒரு பதிவுத் திருமணம்.
அடுத்த கட்டம் இலகுவாக ஸ்பொன்ஸரில் 'நிரந்தர வதிவுரிமை' கிடைக்கும். அடுத்த மூன்றாவது கட்டமான ஒப்பந்தப்படி பரஸ்பர விவாகரத்து. 'Project honey moon' என்னும் திட்டத்தின் கீழ் கனேடிய குடிவரவு உளவுப் பிரிவினர் அல்பேட்டா மாகாணத்தில் 39 மோசடிப் பேர்வழிகளை அண்மையில் கைது செய்தனர் என்ற செய்தி வெளியாகியிருந்தது.

சீனா, இந்தியா, பாகிஸ்தான், வியட்னாம், கம்போடியா, நைஜீரியா, ஹானா, எதியோப்பியா, கஜானா நாடுகளை சேர்ந்தவர்களுக்கு இந்த மோசடிகளை செய்து வெற்றிகரமாக முடித்துக் கொடுப்பதற்கு பல முகவர் நிலையங்கள் செயல்பட்டு பிடிபட்ட செய்திகள் ஊடகங்களில் வெளிவந்திருந்தது.

"நான்கு சுவர்களுக்கிடையில் நடைபெறுகின்ற அந்தரங்கங்கள் தவிர, மேலதிகமாக கடிதங்கள், தொடர்புகள், உறவுகள் யாவும் திருமண ஸ்பொன்ஸரில் நிரந்தர வதியுரிமை பெற நிரூபிக்கப் படவேண்டிய விதி" என இதில் அனுபவங்களை எதிர்கொண்டவர்கள் குறிப்பிடுவார்கள்.

'மோசடிகள்' வளர்ந்து கொண்டு போவதனாலேயே இந்தப் புலன்விசாரணைகள் உறுதிப்படுத்த வேண்டும் என்பது குடிவரவு பிரிவினரின் எச்சரிக்கை ஆகும். முன்னைய காலங்களில் 'நிச்சயிக்கப்பட்ட தம்பதி' (Fiancee) என குறிப்பிட்டு இலகுவாக ஸ்பொன்ஸர் செய்யலாம். ஆனால் தற் போது இவ்வாறு மோசடிகளைச் செய்து பிடிபட்டவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது.

திருமண ஸ்பொன்ஸர் என்பது இரண்டு வகை.

ஒன்று கனடாவுக்குத் தற்காலிகமாக வந்தவரை கனடாவினுள் வைத்தும் திருமண அத்தாட்சிகளுடன் ஸ்பொன்ஸர் செய்வது (Inland sponsorship). இரண்டாவது ஏனைய நாடுகளில் உள்ள ஒருவரையும் திருமண அத்தாட்சியுடன் ஸ்பொன்ஸர் செய்வது (Outland sponsorship).

இவ்விரு ஸ்பொன்சர்களையும் கனேடிய குடிவரவுப் பிரிவினர் மோசடியா என ஆராய்ந்து சந்தேகம் தெளிவானால் மட்டுமே அங்கீகரிப்பர்.

# எம்மை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

உண்டு. எனவே தாமதியாமல் வைத்தியர்களிடம் சென்று தகுந்த ஆலோசனைகளைப் பெற்று பரீட்சித்துப் பயன் பெற்றுக்கொள்வது உத்தமமாகும்.

கடல் பிரயாணத்தின் போது வாந்தி, ஓங்காளம் எடுப்பவர்கள் சிலரைக் கண்டுள்ளோம். இதன் காரணத்தை ஓரளவு அறிந்து கொள்வது நன்று எனக்கருதுகின்றேன். நமது காதுகளின் உள்ளே சமப்படுத்தும் நிலையை அவதானிக்கும் போது உள் காதில் உள்ள நிணநீர் ஓட்டத்தில் தாக்கம் ஏற்பட்டு அதன் அகத்தேயுள்ள நரம்புகள் பாதிப்படைவதினால் வாந்தி நிலை ஏற்படுகின்றது.

பொதுவாக வாந்தி ஏற்படும் போது நாம் உண்ட காரப்பொருள்களின் தன்மை மேல் நோக்கி வரும். அத்துடன் உணவை நாம் உண்ணும்போது உள்சென்ற காற்றும் வெளிவரும். இப்படியான வேளையில் உணர்ச்சி அற்ற நிலையும் காணப்படலாம். குழாயின் சுவர்கள் புண்நிலை ஏற்பட இட-மாகலாம். அவ்வேளையில் நெஞ்சில் வலித் தன்மை தென்படும். சிலர் கூறிக் கொள்வர் பசியில்லை. துர்நாற்றம், ஏப்பம் ஏற்படுவதாக இதன் காரணத்தை ஆராயும் போது உரியவரின் நாக்கில் ஏற்பட்ட மாற்றநிலை




அல்லது உள்ளெடுத்துக் கொண்டால் அதன் அகத்தேயுள்ள நரம்புகள் தாக்கப்பட்டு உமிழ்சுரப்பிகள் சுரக்கும் நீர் வரட்சியடைந்துவிடுதல். நாவில் வெடிப்பு நிலைகாணப் பட்டாலும் வருவதற்கு இடம் உண்டு. மற்றும் இரைப்பை சிறுகுடல் (சீரணப்பகுதி) போன்றவற்றில் அவியல், புண்நிலை காணும் இடத்து உணவை உண்பதற்கு விருப்பம் இன்றியிருப்பதுடன் பசிக்கும் தன்மையும் அற்றுவிடும். இவற்றை உரியவர் நினைத்து, நினைத்து மனநிலை பாதிக்கக்கூடிய நிலையும் ஏற்படலாம். அடுத்து மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கும் பசித்தன்மை இருக்காது என்பதையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் எதற்கும் வைத்திய பரிசோதனை இன்றியமை யாதது.

சில வயதானவர்களுக்கு இறுதிக்காலத்தில் ஒரு கை, கால், வணங்கமுடியாதநிலை ஏற்படுவதுண்டு. அவ்விடத்தில் விறைப்புத் தன்மையும் தென்படும். இதற்கு காரணத்தை ஓரளவு அறிந்து கொள்வது முக்கியமாகும். அதாவது இரத்த நாளங்களில் அயல் பொருட்கள் சென்றால் அல்லது இரத்தம் கட்டிகொள்ளும் நிலை ஏற்பட்டிருந்தால், உடல்நிலையில் இரத்த நாளங்கள் தடைப் பட்டு மூளைப்பகுதி தாக்கப்பட்டு உரிய இடத்திற்கு உரியவேலையைச் செய்ய முடியாமல் போய்விடும். உ+ம் மூளையின் வலது பக்கம் தாக்கநிலை ஏற்பட்டால் உடம்பின் இடது பக்க கால், கை விறைத்து வழங்கமுடியாத நிலை ஏற்படும். இந்நிலை ஏற்பட்டால் தாமதிக்காமல் வைத்திய முறையைக் கைக்கொண்டால் தாக்கம் இன்றித் தப்பித்துக்கொள்ளலாம். இந் நிலைப்பட்டோர் பலர் சித்த ஆயுர்வேத மருந்துகளைத் தகுந்த பத்தியாவனையுடன் கையாண்டு குணமாகி வாழ்ந்துவருவோர், பலர் உண்டு.

கனடாவைப் பொறுத்தவரை காலநிலை தகுந்ததாக அமையாது. அதாவது உரியவருக்கு வைத்தியம் செய்யும்போது 40 நாட்கள் கடும் பத்தியத்துடன் மருந்தை எடுக்க வேண்டும். பின்பு பத்தியம் 14 நாட்கள் மருந்து எடுக்க வேண்டும். விடுபத்தியம் என்பது மருந்து எடுக்கும் போது விடுபட்ட உணவுகளில் 1,2 எடுத்துப்பார்ப்பதாகும். இப்படிக் கையாண்டால் தான் ஏற்பட்ட வியாதியின் நிலை தெரியவரும். எனவே இந்நோய்ப்பட்டோர் இந்தியா, இலங்கை போன்ற இடத்திற்குச் சென்று தகுந்த வைத்தியர்களிடம் காட்டிச் சிகிச்சை பெற்றால் பூரண சுகத்துடன் வாழமுடியும்.

சிலர் புகைப்பிடிப்பதை நாம் நன்கு அறிவோம். இதனால் புற்றுநோயை உண்டாக்கக்கூடிய 'நிக்கோடின்' என்ற நச்சுப் பொருள் நுரையீரலை அடைந்து இதனால் நுரையீரலில் காற்று பரிமாற்றம் உண்டாகும். இடத்தில் நச்சுத்தன்மை பரவி திசுக்கள் பழுதடைகின்றன. இதனால் நுரையீரலில் காற்று தேங்கும் அளவு குறைகின்றன. உடலில் உள்ள ஒவ்வொருதிசுவும் தோன்றி மேலும் அழிந்து கொண்டும் இருக்கும். இந்நிலையில் பாதிக்கப்பட்ட நுரையீரலினால் இதைச் செய்ய முடிவதில்லை, இதனால் மாறுபாடு அடைந்த 'திசு' புற்றுநோயாக உருவாகின்றது என ஆய்வு மூலம் அறிய முடிகின்றது.

காலாராவில் இருந்து, சாதாரண வயிற்றுப் போக்கை கண்டறிவது முக்கியம், காலராவுள்ளவர்களும் வயிற்றுப்போக்கு வெறும் நீராகப் போகும் வாந்தி இருக்கும். மலத்தில் சளித்தன்மை தென்படும். அதிக வாந்தி எடுப்பதினால், நீர் உடலில் அற்றுப்போம். உடல் சூடு குறைந்து விடும். இரத்த அழுத்தம் குறையும். இந்நிலையில் சிறுநீரகம் செயலற்று இருப்பதினால் சிறுநீர் அற்று காணப்படும். சலம் கட்டுப்படும் நிலை ஏற்படும். தகுந்த சிகிச்சை பெற்றால் பயன் பெறமுடியும்.






# தன்னம்பிக்கை



Ranjson K.

வெற்றிபெற்ற ஒருவரின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவர்களின் வெற்றி சுயமுயற்சியால் உருவாக்கப்பட்டது என்பது உறுதியாகத் தெரியும். அவர்கள் தங்கள் வாழ்க்கையை முதன் முதலில் சுறு சுறுப் புடன் ஆரம்பித்தபோது தாங்கள் எடுத்துக் கொண்ட பணியில் சாதிக்க முடியும் என்கிற திறமையின் மீது நம்பிக் கையான, தீவி ரமான மற்றும் உறுதியான எண்ணமும் விசுவாசமும் கொண்டிருப்பதைப் பார்க் கலாம். அவர்களது மனோபாவமும் அவர் களது இலட்சியத்தை அடைவதில் பிடிவா தமாக இருப்பதும் துன்புறுத்தும் சந்தே கங்களும் பயங்களும் அவர்களது பாஸ- தயை விட்டு விலகி இருப்பதும் காணக் கூடியதாக உள்ளது. அவர்களுடைய வாழ்க்கையில் தன்னம்பிக்கையும் விசுவா சமும் எவ்வளவு அற்புதங்களை அதிசயங் களை உருவாக்கியுள்ளன என்பது வியப்பிற் குரியது மட்டுமல்ல ஏன் என்னால் முடியாது? என்ற கேள்வியையும் கூடவே எழுப்புகிறது.

நீங்கள் எவ்வளவுதான் முயன்றாலும் சரி உங்களிடம் நீங்கள் நம்பிக்கை வைக்கா விட்டால் உங்களால் சந்தோஷமாக இருக்க முடியாது. உங்கள் மீது நம்பிக்கை வைக் காவிட்டால் உங்களிட மிருக்கும் எல்லாத் திறமைகளையும் நீங்கள் பயன்படுத்தினா லும் கூட வாழ்வதற்குத் தேவையான பணத் தைவிட அதிகமாக உங்களால் சம்பாதித்து விட முடியாது. எல்லாச் சூழ்நிலையிலும் உங்களைச் மகிழ்ச்சியின் உச்சியில் வைத்திருக்கக் கூடிய ஒரே நபர் சட்ட பூர்வமாக தனது உழைப்பினால் இந்த உலகில் நீங்கள் பெறக்கூடிய எல்லாச் செல்வத்தையும் பெற்றுத்தரக் கூடிய ஒரே நபர் நீங்கள்தான் என்பதை மறக்காதீர்கள்.

இந்த உண்மையை நீங்கள் முழுவதும் புரிந்துகொண்டு விட்டால் ஒரு புதிய ஆக்க பூர்வமான சக்தி உங்களுக்குள் வந்து குடி- கொள்ளும். இதற்கு முன் நீங்கள் உணர்ந்திராத மாபெரும் சக்தியையும் சுறுசுறுப்பையும் நீங்கள் உணர்வீர்கள். உங்கள் மீது நீங்கள் வைத்திருக்கும் தன்னம்பிக்கை மற்றும் நீங்கள் ஆரம்பித்த செயலைச் செய்துவிட முடியும் என்கிற நம்பிக்கையை வைத்துத்தான் வாழ்க்கை யில் உங்கள் சாதனை நிர்ணயிக்கப்படுகி றது. ஆரம்பத்திலேயே உங்களை ஒரு தோல்வியாக நீங்கள் நினைத்துவிட்டால் நீங்கள் எந்த நிலையையும் அடையமு- டியாது. மேலும் நீங்கள் எடுத்துக்கொண்ட எந்தப் பணியிலும் வெற்றி பெறமுடியாது.

நீங்கள் வெற்றிபெற வேண்டுமானால் உங் கள் எதிர்காலத்தைப் பற்றிய வெற்றிபெறும் சிந்தனையையே எப்பொழுதும் இடைவி



டாது உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்களது பணியில் நீங்கள் சிறப்பாகச் செய்யமுடியாது என்று யாரும் உங்களுக் குத் தெரிவிக்கவோ யோசனை கூறுவதற்கோ இடமளிக்க வேண்டாம். உங்கள் மீதான உங்கள் நம்பிக்கைதான் உங்களது வெற் றிக்கான ஆதாரமாகும். வெற்றி பெற்று முன்னேறு வதைப்போல நடந்து முன்னேறிச் செல்லுங்கள். உங்களைப் பார்க்கும் ஒவ் வொரு வருக்கும் இந்த உணர்வை ஏற்படு த்துங்கள். வெற்றி உங்கள் கண்களிலிரு ந்து உறுதியுடன் ஆவேசமான தீர்மானத் துடன் வெளிப்படுவதற்கு அனுமதியுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் வெற்றியால் உருவாக்கப்பட்டு வெற்றிபெறும் பழக்கம் கொண்டவராக இருப்பதால் உங்களை அதைரியப்படுத்தக் கூடிய எந்த விடயமும் இல்லை என்று எல்லோரும் உணர்வார்கள்.

தன்னம்பிக்கையை நீங்கள் வளர்த்துக் கொள்வதற்கு எடுக்க வேண்டிய முதல் அடி நீங்கள் ஆரம்பிக்கும் எந்த முயற்சியி லும் உங்களால் வெற்றி பெற முடியாது என்ற உணர்வை நீங்கள் கைவிடுவது தான். உங்களுக்கும் உங்கள் தன்னம்பிக் கைக்குமிடையே தடையாக இருக்கும் முக்கிய எதிர்மறை அம்சம் உங்கள் பயம் தான். ஆனால் அறிவியல் பூர்வமாகப் பயத்தை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாகத் துணிச்சலை வளர்த்துக் கொள்வது எப்படி என்று பார்க்கலாம்......




JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON, CONCORD & SCARBOROUGH

- ✓ General Labourers in Bakeries, Laundries & Other Factories.
- ✓ Mixers
- ✓ Window Assemblers.
- ✓ Forklift Opetators.
- ✓ CNC Machine set-up/ Operators.
- ✓ Packagers & Assembly line Workers.
- ✓ Welders MIG & TIG.
- ✓ Wood & Upholstery Workers.

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN & PHOTO ID
AND TALK TO OUR CUSTOMER SERVICE REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

STAFF MASRER INC.
5109 STEELS AVE W. UNIT 105
TORONTO ON. M9L 2Y8
TEL: 416-551-1626
staff.master.inc@gmail.com

STAFF MASTER INC.

# ஜெயலலிதா வழியை ஓபிஎஸ் அரசும் பின்பற்ற வேண்டும்

## பழ. நெடுமாறன்

சிறப்பு நேர்காணல்

**சந்திப்பு : சிவதாணு**

ஈழப் போராட்டம், முல்லைப் பெரியாறு, காவேரி விவகாரம், கூடங்குளம் அணு உலை, மீத்தேன் திட்டம் என தமிழர்களைப் பாதிக்கும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதற்கு எதிராகக் குரல் எழுப்பும் போராட்டக் களம்காணும், தமிழகத்தைச் சேர்ந்த முதல் மூத்த தலைவர், பழ. நெடுமாறன். அவரைச் சந்தித்தோம் 83 வயதிலும் தளராமல் இருக்கிறார். பக்குவமாகப் பதில் அளிக்கிறார்.

**விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக் கிறார் எனத் தொடர்ந்து கூறிவருகிறீர்கள் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் இவ்வாறு கூறுகிறீர்கள்?**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அச்சாணியாகத் திகழ்பவர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன். எனவே, அவரைத் தீர்த்துக் கட்டிவிட்டால் அல்லது அவர் மறைந்துவிட்டார் என தமிழர்களை நம்ப வைத்துவிட்டால் ஈழப் போரை முடிவுக்குக் கொண்டுவந்துவிடலாம் என சிங்கள அரசும் இந்திய உளவுத்துறையான 'ரா'வும் பல முயற்சிகளை செய்துள்ளன. முதலில் இருந்தே இது தொடர்பாகப் பல பொய்ச் செய்திகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பலமுறை பிரபாகரன் இறந்துவிட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. 1984 செப்ரெம்பர் 5ஆம் தேதி முதன்முறையாக சிங்கள ராணுவம் பிரபாகரனைச் சுட்டுக் கொன்றுவிட்டதாக ஒரு செய்தியை வெளியிட்டது. உலகெங்கும் தமிழர்களிடம் இச்செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



நானும் கலங்கிப் போயிருந்தேன். மறுநாள் 6.9.1984. அன்று மதுரையில் உள்ள எங்கள் வீட்டிற்கு முன்னால் ஒரு ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து சிரித்த முகத்துடன் பிரபாகரன் இறங்கி வந்தார்.

இப்போதும், பிரபாகரன் உயிருடன்தான் இருக்கிறார் என எனக்குக் கிடைத்த மிக நம்பகமான தகவல்களின் அடிப்படையில் தான் அவ்வாறு கூறுகிறேன்.

சிங்கள ராணுவத்தில் 3 லட்சம் படை வீரர்கள் இருக்கிறார்கள். பிரபாகரன் உட்பட விடுதலைப் புலிகள் இயக்கத்தை முற்றாக அழித்துவிட்டோம் என தம்பட்டம் அடிக்கும் இலங்கை அரசு ஏன் இந்த எண்ணிக்கையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை? அதற்கு மாறாக மேலும் 1 லட்சம் ராணுவ வீரர்களைத் திரட்டும் முயற்சியில் சிங்கள அரசு ஈடுபட்டிருப்பது ஏன்? இப்போதும் சிங்கள ராணுவ வீரர்களுக்குத் தொடர்ந்து இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுவது ஏன்? ராஜிவ்காந்தி கொலைவழக்கு பட்டியலில் பிரபாகரன் பெயர் ஏன் இன்னமும் நீக்கப்படவில்லை? ஏன் சிங்கள அரசு பிரபாகரன் இறப்புச் சான்றிதழை இந்தியாவுக்கு வழங்கவில்லை? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் சிங்கள அரசோ, இந்திய அரசோ இதுவரை பதில் கூறவில்லை. எப்படிக் கூறுவார்கள்?

**2009 போருக்குப் பிறகு விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு எதிராக ஈழத் தமிழர்களாலேயே பல்வேறு விமர்சனங்கள் வைக்கப்பட்டதே. அவற்றையெல்லாம் கவனித்தீர்களா?**

ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு ஜெனரல் டயர் காரணமல்ல, காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்று கூறுவது போலிருக்கிறது அந்த விமர்சனங்கள் எல்லாம். அபத்தமானது. 2 லட்சம் தமிழ் மக்களின் சாவுக்கும் அங்கு நிகழ்ந்துள்ள பேரழிவிற்கும் சிங்கள ராணுவமும், அவர்களுக்கு ராணுவ ரீதியாக எல்லா உதவிகளையும் செய்த இந்தியா, சீனா, பாகிஸ்தான் உட்பட்ட 20க்கும் மேற்பட்ட நாடுகளுமே காரணம். போரின் இறுதிக் கட்டத்தில் தங்கள் ஆயுதங்களை மௌனிப்பதாக புலிகள் அறிவித்த பிறகும் ஏன் போரைத் தொடர்ந்தார்கள்? இந்தியாவோ ஐ.நா.வோ தலையிட்டு போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியிருந்தால் இந்தப் பேரழிவைத் தடுத்திருக்க முடியும். அதைச் செய்யத் தவறியவர்கள்தான் குற்றவாளிகளே தவிர, புலிகள் அல்ல. நாம் 'எத்தகைய போராட்ட முறையைக் கையாளவேண்டும் என்பதை நம்முடைய எதிரிகள்தான் தீர்மானிக்கிறார்கள்'

(தொடர்ச்சி 35ஆம் பக்கம்...)


ஸ்ரீ துர்க்கா மாதா ஜோதிட நிலையம்
SRI DURGA MATHA ASTROLOGY CENTER
மாஸ்டர் :- தேவராஜ்
MASTER :- DEVARAJ
Kerala (Choddankiri)




ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை புரியும்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டிட் சாயிகுரு சுவாமிஜீ சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள். கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல்கட்டப்படும்.

We do all kinds of Pujas

- கைரேகை • நாமநட்சத்திரம் • கல்வி உத்தியோகம்
- தொழில் வியாபாரம் • வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள் • நீதிமன்ற வழக்குகள்
- பெண்பிள்ளை பெற்றோர் பிரச்சனைகள் • திருமண யோகம்
- குழந்தைப்பாக்கியம் • கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு நாவூறு • ஒன்று கூடுதல்
- சர்ப்ப தோஷம் • கர்ப்ப தோஷம் • கஸ்ட நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்

Black Magic

- Education & Work
- Business Problems
- Marriage Problems
- Love Problems
- Children Mistakes
- Health
- Money Problems
- Enemy Problems
- Evil Affection
- Sexual Problems
- Horoscope
- Face Reading
- Palm Reading
- Family Matters
- Husband & Wife Reationship
- Court Problems
- Law Problems
- etc..

WORLD FAMOUS INDIAN ASTROLOGER CAN HANDLE ANY KIND OF PROBLEMS

OPEN 7 DAYS A WEEK / 647-554-5699
416-906-5959
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை புரியும்
5215 Finch Ave. East, Unit #258,
Upstairs, Scarborough ON M1S 0C2
GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)


Detached Bungalow House In Oshawa
FOR SALE
RENOVATORS DREAM PROJECT AND GOOD INVESTMENT PROPERTY
| Bedrooms: 3 + 1 | Washroom: 1 |
Separate Entrance, Excellent Location, Easy access to HWY 401,
Convenience Stores, School, & Park
Don't miss out!
Only $389.000
Lourdson Antonipillai, B.Sc
Sales Representative
Dir: 416-738-8824
Email: lourdson29@gmail.com
HomeLife/Future
Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr.
Markham, ON L3S 4N8
Bus: 905-201-9977 Fax: 905-201-9229


OPEN HOUSE
Sat & Sun. 2pm-4pm
1808 -430 Mclevin Ave (Neilson/ Mclevin)
Bedroom: 2
Washroom: 2
Parking: 2
Enclosed Balcony,24 Hrs Security. Gym, Tennis Court, Squash,
Indoor Swimming Pool, And Party Hall. Walking Distance to Shopper
Drug Mart, No Frills , Library , Medical Building, 401 Hwy, Elementary
and High School
Lourdson Antonipillai,B.Sc
Sales Representative
Dir: 416-738-8824
lourdson29@hotmail.com
2016
2015
2014
HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE*
Bus: 905-201-9977 Fax: 905-201-9229
205-7 Eastvale Drive, Markham ON L3S 4N8


BRAND NEW HOMES FOR SALE
Brantford $579,600
Bedrooms:4 | Washrooms:4
Brant $609,900
Bedrooms:4 | Washrooms:4
Beaverton $499,900
Bedrooms:4 | Washrooms:4
Wasaga Beach $317,990
Bedrooms:3 | Washrooms:3
Wasaga Beach $425,000
Bedrooms:3 | Washrooms:2
Georgina $459,900
Bedrooms:3 | Washrooms:3
Midland $414,990
Bedrooms:2 | Washrooms:1
Peterborough $469,900
Bedrooms:2 | Washrooms:2
மேலும் பல வீடுகள், அடுக்குமாடி வீடுகள் விற்பனைக்கு உண்டு.
A. ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com
#1
RE/MAX
Dynasty Realty Inc.,
Brokerage Independently Owned And Operated
8 Shadlock Street, Markham, ON L3S 3K9
Bus: 905-471-0002 Fax: 905-471-7441

# HomeLife /GTA Realty Inc.

GTA Square - 5215 Finch Ave. East,#203 Toronto ON M1S 0C2 416-321-6969



Eddie Woo
Broker of Record/Owner



Justin William
Broker/Manager



Raja Mahendran
Broker/Owner

## 13th annual award ceremony on Dec. 14, 2016.

### TOP PRODUCERS



Siva Sivagnanam



Pravin Patel



Kumar Sinnathamby

### TOP LISTER



Deepak Dani & Vivek Dani

SPECIAL AWARD



Nel Ketha

ROOKIE OF THE YEAR LISTER



Selvi Jeyaraja

TRIDEL RECOGNITION



Judy.G



Gnani.N

CONCORD RECOGNITION



Kula Kulamohan






GRAND OPENING
IN
GTA Square Mall
புதிய நிர்வாகத்தில்
SALE
SALE
SALE
GTA GROCERY &
CONVENIENCE
SALE
SALE
SALE
பாபா ( BABAS) பொருட்கள்
அனைத்தையும் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
Nestomalt
MR. GOUDAS
TABLE SALT
SEL DE TABLE
windsor
Table Salt
Redpath
SUGAR
Unico
Ginger
$5.49
$0.99
$1.29
$1.99
$3.49
$1.29
அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
Open 7 days
Monday - Saturday 9am-9pm
Sunday & Holiday 10am-8pm
5215 Finch Ave. East
Scarborough, ON M1S 0C2
www.gtasquaremall.com
FINCH
MIDDLE FIELD
N
GTA MALL



தமிழ் மரபுத் திங்களில்
அனைவருக்கும் உளம் நிறைந்த
தைப்பொங்கல் வாழ்த்துகள்
VEEDU
REALTY INC.
BROKERAGE
சிறீ சிவசுப்பிரமணியம்
Sales Representative
Veedu Realty Inc.
416-884-3991




வாழ்வின் நீண்ட தேடல்களுக்கான விடை
வாழும் திறன்
How to live according Astro Science
எண்ணங்களால் வாழ்வை வண்ணமயமாக்குவோம்
இயற்கையுடன் இணைந்து இன்புற்று இருத்தலுக்கான தேடல்களும் ஆலோசனைகளும், பயிற்சிகளும் இயற்கையியல் நிபுணர் திரு.கணேஸ் அவர்களால் வழங்கப்படுகிறது.
V.Ganesh
Trainer & Practitioner of Astrology
Life Member Indian Council of Astrological Sciences
தெளிவான சிந்தனைக்கு
உற்சாகமான வாழ்வுக்கு
உடல் நல மேம்பாட்டிற்கு
அமைதியான மனதுக்கு
அண்டவெளிக்கும் எமக்குமான தொடர்பு, எமது உடலுக்கும் இயற்கைக்குமான தொடர்பு, சுவாசம், உணவு, நீர், தொடுகை சம்பந்தமான அறிவு மற்றும் தெளிவு பெற
சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு
V.Ganesh: 647-713-9559
MRS.Raj: 416-726-8055
AGR Arumugam: 416-832-9467
15 Lysander Crt., Scarborough ON M1V 3R2

# செஞ்சீனா பச்சையாகிறதா?

## பயணக் கட்டுரை -3

**- துறையூரான் -**

சென்ற கட்டுரையில் ரியானென்மென் சதுக்கத்திலுள்ள பல கட்டிடங்களில் ஒன்றான ரியானென்மென் கோபுரம் பற்றிப் பார்த்தோம்.

2. ரியானென்மென் வாயில்

இது அனுமதி மறுக்கப்பட்ட நகரின் முகப்பு வாயிலாக அமைந்திருக்கிறது. இது ரியானென்மென் சதுக்கத்தின் வடக்கே அமைந்துள்ளது. இதற்கு முன்னால் சாங்கண் வீதி செல்கிறது. இதன் ஒளிப்படம் 2009இல் எடுக்கப்பட்டது.

கப் பயன்படுத்தப்படுகிறது. இதன் முன்னால்

அரச நகரின் அகழி நீர் நிறைந்து காணப்படுகிறது. தற்போது இது அலங்கரிக்கப்பட்டு, விளக்கேற்றப்பட்ட நீர்த்தாரகைகளுடன் காணப்படுகிறது.

1925 இல் தேசிய அரசாங்கம் ஆட்சியிலிருந்த போது இவ்வாயிலின் மேலே சுன்யாட் சென் மறைந்த பின்னர் அவரின் படமொன்று தொங்க விடப்பட்டது. 1945 இல் ஜப்பானைத் தோற்கடித்த பின்னர் சியாங் கைஷேக் இன் படம் மாட்டப்பட்டது. யூலை 07, 1949 அன்று இரண்டாம் சீனா - ஜப்பானிய யுத்தத்தை நினைவு கோரும் முகமாக சூடே, மாசேதுங் ஆகியோரின்



படங்கள் தொங்க விடப்பட்டன. பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 1ஆம் திகதிக்கு முன்னர் மாசேதுங்கின் படம் மட்டும் புதிதாக மாட்டப்பட்டு வருகின்றது.

இவ்வாயில் முதன் முதலில் செங்கரியான் மென் என அழைக்கப்பட்டது. இது 1420 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது 1457 இல் மின்னலால் தாக்கப்பட்டு முற்றாக எரிந்து போனது. 1465 இல் மிங் பரம்பரையைச் சேர்ந்த பேரரசன் செங்குவா தற்போதுள்ள வாயிலை பல மாற்றங்களோடு புதிதாகக் கட்டுவித்தான். பின்னர் கிங் பரம்பரை காலத்தில் 1645 இல் மீளமைக்கப்படும் வேலைகள் ஆரம்பித்து 1651 இல் முடிவடைந்தன. 300 ஆண்டு களாக இருந்தமையால் இது உடைந்தும் சில இடங்களில் சிதைந்தும் காணப்பட்டது. எனவே செள எண்லாய் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நவீன வசதிகளுடன் மறுசீரமைக்கப்பட்டது.

இக்கட்டிடம் 66 மீற்றர் நீளமும் 37 மீற்றர் அகலமும் 32 மீற்றர் உயரமும் உடையது. இதன் கூரை வழக்கமான இராஜ பரம்பரைக் குரிய அலங்காரங்களைக் கொண்டுள்ளது. வாயிலின் முன்னால் இருமருங்கிலும் இரு சிங்கங்களின் சிலைகள் உள்ளன. சீனப் பண்பாட்டின்படி கெட்ட ஆவிகளிலிருந்து சிங்கம் மனிதரைப் பாதுகாக்கும் என நம்பப்படுகிறது. இத்துடன் வாயிலுக்கு முன்னால் இரு கற்றூண்களும் நிறுவப்பட்டுள்ளன. இவை ஹோரியியாகவோ என அழைக்கப்படுகின்றன.

இவ்வாயிலுக்கு முன்னால் ஒருபக்கத்தில் சிறுமேடையொன்றுள்ளது. இது அனைத்துலகத் தொழிலாளர் தினத்தன்றும் (மே 1ஆம் நாள்) தேசிய நாள் (ஒக்ரோபர் 1ஆம் நாள்) அன்றும் தலைவர்கள் அமர்ந்திருக்

3. சீனாவின் தேசிய அருங்காட்சியகம் (Museum)

இது ரியானென்மென் சதுக்கத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. இது 1959 ஆம் ஆண்டு சீன மக்கள் குடியரசின் 10 ஆம் ஆண்டு நினைவைக் கொண்டாடும் முகமாகத் திறந்து வைக்கப்பட்டது. இது 16 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் முகப்பு நீளம் 1,027 அடியாகவும் உயரம் 130 அடியாகவும் (4 மாடிகள்) அகலம் 489 அடியாகவும் உள்ளன. இதன் மத்தியில் பதினொரு சதுரமான தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கட்டிடம் 4 ஆண்டுகளாகப் புதுப்பிக்கப்பட்டுப் புதுப் பொலிவுடன் மார்ச் 2011 இல் மீண்டும் திறக்கப்பட்டது. புதிதாக 28 காட்சி மண்டபங்களும், நவீன களஞ்சிய அறைகளும் கட்டப்பட்டு 2.2 மில்லியன் தளப் பரப்பைக் கொண்ட மாபெரும் காட்சியகமாக விளங்குகின்றது. சென்ற கட்டுரை யில் நான் குறிப்பிட்டவாறு நீண்ட வரிசையில் நிற்க விரும்பாமல் நாங்கள் எல்லோரும் அடுத்த கட்டிடத்துக்குச் சென்றோம். அத்துடன் எமது நிகழ்ச்சித் திட்டத்தின்படி ரியானென்மென் சதுக்கத்தில் ஒரு நாள் மட்டுமே தங்கியிருக்க முடியும். உண்மையில் இவ்விடத்திலுள்ள கட்டிடங்கள் யாவற்றையும் உள்ளே சென்று பார்ப்பதற்குக் குறைந்தது மூன்று நாட்களாவது வேண்டும்.

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)


TBC Toronto Business College

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



JOB READY PROGRAMS

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
Jobs available in plenty   Earn good salary   Co-op Available

BUSINESS ADMINISTRATION
26 Weeks

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks

MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks

PERSONAL SUPPORT WORKER(PSW)
28 Weeks
Immediate Job Opportunities

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000 or more

PART TIME COURSES
Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting (Simply) & Accpac 2012
Workshops
Food Safety Training
First Aid & CPR

• 100% Instructor Led Training
• Small Class Sizes
• Student Friendly Environment
• Ample Free Parking
• Placement Assistance
• TTC Accessible
• Instructors with over 15 years of Canadian Experience

416-291-5155 / 416 500 5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com   info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# வாழ்க்கைப் பயணங்கள் - 33

"தூங்கிவிட்டேன் போலிருக்கு" என்று தனக்குள் சொல்லியவாறு படுக்கையில் இருந்து விழித்து எழுந்த அமலா முகம் கழுவி விட்டுப் படத்தட்டு முன்னால் இருந்து பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள்.

"என்னைக் கைவிட்டதற்காக சுதாகரனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று நான் ஒருபொழுதும் கடவுளிடம் கேட்கவில்லை. அதுபற்றி எதுவும் எனக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். கடவுளே இவற்றையெல்லாம் மறந்து நான் ஒரு நிம்மதியான புதுவாழ்க்கை வாழ விரும்புகிறேன். எனக்கு நன்மை செய்தவர்களாயினும் சரி, தீமை செய்தவர்களாயினும் சரி கஷ்டப்படவேண்டும் என்று நான் ஒருபொழுதும் நினைக்க மாட்டேன்." என்று நினைத்தவாறு பிரார்த்தனை செய்துவிட்டு தனது வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்.

ஞாயிற்றுக்கிழமை காலை கண்களை விழித்தபோது மணி 7:10ஐ தாண்டி விட்டது. போர்வையை தூக்கிப் போட்டு விட்டுக் குளியல் அறையை நோக்கிப் போனேன். சற்று முன்னர் தான் கண்களை விழித்துப் பார்த்தேன். வானொலிக்கடிகாரம் ஆறேமுக் கால் காட்டியிருந்தது. "இன்னும் கொஞ்ச நேரம்" என்று கண்ணை மூடினேன். அப்படியே அயர்ந்து விட்டேன். எங்கிருந்து தான் இந்த நித்திரை வருகிறதோ தெரியாது. கிழமையில் சனிக்கிழமை மட்டும்தான் வேண்டிய நேரம் நித்திரை கொள்ளக்கூடிய நாள். ஆனால், அன்று மட்டும் ஏழு மணிக்குப் பிறகு எவ்வளவு நேரம்தான் கண்களை மூடிக் கிடந்தாலும் நித்திரையே வராது. அலுவல்களை அவசரமாக முடித்துக் கொண்டு கீழே வந்தபோது, போனகிழமை வகுப்பால் வந்து மூலையில் போட்ட யோகப் பாயைக் காணவில்லை. வீட்டை ஒதுக்கிறேன் என்று சொல்லி, என்னுடைய பொருட்களை முதலில் எடுத்துக் கொண்டு போய் எங்கேயாவது போடுவதுதான், என் மனை வியின் முதல் வேலை. மேலே போய் யோகப்பாயை தேடி எடுத்தபோது, மாஸ்ரர் போனகிழமை தந்த நோட்ஸ் பாயுடன் சுருண்டு போய்க் கிடந்தது, பாயை எடுத்து வெளியே வந்து, காரை ஸ்டாட் பண்ணிய போது, முன் கண்ணாடி பனியில் உறைந்து போய் கிடந்தது, அதை சுறண்டிக், காரை ஹைவேயில் ஏற்றி எக்ஸ்ஸிற்றில் இறக்கி, யோக வகுப்பு நடக்கும் பிளாஸாவை, வந்தடைந்த போது மணி எட்டை அண்மித்து விட்டது. தரிப்பிடத்தில் காரை நிறுத்திவிட்டு யோகா மண்டபத்தை நோக்கிப் பாயுடன் விரைந்த போது, எதிர்த் திசையில் இருந்து கார் ஒன்று வேகமாக "நோஎன்றி" பாதையூ டாக உள்ளே வந்து கொண்டிருந்தது. தெரிந்தோ தெரியாமலோ செய்கிறார்களோ தெரியாது. சிலவேளைகளில் எம்மவருக்குச் சின்னச் சட்டங்களை மதிப்பதில் பெரிய ஆர்வம் கிடையாது போல தோன்றுகிறது. சப்பாத்தை கழற்றி, உள்வாசலில் முன் போட்டுவிட்டு, உள்ளே நுழைந்த போது மண்டபம் ஏறத்தாழ நிறைந்திருந்தது. எல்லோரும் யோகப்பாய் களை விரித்து விட்டு, அருகில் இருப்ப வருடன் குசலம் விசாரித்துக் கொண்டும், குழுக்களாகக் கூடி அந்த வார நடப்புக்களை அலசிக் கொண்டும் இருந்தார்கள். எனது நண்பனின் வற்புறுத்த லினால் தான், முதலில் யோகா வகுப்புக்கு வரத்தொடங்கினேன். எனக்குத் தெரிந்த மட்டில் யோகா என்றால் கால்களை மடக்கித் துடைகளின் மேல் போட்டுப் பத்மாசனம் செய்ய வேண்டும் அல்லது தலைகீழாக நிற்க வேண்டும். ஆனால் இரண்டும் எனக்கு வராது என்பது ஏற்கனவே தெரியும்..



முதல் நாள் வகுப்புக்குப் போன போது, இந்த வயதில் கால்கள் எங்கே வளையப் போகுது என்ற தயக்கம் வேறு, அதை விட மற்ற ஆட்கள் பார்த்துச் சிரிக்கப் போகினம் என்ற வெட்கம் வேறு. எட்டாம் வகுப்பு படிக்கும் போது யோகி ஒருவர் பள்ளிக் கூடம் வந்து திறந்த வெளி அரங்கில், கச்சையுடன் பல ஆசனங்கள் செய்து காட்டினார். நாங்கள் அவரின் கோலத்தைப் பார்த்து சிரிச்சதுதான் மிச்சம், ஆசனங்களைக் கவனிப்பதில் பெரி தாக அலட்டிக் கொள்ளவில்லை. சாப்பாட்டு பந்தியில் இருக்கும் போது, அருகில் இருக்கும் நண்பனைப் பார்த்து சிலதடவைகள் பத்மாசனம் செய்ய முயற்சித்ததாக ஞாபகம். இரண்டாவது கால் ஒரு நாளும் மற்ற துடைக்கு மேல் ஏறவேயில்லை. கிழமையில் ஒருநாள் தான் எங்களது வகுப்பு நடக்கும். சரியாக எட்டு மணிக்கு டாங் என்று மாஸ்ரர் தொடங்கி விடுவார் "நீங்கள் மற்றாக்களைப் போல கட்டிலிலை குறண்டிக் கொண்டு. கிடக்காமல், விடிய எழும்பி குளிருக்கை வகுப்புக்கு வாறதே பெரிய விஷயம். அதை நினைச்சு நீங்கள் பெருமைப்பட வேண்டும்" என்று சொல்லி எங்களை உசுப்பேத்தி விடுவார். ''சரி எட்டு மணி ஆகுது, இனி வகுப்பை நாங்கள் தொடங்குவம்" என்று சொல்லி வகுப்பை ஆரம்பிக்க, வழமையாகப் பிந்தி வாற சில பேர் வரவும் சரியாக இருக்கும். எட்டு மணிக்கு ஆரம்பித்தால், ஒன்பது இருபது மட்டும் மாஸ்டரின் கம்பீரமான குரல், தமிழிலும் ஆங்கிலத்திலும் மாறி மாறி அந்த மண்டபத்தை நிறைத்து விடும். எங்கட வகுப்புக்கு ஒரு வெள்ளை இனத்த வரும் வருவார். அதை விட இரண்டு மூன்று சின்ன பையன்களும், நித்திரை தூக்கத்தோட படுக்கையிலை இருந்து எழும்பின மாதிரி அப்பாவோட வருவினம். அப்பாவின்ர ஆக்கினை போல. அவைக் காகத்தான் மாஸ்ரர் ஆங்கிலத்தில் குரல் கொடுக்கிறார் போலும்.

"இண்டைக்கு நாங்கள் எல்லாமாக எண்பத் தியாறு பயிற்சிகள் செய்யப் போறம்.." என்று சொல்லி மாஸ்ரர் வகுப்பை ஆரம்பிக்கும் போது எம்மால் நம்ப முடியாமல்தான் இருக்கும். ஒரு கணக்கு புலி, ஒரு நாள் எத்தனை பயிற்சிகள் என்று ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்துப் போட்டு, மாஸ்ரர் சொன்னது சரியாகத் தான் இருக்கிறது என்று சான்றிதழ் கொடுத்தார். சூரிய நமஸ்காரத்தில் ஆரம்பித்தார் என்றால் வகுப்பு தியானத்து டன் முடியும். இடை இடையே வித்தியாச மான பயிற்சிகள், ஆசனங்கள் என்று விரிந்துசெல்லும். எழும்புறதும், நிற்கிறதும், குந்துறதும், உருள்கிறதும், படுப்பதும் என்று நேரம் போறதே தெரியாது. அன்றைக்குரிய நோட்ஸ்களை அன்பர் ஒருவர் எல்லோரிடமும் விநியோகித்துக் கொண்டிருந்தார். ஆசனங்கள் செல்லித் தாறது மட்டுமல்லாமல், வீட்டுக்கு கொண்டு போய் வாசிக்கக் குறைந்தது இரண்டு பக்கப் போட்டோ பிரதி செய்த நோட்ஸ் ஸுும் மாஸ்ரர் தந்துவிடுவார். சில வேளைகளில் ஏதும் விசேடமான தகவல் என்றால் ''வீட்டை கொண்டுபோய் கட்டாயம் வாசியுங்கோ, தயவு செய்து குப்பையிலை போடாதேயுங்கோ'' என்று கெஞ்சாத குறையாகக் கேட்டுக் கொள்ளுவார். சில பேர் வகுப்புக்கு வந்த கையோட யோகப்பாயை விரிக்கேக்கை, போன கிழமை கவனமாகப் பாயுடன் சுருட்டி வைத்த நோட்ஸ் கீழே விழுவது கண்டு அசடு வழிந்த தருணங் களும் உண்டு. மாஸ்ரரின் நோட்ஸ்ஸுக் காக, மாமி வாசலில் காத்து இருப்பார் என்று பக்கத்தில் இருப்பவர் சொன்னது ஞாபகத் துக்கு வருகிறது. அவவுக்கு மாஸ்டரின்ற நோட்ஸ் வாசிக்கிறதும் ஒரு பொழுதுபோக்கு போல. நான் வகுப்பிலை மேலோட்டமாக பாக்கிறதை தவிர வீட்டை கொண்டு போய் கவனமாக ஒரு கோப்பில் போட்டு வைப்பேன். எப்பவாது ஆறுதலாக இருந்து வாசிக்கலாம் என்ற நப்பாசைதான். வகுப்புக்கு வராத நாட்களில் தவறவிட்ட நோட்ஸ்களை மாஸ்ரர் அடுத்த வகுப்பில் நாங்கள் சிரசாசனம் செய்யும்போது சத்தம் போடாமல் கால் மாட்டில் வைத்து விட்டுப் போவார். சூரிய நமஸ்காரத்துடன் பயிற்சி கள் தொடங்கும். பயிற்சிகள் தொடங்க முன், இதமான பழைய புதிய சினிமா பாட்டுக்கள், வாத்திய இசையில் மண்டபம் முழுவதும் பரவி விடும். மாஸ்ரர் எங்கை யோ தேடிப்பிடித்து, பழைய காலத்துப் பாடல்களை சிடி யில் கொண்டு வந்து போடுவார். வாத்திய இசை காதில் வந்து சிலரின் கடந்த கால நினைவுகளைக் கிளறிவிடும். தம்மை மறந்து இசையில் லயித்து பாயில் கைத்தாளம் போடுபவர் களும் உண்டு. இந்த மண்டம் கொஞ்சம்

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)


## ஸ்ரீ வெங்கடேஸ்வரர் திருமண மாலை

முற்கட்டணம் இல்லை.

எங்களிடம் எல்லா வகுப்பினருடையதும், பட்டதாரிகள், பட்டதாரிகளற்றவர்கள், சாதாரணமானவர்கள், Divorce ஆனவர்கள் உட்பட அனைவரின் ஜாதகங்களும், படங்களும் எங்களிடம் உள்ளது. இந்தியா, இலங்கை ஆகிய இடங்களிலிருந்தும் மாப்பிள்ளை, பெண் நம்மவர்கள் திருமணம் பேசிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளிற்கு: ராம் அலெக்சாண்டர்

*2 Dallyn Crescent* *647.638.5304*
*brimley and eglinton* *647.389.4130*

## SPACE FOR AVAILABLE

**MIDLAND & LAWRENCE**
**RENT OR LEASE**

Dance/ music/ cultural classes நடத்துவதற்கு spacious place. Inclusive for everything

தொடல்புகளுக்கு:**647.720.7745**

## மணமகன் தேவை

கணவனை இழந்து இரண்டு சிறு ஆண் குழந்தைகளுடன் கனடாவில் வாழ்ந்து வரும் 37 வயதான படித்த மணமகளுக்கு 40 - 45 வயதுக்கு இடைப்பட்ட நற்பண்புகள் கூடிய மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு : **647.715.4025**

## BASEMENT FOR RENT

**MARKHAM AND ELSON**

01 Bedroom basement for rent. possibly make to two rooms.Sep. entrance. 2 Parking, cable, laundry. close to all facilities . Avail. immediately.

**MIDLAND AND EGLINTON**

Brandnew 02 Bedroom basement for rent. Sep. entrance. 2 Parking, cable, laundry. close to all facilities . Avail. immediately.

தொடல்புகளுக்கு: **416.575.5055**

# ஜெயலலிதா...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

என்று சீனத் தலைவர் மாசேதுங் கூறினார். ஈழத் தமிழர்களுக்கு இது முற்றிலும் பொருந்தும்.

**கருணா கைது செய்யப்பட்டுள்ளாரே?**

உலக வரலாற்றில் துரோகிகளுக்கு என்ன நேர்ந்ததோ அது கருணாவுக்கும் நேர்ந்திருக்கிறது.

**ஈழப் பிரச்சனையாக இருந்தாலும் சரி; தமிழக அரசியலாக இருந்தாலும் சரி... திமுகவை எதிர்க்கிற அளவுக்கு அதிமுகவை நீங்கள் எதிர்ப்பதில்லையே, ஏன்?**

தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என காமராசர் கூறியதில், என்னைப் பொறுத்தவரையில், இன்றுவரை எவ்வித மாற்றமும் இல்லை. இரு கழகங்களுக்குமே தமிழகத்தை ஊழல் காடாக்கியதில் பங்குள்ளது. தமிழகத்தின் இயற்கை வளங்கள் இவர்களால் தங்குத் தடையின்றி சுரண்டப்படுகின்றன. இந்தப் போக்கு நீடிக்குமானால் எதிர்கால தலைமுறையினர் பாழ்பட்ட பாலைவனமான ஒரு நாட்டில்தான் வாழவேண்டியிருக்கும். இருவருமே தில்லியில் யார் ஆட்சியில் இருந்தாலும் அவர்களுடன் உறவுகொள்வதில் போட்டா போட்டி போடுகின்றனர். தில்லியின் குடை நிழலில் தங்களுடைய ஊழல் ஆட்சியை எவ்வித தடையுமில்லாமல் நடத்தினால் போதும் என்பதுதான் இவர்கள் நோக்கம்.

**ஜெயலலிதா மறைந்த பிறகு தமிழக நிர்வாகம் எப்படி உள்ளது?**

அமைச்சர்கள் இப்போதும் பொம்மைகளாகத்தான் இருக்கிறார்கள். உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்தும் நமக்குரிய நீரைத் தர கர்நாடகம் மறுத்ததின் விளைவாகவும், பருவமழை பொய்த்துப் போனதின் விளைவாகவும் காவிரிப் பாசன விவசாயிகள் அடைந்துவரும் பெருந்துன்பத்தை நேரில் காணவும், அவர்களின் துயரைப் போக்கவும்கூடச் செயலற்றவர்களாக அமைச்சர்கள் விளங்குவது ஓர் எடுத்துக்காட்டு.



**அந்தக்கால காங்கிரஸ்காரர் நீங்கள் இன்றைய தமிழக காங்கிரஸ் செயல்பாடு பற்றிய உங்கள் விமர்சனம்?**

காமராசர் காலத்தில் காங்கிரஸ் கட்சியில் தொண்டர்களின் கருத்துக்கும் மதிப்பு இருந்தது. இன்று அது சுத்தமாக இல்லை. உள்கட்சி ஜனநாயகம் அறவே கிடையாது. மாநில தலைவர் பதவியிலிருந்து வட்டார காங்கிரசுத் தலைவர் பதவிவரை தில்லியிலிருந்தே நியமிக்கப்படுகிறார்கள். அவ்வாறு நியமிக்கப்படுகிறவர்கள் டில்லி தலைமைக்கு மட்டுமே விசுவாசம் காட்டுகிறார்கள். கீழ்மட்டத் தொண்டர்களையோ மக்களையோ மதிக்கவேண்டிய தேவை அவர்களுக்கு இல்லை. இனிமேலும் தமிழ் நாட்டில் காங்கிரஸ் வளரும் என்பது பகல் கனவு.

**ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான புதிய அரசுக்கு உங்கள் ஆலோசனைகள்?**

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு அ.தி.மு.கவை கட்டிக்காத்து 5 முறை ஆட்சியில் அமர்ந்து புதிய சகாப்தம் படைத்தவர் ஜெயலலிதா. காவிரி, முல்லைப் பெரியாறு போன்ற தமிழகத்தின் உயிர்நாடி சிக்கல்களில் உறுதியான சட்டப் போராட்டத்தை நடத்திய பெருமைக்குரியவர். ஆரம்பத்தில் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தாலும், ஈழத் தமிழர் பிரச்சனைக்குத் தனி தமிழ் ஈழம் அமைவதே தீர்வு என்று தமிழக சட்ட மன்றத்தில் வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றினார். தமிழகத் தின் உரிமைகளை காப்பதிலும் உலகத் தமிழர்களின் நலன்களுக்காக உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதிலும் தற்போது அமைந்துள்ள முதல்வர் பன்னீர்செல்வத்தின் அரசு ஜெயலலிதா காட்டிய வழியை பின்பற்றி நடப்பது அவசியம்.

**தமிழ், தமிழர் நலன் போன்றவற்றை முன்வைத்துத்தான் நீங்கள், வைகோ, ராமதாஸ், வேல்முருகன், சீமான் போன்றவர்கள் அரசியல் செய்கிறீர்கள். ஆனால் ஒரே அமைப்பாக ஏன் உங்களால் சேர்ந்து செயல்பட முடியவில்லை?**

அவரவர்கள் வகுத்துக்கொண்ட வழியில் அவரவர்கள் செயல்படுகிறார்கள். ஒன்றுபட வேண்டிய பிரச்னைகளில் ஒன்றுபடுகிறோம். காலப்போக்கில் இணைந்து செயல்படும் சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கை உள்ளது.




# குருவும்...

034ஆம் பக்கத்தொடர்ச்சி

வசதியானது. ஏறத்தாழ நாற்பது பேருக்கு அளவான மண்டபம். நாலுபக்க சுவர் களோடு பாய்களை வரிசையாகப் போட்டுக் கொள்வார்கள். அதைவிட நடுவில் இரண்டு வரிசைகள் இருக்கும். இந்த மண்டபத் துக்கு மாறியபோது, ஆரம்பத்தில் இடம் பிடிக்கிறது பிரச்சனை ஒன்று இருந்தது. ஊரிலை ரெயி னில் கோனர் சீட் பிடிக்கிறது போல, இங்கேயும் சுவரோடு இடம் பிடிக்கிறதிலை ஒரு சின்ன சந்தோஷம். இப்ப எல்லோ ருக்கும் இருக்கிற இடம் பிடித்துக் கொண்டு விட்டது போலும். சுவரோட இடம் பிடிக்கிற விளையாட்டு எல்லாம் இப்ப இல்லை. இடை இடையே புதிசாக ஆட்கள் வருவினம். ஒவ்வொரு இடமாக மாறி நின்று அசடு வழிந்து, கடைசியில் வரமுடியாத ஆட்கள் மாஸ்ரருக்கு ஏற்கெனவே அறிவித்து இருந் தால், அந்த இடங்களை மாஸ்ரர் பார்த்து விடுவார். காலையில் ஆரம்பமாகும் முதலா வது வகுப்பு என்றதாலோ என்னவோ எங்கட வகுப்புக்கு நல்ல மவுசு. அதைவிட மற்ற வகுப்புக்காறர் சில வேளை கலியாணம், செத்தவீடு போன்ற நிகழ்ச்சிகளுக்கு வெள்ளன போக வேண்டி இருந்தால், எங்கட வகுப்புக்கு வருவினம். ஆனால் எங்கட வகுப்புக்கு எல்லோரும் ஒழுங்காக வருவதால் காலி இடம் கிடைப்பது கடினம், சில பேர் முன்பே மாஸ்ரரிட்டை சொல்லிப் போட்டு வருவினம். சில பேர் செல்லாமல் யோகாப் பாயோட வந்து மாஸ்ரரின் சினத்தைக் கிளப்புவினம். பயிற்சிக்கு வாற ஆட்களில் முக்கால் வாசிக்கு மேல் நாற்பத்து, ஐம்பது வயதைத் தாண்டியவர்கள். சிலரின் மனைவிமாரும் வகுப்புக்கு வருவார்கள். அவர்கள் சுவர் பக்கமாக இருந்து கொள்வார்கள். மாஸ்ரர் சொல்லும் சில வசனங்களுக்குத் தலைவர் கொமன்ற் அடிப்பார். அதைக் கேட்டு மண்டபம் சிரிப்பில் நிறைந்து விடும். நாங்கள் அவரைத் தலைவர் என்று கூப்பிடுறதாலோ என்னவோ, அவரும் தான் தான் வகுப்பில் வயதுபோன ஆள் என்று அடிக்கடி ஞாபகப் படுத்தித், தலைவர் பதவி பெருத்தமானது




தான் என்பதை உறுதிப் படுத்திக் கொள்வார். மாஸ்ரரும் அவரைத் தலைவர் என்று தான் கூப்பிடுவர். "இந்த யோகாசனங்களை செய் யிறதாலை உங்கட வயது இருபது வருடங் கள் முன்னுக்குப் போய்விடும்" என்று மாஸ்ரர் சொன்ன கையோட "அப்ப இருபது வயதானவர் செய்தால் அவருக்கு எத்தனை வயது மாஸ்டர்" என்று சின்னத்தனமான கேள்வி யும் வரும். மாஸ்ரர் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடுக்குமொழி வசனங்களை இடை இடையே அள்ளி வீசுவார். சில வசனங்கள் கேட்க நகைச்சுவையாகவும் சிந்திக்கக் கூடியதாகவும் இருக்கும். வகுப்பு நடக்கும் போது மாஸ்ரர் மண்டப விளக்கு களை அணைப்பதும், போடுவதுமாக இருப்பார். மல்லாந்து கிடக்கும் போது வெளிச்சம் கண்ணைக் குத்தும் என்பதாலோ என்னவோ. பனிக்காலங்களில் காலை வெளிச்சம் மண்டபத்துக்கு நுழையாது. மண்டபம் இருளில் மூழ்கிவிடும். என்னவோ தெரியாது சரியாக வில்லாசனம் செய்யும் போது மாஸ்ரர் வெளிச்சத்தைப் போடுவார். "மாஸ்டர் லைட்றை போட்டுட்டு பாக்கிறார். எல்லோரும் வடிவாகச் செய்யுங்கோ" என்று தலைவர் அறிவுறுத்துவார். கோடை அல்லது பண்டிகைக் காலங்களில் அநேக மாகச் சனிக்கிழமை இரவு பாட்டி இருக்கும். சாமத்தை அண்டித்தான், அநேகமாகச் சாப்பாடு நடக்கும். நன்றாக ஒரு வெட்டு வெட்டிப்போட்டு வந்த நாட்களில் வில்லாசனம் செய்வது பெரும்பாடுதான். அண்டைக்கு என்றுதான் மாஸ்ரரும் பக்கத்திலை வந்து நிற்பார். பாக்கிலை போய் சீசோ ஆடின- மாதிரி, உடம்பை வில்லாக வளைத்து வயிற்றில் நின்று முன்னும் பின்னுமாகவும் இடம் வலமாக ஐப்பது தரம் ஆடுவது என்பது அவ்வளவு சுலபம் அல்ல. "வீட்டிலை செய்யிறியளோ தெரியாது கிழமையிலை இந்த ஒன்றரை மணித்தியாலயத்தையாவது, பாவித்து உங்கட உடம்பைக் கசக்கிப் புழிஞ்சு எடுக்கவேணும்" என்று நாங்கள் வீட்டி லையும் செய்ய வேண்டும் என்பதை அடிக்கடி சொல்லிக் கொள்வார். மருந்துப் பெட்டி என்று ஒரு ஆசனம். அந்த ஆசனம் பழைய காலத்து மருந்துப் பெட்டி போன்ற தோற்றத்தை கொண்டதோ அல்லது அந்த ஆசனத்தை செய்தால் அந்தப் பெட்டியை திறக்கவேண்டிய தேவையே இருக்காதோ என்னவோ. மாஸ்ரர் அடிக்கடி தான் செய்வ தாகவும் தனக்கு தடிமன் காச்சல் கிட்டவும் வராது என்று சந்தோசமாகச் சொல்லிக் கொள்வார். பின்பக்கமாக வளைந்து கால் குதியால் தலையைத் தொடவேண்டும். டான்ஸ் பழகிற பிள்ளைகளுக்கு சிலவேளை ஈசியாக இருக்கும் போல. தலையும் குதியும் ஏதோ கிட்ட கிட்ட இருப்பது போல மாஸ்ரர் "இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சம்" என்று எங்களை உற்சாகப்படுத்துவார்.

நாங்களும் ஏதோ தம் பிடித்து முயற்சிப்பது போல் தோற்றம் கொடுப்போம். அது கிட்டவும் நெருங்காது. சில ஆசனங்களை செய்யும் போது எந்த நோய்க்கு அது பரிகாரமாக அமையும் என்பதையும் மாஸ்ரர் சொல்லத் தவறமாட்டர். அதற்கு அத்தாட்சியாகச் சில பேர் தன்னை தொலைபேசியில் அழைத்து உறுதிப் படுத்துவதாகவும் சொல்லிக் கொள் வார். எங்களுக்கும் ஏதோ நாங்கள் அந்த ஆசனங்களை செய்கிறதாலை அவற்றில் இருந்து தப்பி விட்டது போன்றதொரு சின்ன சந்தோசம். எங்களது சாப்பாடோ என்னவோ எல்லோருக்கும் தொப்பை தான் ஒரு பிரச் சனை. இன்டையோட இந்தத் தொப்பைக்கு ஒரு குட்பை என்று சொல்லித்தான் அநே- கமான ஆசனங் களைச் செய்விப்பார்..

சில ஆசனங்கள் செய்யும்போது, நீண்ட நேரம் தாக்குப் பிடிக்காமல் ஆ.....ஊ...... என்று ஒலி எழுப்புவர்களும் உண்டு. நீண்ட வார விடுமுறையை அண்டிய நாட்களில், ஆட்களின் வருகை குறைவாக இருந்தால் சுவரைப் பார்த்துக் கொண்டு செய்யிற சிங்க ஆசனம் கட்டாயம் இருக்கும். கனபேர் சிங்கம் மாதிரி கர்ச்சிக்கிறம் என்று நினைத்து நாக்கை வெளியே தொங்க போட்டுக்கொ ண்டு, அடித் தொண்டையால் கனைப்பினம். ஊரில் கோடை கால இரவுகளில் கூட்டமாக நின்று சண்டை போடும் நாய்களின் குரைப்புதான் ஞாபகத்துக்கு வரும். வகுப்பு முடியும் தறுவாயில் தான், சிரசாசனம் வரும். அநேகமாக எல்லோரும் தம்மால் முடிந்ததை செய்வார்கள். மாஸ்ரருக்கு அந்த ஆசன த்தை செய்விப்பதில் கொஞ்சம் பயம் போலும். அதனால் அடிக்கடி சொல்லிக் கொள்வார். "நாற்பது வயதுக்கு மேல இதை முயற்சிக்கக் கூடாது என்று சொல்ற வையள் ஆனால் நீங்கள் நீண்ட காலமாக செய்யிற படியால் செய்யலாம் .... "என்று ஆங்கில பத்திரங்களில், வாசிக்க முடியாத படி சிறு எழுத்தில் பொறிக்கப்பட்ட பெறுப்புத் துறப்பு வசனம் போல் எச்சரித்துக் கொள்வார். சிலர் சுவருடன் அணைந்து செய்வார்கள். சிலபேர் கால்களை சுவருக்கு முண்டு குடுத்து ஏதோ தாங்கள்தான் விழப்போற சுவரை முண்டு குடுப்பது போல் நிற்பவர்கள். சிலபேர் இருந்த இடத்தில் தலையைக் குத்தி, அலாக்காக கால்களை தூக்கி தலைக்கு மேல் நிறுத்தி கால்களை அங்குமிங்கும் ஆட்டி விளையாட்டுக் காட்டுவார்கள். மாஸ்டரும் எங்களைத் தட்டிக் கொடுக்க "எல்லோரும் நல்லபடி யாகச் செய்யிறியள்" என்று சொல்லி பயிற்சியை விரைவாக முடித்துக் கொள் வார். இறுதியாக மூச்சுப் பயிற்சி, அதன் பின்பு தியானம். ஒவ்வொரு கிழமையும் விதம் விதமான தியான இசை. அமைதி யான இசையில் மூழ்கி நித்திரை- ரயாகி, குறட்டை சத்தம் போடுபவர்களும் உண்டு. என்னவோ தெரியாது வகுப்பு முடிந்த கையுடன் நாங்கள் வெளியே போக முன், அடுத்த வகுப்புக்கு வாறவையள் முண்டி யடித்துக் கொண்டு உள்ளே வருவி னம். இன்னும் அவையின்ர வகுப்பிலை சீற் பிடிச்சு முடியேல்ல போல இருக்கு. யோகா முடிஞ்ச கையோட, பக்கத்திலை இருக்கிற கடைக்குப் போய் வடையும் றோல்ஸ் ஸும், எண்ணை உறிஞ்சின பிறவுன் நிறக் கடதாசிப் பையிலை வாங்கிக் கொண்டு போறவையும் உண்டு. சில நாட்களில் வகுப்புக்கு வாற வெள்ளை இனத்தவரும் வாங்கிக் கொண்டு போவார். அவருக்கும் எங்கட சாப்பாடு பிடிக்கும் போல. களைப்பிலை தண்ணீர் விடாய் என்று சொல்லி மசாலா கோப்பி வாங்கக் கடைக்கு போய், கண்ணாடி கூட்டுக் குள் கூடச் சுட அடுக்கி இருக்கும் பலகாரங் களில் நாவூறி, வாங்கிச் சாப்பிட்டு போட்டு, அட எண்ணயை சாப்பிட்டு விட்டேனே என்று கவலைப்பட்டு, அடுத்த கிழமை மறக்காமல் தண்ணீர் போத்தலுடன் வந்த சிலரும் உண்டு. எல்லாம் முடித்து வெளியே வரும் போது, ஒன்றரை மணித்தி யலாமாகக் கைக- ளையும் கால்களையும் வளைத்துப் பயிற்சி செய்தும், களைப்புப் பெரிதாகத் தெரியாது. வகுப்பு பம்பலும் சிரிப்புமாகப் போறதாலோ என்னவோ. மாஸ்ரர் சொல்றது போல், வீட்டிலை குறண்டிக் கொண்டு கிடக்காமல், பிரயோச னமாகக் காலத்தைக் கடத்தியது போன்ற உணர்வுதான் எப்பொழுதும் வகுப்பை விட்டு வெளியே வரும் போது மனதில் நிறைந்திருக்கும்.

என்னவோ தெரியாது நாங்கள் செய்யும் எண்பத்தியாறு பயிற்சிகளுக்குள், நான் பயந்த பத்மாசனம், இன்னும் அடங்காதது தான் எனக்கு என்றும் புதிராக இருக்கிறது.




CreativeTravels.ca
Book with Trust and Confidence
குறைந்த விலை
100% உத்தரவாதம்
ஆசியா. அமெரிக்கா. ஐரோப்பா. ஆபிரிக்கா.
அவுஸ்ரேலியா. மத்திய கிழக்கு மற்றும் அனைத்து
நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்
tico.ca
Consumer protection for your travel investment
#50020450
விடுமுறைத் தொகுப்புக்கள் Vacation Packages
விமான சீட்டுக்கள் Flight Tickets
பயண பயணியர் கப்பல் சீட்டுக்கள் Cruise
விடுதிகள் Hotels
வாடகைக் கார்கள் Rental Cars
பயண காப்புறுதி Travel Insurance
சிறப்பு பயண காப்புறுதி Super Visa Insurance
விசா ஏற்பாடுகள் Visa Arrangements
LOWEST PRICE PROMISE
IATA Accredited Agent
647-608-8647
www.CreativeTravels.ca
www.facebook.com/CreativeTravels.ca
info@CreativeTravels.ca
open 7 days a week
7 AM to 10 PM
Colombo: +94 76 708 8647
UK: +44 203 239 8647
Australia: +61 28 005 8647
Jaffna Office: +94 21 227 1647
CreativeTravels.asia (Pvt) Ltd.

# டோணியின் தலைமை! அதில் வியப்புகளுக்கும் திருப்பங்களுக்கும் பஞ்சமில்லை

380

## விளையாட்டுத் தகவல்கள்



**எஸ். கணேஷ்**

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றி-கரமான தலைவரான டோணி, திடீரென ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளின் தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாக அறிவித்தது அனைவ ருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது!

மகேந்திர சிங் டோணி தலைமைப் பொறுப்பை ஏற்றபோது இந்திய கிரிக்கெட் அணி நெருக்கடியில் இருந்தது. 2007 உலகக் கோப்பையில் படுதோல்வி பெற்றிருந்த இந்திய அணி அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டுவந்த நிலையில் டோணி பொறுப்பேற்றார். உலகக் கோப்பைக்குப் பின்னரும் ராகுல் திராவிடே தலைவராக நீடித்தாலும் 2007இல் நடைபெற்ற டி-20 உலகக் கோப்பைப் போட்டிக்கான தலைவர் யார் என்பது பெரும் கேள்விக்குறியாக எழுந்தது. சச்சின் டெண்டுல்கர், திராவிட், சவுரவ் கங்கூலி ஆகிய மூவரும் இதில் ஆடப்போவதில்லை என்று சொல்லிவிட்ட நிலையில் இந்தப் பிரச்சினை பெரிதாக உருவெடுத்தது. திராவிடிடமும் சச்சினிடமும் இது குறித்துத் தனித்தனியே கருத்துக் கேட்கப்பட்டது. இருவரும் சொன்ன ஒரே பெயர் டோணி.

யுவராஜ் சிங், வீரேந்திர சேவாக், ஹர்பஜன் சிங் ஆகிய மூத்த வீரர்கள், தங்கள் தி-றனைச் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்திருந்தார்கள். என்றாலும் இந்தியாவின் இரு பெரும் மட்டையாளர்கள் இளம் வீரர் டே-ாணியைச் சிபாரிசு செய்தார்கள் என்றால் அந்த வயதிலேயே டோணியிடம் வெளிப்பட்ட தலைமைப் பண்புதான் அதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். இந்தச் சிபாரிசு சரியானது என்பதை டோணி நிரூபித்தார். காலமும் நிரூபித்தது. ஐ.பி.எல். போட்டிகளில் ஒரே சமயத்தில் சேவாக், யுவராஜ், ஹர்பஜன், டோணி ஆகியோர் தலைவர்களாக இருந்தபோது அவர்களுடைய தலைமைப் பண்புகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான வாய்ப்பைக் காலம் வழங்கியது. இவர்களில் யார் சிறந்த தலைவராக உருவெடுத்தார் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

### புதிய தலைமை புதிய பயணம்

உலகக் கோப்பையில் முதல் சுற்றிலேயே வெளியேறிய அவமானம் என்னும் சிக்கலான காலகட்டத்தில் இருந்த இந்திய அணி, டோணியின் தலைமையில் அடுத்தடுத்து வெற்றிகளைக் குவித்துத் தலை நிமிர ஆரம்பித்தது. 2007 டி-20 உலகக் கோப்பைப் போட்டியில் தொடங்கிய அந்த வெற்றி ஒருநாள் போட்டிகளுக்கான 2011 உலகக் கோப்பை வெற்றியில் உச்சம் தொட்டது. இன்னொருபுறம் டெஸ்ட் அரங்கில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்தது. 2012-ல் நடந்த சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டியிலும் அணி வெற்றி வாகை சூடியது.



அணி விளையாட்டுகளில் வெற்றி, தோல்வியை முறையே ஒரு தலைவரின் தோள்களின் மீது மாலையாக அல்லது பாறாங்கல்லாக மாற்றிவிடுவது முறையல்ல. அணி எந்த அளவுக்கு நன்றாக இருக்கிறதோ அந்த அளவே தலைவரும் நல்ல தலை-வராக அடையாளம் காணப்படுவார் என்று சொல்லப்படுவது ஆழ்ந்த பொருள் கொண்டது. டோணியின் அணிகளில் மிகச் சிறந்த ஆட்டக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் சிறப்பாகவும் ஆடினார்கள். சச்சின், திராவிட், சேவாக், ஹர்பஜன், யுவராஜ், காம்பீர், ஜாகீர் கான் ஆகியோர் தொடர்ந்து சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார்கள். எனினும், டோணியின் தலைமைப் பண்புகள் வெற்றி, தோல்விகளைத் தாண்டியும் பிரகாசிப்பவை.

### வெற்றி, தோல்வியை மட்டும் வைத்து ஒருவரது தலைமைப் பண்பை மதிப்-பிட்டுவிடக் கூடாது!

வெற்றி, தோல்வியை மட்டும் வைத்து ஒருவரது தலைமைப் பண்பை மதிப்பிட்டுவிடக் கூடாது. 2007 உலகக் கோப்பை இறுதிப் போட்டியின் இறுதி ஓவரை ஜோகீந்தர் சிங்கை வீசச்செய்தது, 2011 இறுதிப் போட்டியில் யுவராஜுக்கு முன்பு களம் இறங்கியது, 2012 இறுதிப் போட்டியில் சேவாகை நீக்கிவிட்டு ரோஹித் ஷர்மாவை நம்பியது ஆகிய முடிவுகள் டோணியின் தலைமைச் சிறப்பின் அடையாளங்களாக முன்னிறுத்தப்படுகின்றன. ஆனால் இந்த மூன்று முடிவுகளுமே வெற்றி பெற்றதால்தான் பாராட்டப்படுகின் றன. ஆட்டத்தில் எந்த உத்தியும் வெற்றிக்கு உத்தரவாதமானதல்ல. ஜோகீந் தரின் பந்தை மிஸ்பா உல் ஹக் ஆடிய விதம் மிகவும் தவறானது. அவர் வேறு மாதிரி ஆடியிருந்தால் முடிவும் வேறு மாதிரி ஆகியிருக்கலாம். அதுபோலவே யுவரா சிறந்த ஃபார்மில் இருந்தபோது, முத்தையா முரளிதரனின் பந்தைத் தன்னால் யுவராஜைக் காட்டிலும் நன்றாக எதிர்கொள்ள முடியும் என்ற கணக்கில் யுவராஜுக்கு முன்னால் இறங்கிய முடிவும் வெற்றிபெற்றதாலேயே பாராட்டப்படுகிறது. எந்த ஒரு மட்டையா-ளரும் எதிர்பாராத விதத்தில் ஆட்டமிழந்துவிடலாம். டோணிக்கும் அது நடந்திருக்கலாம். அப்படி நடந்திருந்தால் அதனாலேயே அந்த முடிவு தவறு என்றாகிவிடாது.

டோணி எடுத்து துணிச்சலான சில முடிவுகள் வெற்றியை தேடித் தந்ததால் அதிகம் நினைவுகூரப்படுகின்றன. அவர் எடுத்த முடிவுகள் வெற்றியை தேடித் தராதபோது அதிகம் விமர்சிக்கப்பட்டன. இவை இரண்டுமே பிழையான அணுகுமுறை. கடைசியில் என்ன நடந்தது எனபதை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு செயல்பாட்டை எடைபோட முடியாது எனில், டே-ாணியின் முக்கியத்துவம் எதில் இருக்கிறது என்னும் கேள்வி எழுகிறது.

டோணி வித்தியாசமாகச் சிந்திக்கிறார். ஒரு நெருக்கடிக்கு ஆகிவந்த தீர்வுகளை மட்டும் கணக்கில் கொள்ளாமல் புதிய தீர்வுகளை அவர் மனம் எப்போதும் நாடுகி றது. இந்த அணுகுமுறைதான் அவரது சிறப்பு. தான் எடுத்த முடிவு எதிர்பார்த்த பலனைத் தந்தபோதும் தராதபோதும் அவர் நிதானம் தவறுவதில்லை. சறுக்கல்களை யும் மீறிப் பரிசோதனை செய்துகொண்டே இருந்தார்.

### பதற்றமடைந்ததில்லை. நம்பிக்கையை இழந்ததில்லை!

நெருக்கடிகளின்போது பதற்றத்துக்கு ஆளாகும் தலைவர்கள் பலரைப் பார்த்திருக்கி-றோம். சிறப்பான அணியை வைத்துக் கொண்டு தொடர்ந்து வெற்றிபெற்றுக் கொண்டிருந்த ஸ்டீவ் வா, ரிக்கி பான்டிங் ஆகியோரும்கூட இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால், அந்த அளவுக்கு வலுவான அணி இல்லாத நிலையிலும் டோணி பொதுவாகப் பதற்றமடைந்ததில்லை. நம்பிக்கையை இழந்ததில்லை.

தன்னை விடவும் பல ஆண்டுகால அனுபவம் வாய்ந்தவர்களுக்குத் தலைமை தாங்கும் பக்குவம் டோணிக்கு இருந்தது. மூத்தோருக்கான மரியாதையை வழங்குவதில் குறை வைக்காத அவர், களத்தில் முடிவுகளை எடுக்கவும் தயங்கியதில்லை. அவரது இடத்தில் வேறு யாரேனும் இருந்திருந்தால் சச்சின், திராவிட் போன்ற யாரேனும் நிழல் தலைவராகச் செயல்படும் நிலை வந்திருக்கலாம். ஆனால், டோணி ஒவ்வொரு கட்டத்திலும் தானே தலைவன் என்பதைக் காட்டினார். அதேசமயம் அடக்கமாகவும் நடந்து கொண்டார். அவுஸ்திரேலியாவில் 2007-08-ல் நடந்த முத்தரப்புப் போட்டியின்போது, தொடர்ந்து மூன்று போட்டிகளில் சச்சின் சரியாக விளையாடாதபோது அவரைப் பற்றி டோணியிடம் கேட்கப்பட்டது. “அவர் 16,000 றன் அடித்திருக்கிறார். நான் இன்னமும் 16,000 பந்துகளைக்கூட எதிர்கொண்ட தில்லை” என்றார் டோணி. அடுத்த ஆட்டங்களில் சச்சின் ஆடிய ஆட்டம்தான் கோப்பையை வெல்லக் காரணமாக அமைந்தது.

அணியிலிருந்து மூத்த வீரர்கள் சிலர் அதிரடியாக நீக்கப்பட்டது குறித்த சர்ச்சை இன்றளவிலும் பேசப்படுகிறது. அதில் டோணிக்கு இருந்திருக்கக்கூடிய பங்கை மறுக்க முடியாது. அதேசமயம், பழைய சாதனை-களைப் பாதுகாப்புக் கவசமாக யாரும் கொள்ள முடியாது என்பதையும் உணர்த்த வேண்டியபொறுப்பு அணித் தலைமைக்கு உண்டு. மூத்த வீரர்களின் ஆட்டத் திறனும், உடல் திறனும் குறைந்து வந்தாலும் அவர்களது சாதனைகளால் ரசிகர்களின் மனதில் அவர்களுக்கு நீங்காத இடம் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு போட்டியும் முக்கியம் என்னும் அணுகுமுறையில் இத்தகைய சலுகைகளுக்கு ஓர் அளவுக்கு மேல் இடமிருக்க முடியாது. தவிர, முடிவெடுக்கும் அதிகாரம் இல்லாமல் தலைவராக இருப்பதில் என்ன பொருள் இருக்கிறது?

அணி வெற்றி பெறும்போது ஆனந்தக் கூத்தாடுவது, தோற்கும்போது உலகமே கைவிட்டுப்போனதுபோல நடந்துகொள்வது ஆகிய இரண்டும் டோணியிடம் கிடையாது. வெற்றி, தோல்வி இரண்டையும் கிட்டத்தட்டச் சமமாக எடுத்துக்கொள்ளும் பக்குவம் அவருக்கு இருக்கிறது. வெற்றிக்கான பெருமையைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் பெருந்தன்மையும் தோல்வியின்போது பழையதைப் பிறர்மீது போடாத குணமும் இருக்கின்றன. வெற்றிக் கொண்டாட்டங்களின்போது டோணி அனேகமாகச் சற்று ஒதுங்கியே இருப்பார். தோல்வியின்போது முன்னால் வந்து நிற்பார்.

### டோணியின் தலைமை குறைகள் அற்றதல்ல?

டோணியின் தலைமை குறைகள் அற்றதல்ல. ரெஸ்ட் போட்டிகளில் விக்கெட் விழாத நிலையில் அவர் அதீதமான தற்காப்பு வியூகத்துக்குள் சென்றுவிடுவார். பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தும் விதத்தில் பல முறை அவரது முடிவுகள் கேள்விக்கு உள்ளாகியிருக்கின்றன. ஒருநாள் போட்டிகளில் செய்ததுபோல ரெஸ்ட்

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)




# செஞ்சீனா...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

### 4. மக்களின் பெரு மண்டபம்

இது ரியானென்மென் சதுக்கத்தின் மேற்குக் கரையில் கட்டப்பட்டுள்ளது. இது அரசாங் கத்தாலும் சீனாவின் பொதுவுடமைக் கட்சி யாலும் சட்ட சபை அலுவல்களுக்கும் சில விழாக்களுக்கும் பயன்படுத்தப்படு கிறது. சீன நாடாமன்றம், மக்களின் தேசிய மாநாடு, சீன மக்களின் அரசியல் ஆலோசனை மாநாடு யாவும் இங்கே நடைபெறுகின்றன. 1982 முதல் சீனப் பொதுவுட மைக்கட்சியின் தேசிய மாநாடு ஒவ்வொரு 5 ஆண்டும் இங்கே நடைபெறுகின்றது. மேலும் இம்மண் டபம் விசேட விழாக்கள், சமூக, அரசியல் அமைப்புக்களின் தேசிய மட்டக் கூட்டங்கள், முன்னாள் தலைவர்களின் நினைவுக் கூட்ட ங்கள் ஆகியவற்றுக்கும் பயன்படுகிறது.

இக்கட்டிடம் சாங்போ என்பவரால் வடி- வமைக்கப்பட்டு செப்ரெம்பர் 1959 இல் திறந்து வைக்கப்பட்டது. இது 10 மாதத்தில் வேலையாட்களாலும் தொண்டர்களாலும் கட்டி முடிக்கப்பட்டது. இதன் தளம் 1,849,239 சதுர அடி பரப்பளவைக் கொண்டது. இது 356 மீற்றர் நீளமும் 206.5 மீற்றர் அகலமும் கொண்டது. இதன் மத்திய பகுதி 45.5 மீற்றர் உயரமானது.

இக்கட்டிடம் மூன்று பகுதிகளைக் கொண்டு ள்ளது.

1. மத்தியபகுதி, பெரும் கேட்போர் கூடம், பிரதான கேட்போர் கூடம், மாநாட்டு மண்டபம், மத்திய மண்டபம், பொன்னிற மண்டபம், பிறமண்டபங்களைச் கொண்டுள்ளது.

2. வட பகுதியில்: அரச விருந்து மண்டபம், அரச விருந்தினர் மண்டபம், வடக்கு மண்டபம், கிழக்கு மண்டபம், மேற்கு மண்டபம், பிற விசாலமான மண்டபங்கள் அமைந்துள்ளன.

3. தெற்குப் பகுதியில் சீன மக்கள் மாநாட்டு நிரந்தர சபையின் காரியாலயம் அமைந்து உள்ளது.

பெரும் கேட்போர் கூடத்தில் கீழ்த்தளத்தில் 3,693 பேரும், மேல்தளத்தில் (மாடியில்) 3,515 பேரும் படிக்கட்டு இருக்கைகளில் 2,518 பேரும், மேடையில் 300 முதல் 500 பேர்வரையும் அமரலாம். எனவே ஒரே நேரத்தில் 10,000 பிரதிநிதிகள் அமரலாம். இதன் உட்புறக்கூரையில் ஏராளமான விளக்குகளும் மத்தியில் பெரிய செந்நிற நட்சத்திரமும் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு கூட்டங்களுக்கும் கலந்து கொள்வோர் எண்ணிக்கைகளுக்கும் ஏற்ப மாற்றியமைக் கக் கூடியவகையில் கேட்டல், பார்த்தல் கருவிகள் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. இத்துடன் பல்வேறு மொழிகளில் சமகால மொழி மாற்ற வசதிகள் கொண்ட ஒரு மொழிக்களமும் அமைக்கப்பட்டுள்ளது.



அரச விருந்து மண்டபத்தின் பரப்பளவு 7,000 சதுர மீற்றர். இது 7,000 விருந்தினரை உபசரிக்கும் வசதிகளைக் கொண்டுள்ளது. ஒரே நேரத்தில் 5,000 பேர் அமர்ந்து உண்ணலாம். (றிச்சாட் நிக்சன் சீனாவுக்கு 1972 இல் சென்றபோது இது நடைபெற்றது) பிரதான கேட்போர் கூடமும், பிறமாநாட்டு மண்டபங்களும் (30 உள்ளன) விருந்தினர் எண்ணிக்கைகளுக்கேற்ப விருந்துகளுக்குப் பாவிக்கப்படுகின்றன.

பெரும் கேட்போர் கூடம், கட்சி மாநாடு களுக்கும் பிற அரச பிரதிநிதிகளுகள் மாநாடுகளுக்கும் பாவிக்கப்படுவதுடன் முக்கிய தலைவர்களின் அரச மரணச்சடங்கு களுக்கும் பாவிக்கப்படுகிறது. மாவோ சேதுங்கின் அரச மரணச்சடங்கு ரியானென் மென் சதுக்கத்தில் நடைபெற்றது. அண்மைக் காலங்களில் சங்கீதக் கச்சேரிகளும் இங்கு நடைபெறுகினறன.

### 5. செங்கியாங்மென்

இது ரியானென்மென் சதுக்கத்தில் தெற்கி லுள்ள வாசல். இது நகரத்தின் உட்புறத் துக்கு வரும் தெற்கு வாசல் பாதுகாப்பு அரணாக விளங்கியது. இது வாசல் வீடு (Gate House) எனவும் அழைக்கப்படுகிறது.

இது 1419 ஆம் ஆண்டில் மிங் அரச பரம்பரைக்காலத்தில் கட்டப்பட்டது. இது வாசல் வீட்டையும், வில்வித்தைக் கோபுரத் தையும் கொண்டிருந்தது. இவை பக்கச் சுவர்களாலும் பக்க வாசல்களாலும் தொடுக் கப்பட்டு ஒரு வாசல் மேலுள்ள அடுக்கு மாளிகை போன்றிருந்தன. அரச நகருக்குள் வரும் வாசல், காப்பரனாக இது விளங்கியது. இதன் வெளிப்புறத்தில் நகரின் முதலாவது தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்டது. இது கியான்மென் நிலையம் என அழைக் கப்பட்டது. கிங் அரச பரம்பரையின் கடைசிக்காலத்தில் 1900 இல் நடைபெற்ற பொக்சர் கலகத்தின் போது இவ்வாசல் கணிசமான வளைவு சிதைவடைந்தது.

1914 இல் இவ்வாசல் கட்டிடம் மீள மைக்கப்பட்டது. 1915 இல் இக்கட்டிடத்தின் பக்க வாசல்கள் இடிக்கப்பட்டன. 1949 இல் நடைபெற்ற சீனா உள்நாட்டுக்கு கலகத்தில் பொதுவுடமைக்கட்சி வெற்றி பெற்றபின் இவ்வாசல் வீட்டில் மக்களின் விடுதலைப் படையினர் பாதுகாப்புப் படையினர் வசித் தனர். பெஜிங் நகரத்தின் வாசல்கள் எல்லா வற்றுள்ளும் மிக உயரமாக விளங்கியது இதுவே (42 மீற்றர்).

பெஜிங் நகர நிலக்கீழ் தொடர்வண்டிப் பாதை அமைக்கப்பட்டபோது (1960) வடக்கு, தெற்கு வாசல்கள் இடிக்கப்பட்டன. ஆனால் செங்யாங்மென் இடிபடாமல் தப்பியது. தற்போது கியான் மென் சாலை இந்த வாசலுக்கும் வில்வித்தைக் கோபுரத் துக்கும் இடையால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கியான்மென் தொடர்வண்டி நிலை- லயமும் இவ்விரு கட்டிடங்களுக்குமிடையில் அமைந்துள்ளது. பெஜிங் நகரின் ஒரு புராதன கட்டிடமாக இது விளங்குகிறது.

(தொடரும்)

(தகவல்கள்- விக்கிப்பீடியா)

# M.S. டோணி...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

பல தோல்விகளை சந்தித்த டோணி கட்டாயம் வெற்றி பெறுவார் என விமானப்பயணத்தின் போது சந்தித்த முன் பின் தெரியாத ஒரு பெண் கூறும் ஊக்குவிக் கும் வசனம் இதற்கு உதாரணமாகும்.



அவரது திறமையை அறிந்து அதை வெளி உலகிற்கு கொண்டுவர முயற்சி செய்யா விட்டாலோ அவர் இவ்வளவு பிரபலமாக வந்து இருக்கமாட்டார் என இப்படம் தெளிவாகக் காட்டுகிறது. கூட இருப்பவர்கள் கூறும் ஊக்குவிக்கும் வார்த்தைகள் ஒருவரை எவ்வளவு தூரம் முன்னேற்ற உதவுகிறது என இப்படத்தில் காணலாம்.

சில சந்தர்ப்பங்களை இழந்த டோணியும் தோல்வியினாலே நம்பிக்கை இழக்காமல் அடுத்த சந்தர்ப்பத்தை பிடித்து முன்னேறு கிறார். ஒருவர் முன்னேற நம்பிக்கையும் விடாமுயற்சியும் அவருக்குத் தேவை என்பதற்கு டோணி ஒரு சிறந்த உதாரணம். இப்படத்தை சிறுவர்களும் பெரியோர்களும் கட்டாயம்

# டோணியின்...

போட்டிகளில் அவர் மட்டை தீர்மான- மாகப் பேசியது மிகவும் அரிது. 20 ஓவர் போட்டிகளில் சிலசமயம் மட்டையாளர் களைக் களமிறக்கிய விதம் கேள்விக் குள்ளானது. மட்டை வீச்சிலோ பந்து வீச்சிலோ யாரையும் மெருகேற்ற அவர் பெரிதாக எந்தப் பங்களிப்பையும் ஆற்றியதாகத் தெரியவில்லை. டோணிக் குத் தன்னு டைய வரையறைகள் தெரி யும். குறிப்பாக மட்டை வீச்சில். எனவே எப்போது, எங்கே தன்னுடைய ஆட்ட த்தை எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்பதில் அவர் மிகவும் துல்லியமாகச் செயல் படுவார். அதனால் தான் 2011-ல் செய்த சாகசத்தைப் போல அடிக்கடி அவர் செய்வதில்லை. சூழ்நிலைக்குத் தகுந்த உத்தி என்பதுதான் அவரது தாரக மந்திரம். இதில் தனிநபர்கள்_ அவர் உள் பட_முக்கியமில்லை. இதுவே அவரது அணுகுமுறை. இந்த அணுகு முறை ஆட்டத்தின் போக்கை அடி- யொற்றி இருக்கும். ஆளுமைகளை அல்ல. டெஸ்ட் போட்டியிலிருந்து வில கும்முடி வையும் ஆட்டத்தின் குறு வடிவங்களுக்கான அணிகளின் தலைமைப் பொறுப் பைத் துறக்கும் முடிவையும் மிகச் சரி யான நேரத்தில் அவர் எடுத்திருப்தைக் கவனிக்க வேண்டும். தன்னுடைய நிலையையும் அணியின் நிலையையும் ஆட்டத்தின் போக்கையும் காலத்தின் கட்டளை- யயும் நன்கு உணர்ந்த ஒருவராலேயே இவ்வளவு துல்லியமாக இத்தகைய முடிவுகளை எடுக்க முடியும். பதறாத பாங்கு, வித்தியாசமான, துணிச் சலான முடிவுகள், பொறுப்பேற்கும் தன்மை, சூழலுக்கேற்ற உத்திகள், ஆகியவற்றை டோணியின் தலைமைப் பண்பின் முத்திரைகளாகச் சொல்லலாம். இந்தியா கண்ட சிறந்த தலைவர் யார் என்பத ற்கான விவாதம் அவ்வளவு எளிதில் முடிந்து விடக்கூடியதல்ல. இந்தக் களத்தில் டைகர் நவாப் கான் பட்டோடி, கபில்தேவ், சவுரவ் கங்கூலி ஆகியோர் டோணிக்கும் பலத்த போட்டியாளர் களாக இருப்பார்கள். ஆனால், டோணி யின் தலைமை இவர்கள் அனை வரைக் காட்டிலும் வசீகரம் மிக்கது. காரணம், அதில் வியப்புகளுக்கும் திருப்பங்களு க்கும் பஞ்சமில்லை.

நகைச்சுவைத் தொடர் 347

# மாசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



வடமாகாண முதலமைச்சர் திரு சி.வி. விக்கினேஸ்வரன் அவர்களின் கனடா வருகை பலருக்கு மனதில் பெரிய குதூகலத்தை உண்டுபண்ணியிருக்கிறது.
உலகர் முருகேசருக்கு நேரடி ஒலிபரப்புப் போல நல்ல தமிழில் விளக்கிக்கொண்டிருந்தார்.



தமிழில் பிழை விட்டால் முருகேசருக்கு பிடிக்காது. மற்றது முருகேசு நீர் சொன்னமாதிரி ஒருவரின் பெயரையும் குறிப்பிடாமல் கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிடாமல் தாக்கிப்பேசாமல் தனது கருத்துக்களை தெளிவாக விளக்கமாகத்தெரிவித்தார்.
இடையிடை என்னால் வரமுடியவில்லையே எனத் தளுதளுத்த குரலில் முருகேசர் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

கனடாவிற்கு ஒரு தமிழமைச்சர் வாறதெண்டா சாதாரண காரியமில்லை முருகேசு.
இங்கிலீசிலை பேசினார், தமிழில் பேசினார். சிங்களமும் தெரியுமாம்.



ரொறொன்ரோவில் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கென பல இடங்களிலும் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், ஊடகவியலாளர் சந்திப்புகள், தமிழ்ப்பகுதிகளுக்கு
அபிவிருத்தி, தொழில் முதலீடு முன்னேற்ற திட்டங்கள்...
நல்லதே நடக்கட்டும்.



சிரித்தாலும் கண்ணீர் வரும், அழுதாலும் கண்ணீர் வரும்....
பாராட்டும் கரகோசமும் வெளியில் தெரியும் பதவி போனபின் (பறிபோனபின்)
மனதுள் அழுவது யாருக்கும் தெரியாது.



அமெரிக்காவின் சரித்திரத்தில் கறுப்பு இனத்தவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றவர் ஒபாமா. 2017 20, ஜனவரியுடன் இவரின் பதவி முடிவடைகிறது. இவர் பதவி விலகுமுன் ஜனவரி 10ஆம் திகதி ஆற்றிய உரையை உலகமக்கள் மிகவும் உன்னிப்பாக நேரிலும் ஒளிபரப்பு சாதனங்களாலும் அவதானித்தனர்.

பிரவேசச்சீட்டுக்கள் 5,000 அமெரிக்க டொலர் என்ற செய்தியைப்பார்த்ததும் செக்கண்புளோர் செல்லம்மா திகைத்துப்போனா. அன்னம்மாக்கா உந்த ஸ்பீச் கள்ளக்கொப்பி 1 டொலருக்கு வீடியோக் கடையளுக்கு வருமோ?

ஐபொட் அகிலாண்டேஸ்வரி சொன்னா செல்லம்மா பேஸ்புக்கிலை இருக்கு. ஆனா இங்கிலீசிலைதான் கிடக்கு என்று சொல்லிச்சிரிச்சா......நானும் 8ஆம் வகுப்பிலை இங்கிலீஸ் பாஸ்மாக்ஸ் எடுத்தனான். இங்கை வந்தும் ஈ.எஸ்.எல் கிறேட் 3 பாஸ்பண்ணினனான் என்று முணுமுணுத்தா.



இதேவேளையில் அமெரிக்கப் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கும் றொனால்ட் ட்றம்பின் செய்தியை ஐபொட் அகிலாண்டேஸ்வரி பார்த்துக்கொண்டிருந்தா.....பாத்தீங்களே உலகண்ணை அமெரிக்க அரசியல் கருணாநிதியின்ரை பொலிசியை பின்பற்றீனம் ஏனெண்டா குடும்ப அரசியலாக்கப்பாக்கிறார்.



ஆட்டிலறி அன்னம்மா உலகரைப்பார்த்துச் சொன்னா...
ஒபாமா சொன்னார் கடவுள் எல்லோரையும் ஆசீர்வதிக்கட்டும் எண்டு.
ட்றம்ப் சொல்லுறார் கடவுளைவிடக் கூடிய வேலை வாய்ப்பை உருவாக்குவது தான் எனது வேலை.
"கோட் பிளெஸ் அமெரிக்கா" செவிமடுத்தனர்



நாட்டியம், தமிழிசை, இசைக்கருவிகள், மின்னிசைக்கருவிகள், தோல் வாத்தியம் என இசையை மெருகூட்டத் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்துக்கொண்டே போகின்றது. மேடைகள், வானொலிகள், தொலைக்காட்சிகளில் ஒருசிலரே முகம் காட்ட முடிகிறது.

பல ஆலயங்களும் ஊர் மன்றங்களும் கலைஞர்களைக் கௌரவிக்கத் தவறுவதில்லை. வரசித்தி ஆலயத்தில் உள்ள இசை அரங்கில் திருவிழாக்கள், முக்கிய சமய விசேட தினங்களில் இசைக்கல்லூரியின் அரங்கேற்றம் செய்த பல கலைஞர்களை முன்னேற்றப்பாதையில் செல்ல சந்தர்ப்பம் அளித்துக் கௌரவப்படுத்தி வருகிறது.



சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்த கதை வரசித்தி இந்துக்கல்லூரி மாணவர்களால் சிறப்பாக நடித்துக் காண்பிக்கப்பட்டது. வசனங்களையும் பாடல்களையும் பிரதிகள் பார்க்காது மனனம் செய்து நடிக்கின்றனர். வருடா வருடம் வரசித்தி இந்து ஆலயம் நடத்தும் சிவத்தமிழ் விழாவில் 100 முதல் 300க்கும் மேற்பட்டவர்கள் நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர்.



கடந்தவாரம் திருவெம்பாவை கடைசிநாள் அன்று பலருக்கும் தெரிந்த மேடை, வானொலி, தொலைக்காட்சி மட்டுமல்லாமல் கனேடியத் தமிழ் திரைப்படங்களில் பாடிவரும் இளம் கலைஞர் மயூரன் தனஞ்செயன் 8ஆவது வருடமாக வரசித்தி ஆலயத்தில் பண்ணோடும் தவில் நாதஸ்வர இசையுடனும் திருவெம்பாவை பாடியது வந்த பக்தர்களின் காதுகளில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கும்.
தமிழும் சமயமும் வளர்க்கும் இளைஞர்களையும் மாணவர்களையும் ஊக்குவிப்போம்.

ஞாபகம் இருக்கிறதா? ஜனவரி 15 - 31.




15. சபரிமலை ஐயப்பன் மகரஜோதி

15. பட்டிப்பொங்கல் (மாட்டுப்பொங்கல்)



17. மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரன் (மருதுார் கோபாலமேனன் ராமச்சந்திரன்) நூற்றாண்டு விழா. பிறந்த தினம் ஜனவரி 17, 1917ஆம் ஆண்டு கண்டியில் (ஹந்தானா) பிறந்தார். (17 ஜனவரி 1917- 24 டிசம்பர் 1984) 1932இல் வெளிவந்த சதி லீலாவதியில் அவர் பெற்ற சம்பளம் நூறு ரூபாய்.

19.சீர்காழி எஸ்.கோவிந்தராஜன் பிறந்தநாள். (1933-1988)
மனிதன் எல்லாம் தெரிந்துகொண்டான் வாழும் வகையை புரிந்துகொண்டான்.

20. இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பமானது.

25. சுன்னாகம் குமாரசாமிப்புலவர் நினைவுதினம்.

30. மகாத்மா காந்தி நினைவு தினம்

30. அபிராமிப்பட்டர் தினம்.

## ஒட்டுமொத்தத் தமிழர்களும் கரமிணைத்துப் போராடி அடிமை விலங்குடைத்தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே!



போரோய்ந்து ஆண்டேழு ஆனாலும் சிங்களத்துப்
பொல்லாத பேரினத்தார் உள்ளமின்னும் இளகவில்லை
வேரறுத்துத் தமிழினத்தைச் சாய்த்தபோதும் விழ்ந்தழியும்
வெந்தவரைத் தேற்றுகின்ற நல்லுள்ளம் தோன்றவில்லை
சீர்குலைந்து தடுமாறி உருக்குலையும் தமிழர்களும்
சேர்ந்தொன்றாய்த் திரண்டெழுந்து விடியலுக்காயுறுதியுடன்
சோர்வுநிலை யகற்றியுள்ளத் துடிப்போடு போராடி
அடிமைவிலங் குடைத்தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே
சுயநலத்தின் வேரறுத்து கரமிணைத்து ஒன்றிணைந்து
மனிதநேயம் வளர்தெடுத்து மனோதிடத்தில் தளர்ந்திடாது
கயவர்களின் சதிவலைக்குள் வீழ்ந்திடாத வலிமையுடன்
கர்மவினை தகர்த்தெறிந்து தார்மீக நெறிசுமந்து
பயமகற்றி அடக்கியாளும் ஆட்சியாளர்க்கு இறுங்காது
பகையெதிர்க்கும் மானமுள்ள விலைபோகாத்தலைமையின்கீழ்
வியக்குமொரு சக்தியாகத் திரண்டெழுந்து போராடி
அடிமைவிலங்குடைத் தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே

தேசியத் தலைமகனின் இறுங்காத ஆண்மையுடன்
தேசத்தின் விலங்குடைக்கப் பேரவையின்பலம்பெருக்கி
தேசியம் காக்குமொரு தன்னாட்சித் தீர்வுக்காய்
தமிழினத்தார் நாமொன்றாய்த்தயங்காது திரண்டெழுந்து
நீசர்களின் இனமழிக்கும் செயல் தகர்த்துத் தாயகத்தில்
நிர்க்கதியாய் இடுக்கண்ணுறும் உறவுகளை மீட்டெடுக்க
பாசத்தின் துடிப்போடு உறவுகள்நாம் போராடி
அடிமை விலங்குடைத்தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே

இராணுவத்தின் இறுக்கத்தில் தாயகத்து உறவுகளும்
நிலமிழந்து, மனையிழந்து, உறவிழந்து, வாழ்விழந்து
வேரறுந்த மரமாகச் சாய்ந்தங்கு சரிகையிலே
புலம்பெயர்ந்த உறவுகளுக்குள் பிரிவினைக்கு இடங்கொடாது
சர்வதேச ஆதரவுக் கொருமனதாய் குரலெழுப்பி
சந்ததியின் நலனுக்காய்த் தன்னாட்சி மீட்டெடுக்க
ஒட்டுமொத்தத் தமிழர்களும் கரமிணைத்துப் போராடி
அடிமைவிலங்குடைத்தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே!

- மாரீசன் -


ஆரோக்கியத்திலும் தரத்திலும் என்றும்
முதலிடம் நிரு பிராண்ட்
தயாரிப்புகளே.
Niru®
Happy
Pongal
நிரு வழங்கும்
பொங்கல்
புதினம்
40 Minuk Acres, Scarborough, ON. M1E 4Y6
Phone: (416) 750-1976
Niru®
Niru
Niru
நிரு®

# MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

**OPEN 7 DAYS A WEEK**
9am-11pm

VISA



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS
NEW TIRES FROM $99
USED TIRES FROM $49.95

## FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV

## BRAKE JOB
STARTING FROM
$199

## WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol

REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95

## TRANSMISSION FLUSH
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK

LEXUS

FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

## CALL SUBAS DIRECT → 416-206-9489

## Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at **www.facebook.com/jrsautotech**

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD.
Design your dreams with us
Special New Year & Pongal Sale
22 கரட் சிங்கப்பூர் தங்க நகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
SPECIALIZING IN ANTIQUE AND STONE JEWELLERY
I.P SILVERHOUSE
I.P GOLDHOUSE
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD
DIAMOND BANDS SPECIALITY BANDS
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
Tel: 905-554-5890
E-mail: ipsilverhouse@hotmail.com

KOENIG PROPERTY MANAGEMENT LTD
We take the stress out of managing your investment property.
416.895.5000 • 1.800.909.7209

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY...
BUYING, SELLING & INVESTING. RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416-670-7436
email: vanyj26@yahoo.ca
www.vanyhomes.ca
LIFE INSURANCE
SUPER VISA
NON MEDICAL
RESP
www.vjsfinancial.ca
Homelife/GTA Realty Inc.
GTA Square, 5215 Finch Ave. East. #203. Toronto ON. M1S 0C2. Bus: 416.321.6969 Fax: 416.321.6963

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All-Stars Realty Inc., Brokerage
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
NO DOWN PAYMENT? கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate.
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at...
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East on Warden)

வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க..
பொன்னம்பலம் மகாலிங்கம்
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive #205 Markham ON. L3S 4N8 Tel: 905.201.9977
*Independently owned and operated

Free Real Estate Class - Call: 416.321.6969

BUY / SELL PROPERTIES IN GTA



MCCOWAN & HWY 401
Bedrooms : 3
Washroom : 2
Asking Price:$299,000



BRAMPTON
Bedrooms : 4
Washroom : 4
Asking Price:$699,990



AJAX
Bedrooms : 4
Washroom : 4
Asking Price:$489,900



OSHAWA
Bedrooms : 3
Washroom : 3
Asking Price:$439,900



PETERBOROUGH
Asking Price:$899,999
BUILDING + BUSINESS



BOWMANVILLE
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$479,900

A. Anton Jeeva, FRI
(Broker)
Contact: 416.575.5055
RE/MAX Dynasty Realty Inc.
Specialized In Power Of Sale Homes & New condos
RE/MAX Dynasty Realty Inc., Brokerage*
8 Shadlock St. #7, Markham ON L3S-3K9
Tel: 905.471.0002
Web: www.antonjeeva.com
E-Mail:anton.jeeva@gmail.com
*Independently Owned & Operated

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

Homes by Natheesh
BUY SELL RENT INVEST with Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
FREE Home Evaluation
FREE Home Staging
FREE Virtual Tour
HomeLife/GTA
For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
647.545.8462
SALES REPRESENTATIVE

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

FOR ALL YOUR MORTGAGES
Pradeepraj Mani
Mortgage Consultant
Cell: 416-997-3862
Dedicated and knowledgeable team...
Provide you with the best solutions
for 1st and 2nd Mortgages!
Our commitment to you is to provide you with the very best...